ஐவர்வந்தால்மோசமல்லோ ஆகாதகாரியங்கள்
என்றுசயிந்தவனும் எண்ணினான்தன்மனதில்
காவலர்கள்வந்தாலே காரியங்களாகாது
கையிலிருந்தகொரு கத்தியைத்தாழவைத்தான்

கடுகவெழுந்தானே கட்டழகன்சயிந்தவனும்
ஐவர்வந்தாற்சேதிசொல்லு மல்லிறைப்போறேன்
இட்டுன்னைபோகவென்றே இன்னேரப்பாதிருந்தேன்
ஐவரையுங்காணேனையா ஆரணங்குத்துரோபதையே
இன்னபொழுதுவேளைவந்து இட்டுக்கொண்டுபோறேனப்பா
ஐவருக்குச்சொல்லி அழைத்துக்கொண்டுபோறேனம்மா
போகவிடமாட்டாரும் போய்வாறேனதன்னைசயிந்த
என்றுமவன்கேட்கவே சொல்லவந்துரோபதையும்
அப்படியேபோகாதுயென்றுதேவியொன்றுசொன்னாள்
விடைபெற்றுசயிந்தவனும் கோபத்தையெழுந்திருந்து
பர்ணசாலைவிட்டிறங்கி பார்வேந்தன்போகலுற்றான்
கடுகநடந்தானே கட்டழகன்சயிந்தவனும்
அழகுரதமேறி அந்தரங்கந்தானடி
அவன் பஞ்சரதமேறி வாரவேளையிலேயும்
போருஞ்சயிந்தவனும் பொன்விளைந்ததேறி
அனேகதூரம்போனபின்பு ஆரணங்குத்துரோபதையாள்
சத்திதனைக்கண்டாளே கட்டழகிபாஞ்சாலி
வைத்துமறந்தானே மன்னவனும் ஆயுதத்தை
இங்கேவைத்துதான்மறந்தானென்றுபவனியெழுந்து
சத்திதனையெடுத்து கடுகநடந்தாளே
அன்றுசயிந்தவனே அனேகதூரம்போகாதே
நில்லுங்காணென்றுசொல்லி வெகுதூரம்போகாதே
என்றுகூடநடந்தாள் கொம்பனையாள்துரோபதையும்
அப்போசயிந்தவனும் பரும்புத்தியில்கொண்டு
அப்பாதிபோலே நடந்தானே அழகாள்
கூடநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
சோரநடந்தாளே தேன்மொழியாள்துரோபதையும்
அன்றுதேவியென்றுசொல்ல அக்கணமேகூச்சலிட்டாள்
அருமையாகசயிந்தவனுக் கப்போதான்கேட்டதுபோல்
திரும்பியவன்பார்த்து தேவிசெயத்திரனை
அவன் சொரிந்துமயங்கிப்பின்பு நிறுத்தினான்தன்ரதத்தை
அப்போதுரோபதையு மருங்கிளிபாமேதுசொல்வாள்
அண்ணாடியவனமே பலனேகதூரம்வந்துவிட்டாய்
ஆயுதத்தைமறந்து அனேகதூரம்வந்தீரே
இந்தாருமென்றாளே ஏலங்குருங்குழலாள்
அப்போசயிந்தவனும் ஆனைமுகமேதுசொல்வான்
எட்டியேதாருமென்றான் இருந்தபடிசயிந்தவனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமேதுசெய்தாள்
ஒருபடியேறிவந்தோ உத்தமியாளிகதாவென்றாள்
அப்போசயிந்தவனும் ஆனைமுகமேதுசொல்வான்
எட்டவில்லைகத்தியென்றான் இன்னங்கொடுப்பதற்கு

மற்றுமொருபடி போசனங்களையாமே திறந்தனே
அப்போதுங்காட்டவில்லை என்றனே துன்முகன்
மூன்றாம்படியேறி பொற்குழலைத்தின்றுகொண்டு
ஆயுதமிக்காவென்றான் ஆனதுரோபதையும்
சமைத்தவளுந்தான் பார்த்து சக்கிரஷ்டமாயிருக்கிலை.
நாம் வந்ததொரு காரியங்கள் வாய்ப்பட்டதென்றுசொல்லி
மெத்தமனமகிழ்ந்து செல்விடைகொண்டுபோக
அவளேறினபோதேயல்லோ எகிறவிட்டான் தன்றதத்தை
காற்றப்பறந்ததுகாண் துன்முகன் தன்றதமும்
போகுதேயந்தராமாய்ப் பொல்லாதகாலத்தில்
தோமாவடி அழுதிதுரோபதையு மேதுசொல்வாள்.
அண்ணசயிந்தவனே அழித்திவ்விதம்விட்டாய்
ஐவர்களுந்தானிருந்தால் அனைத்தவருமுக்கதனுக்கு
பஞ்சவர்களிந்நாளே பழுதுபோலாகுமடிக்கு
திருத்தும்ரதத்தையென்றுள் திருவிதாவேண்டாதகனும்
அப்போது துரோபதையாள் அனைக்குநெஞ்சகலங்கி
சிந்தைதகலங்கியவள் திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மயிலெனையானே துசெய்தாள்
அப்போது துரோபதையாள் அபயக்குரலிட்டாள்
ஐவர்பஞ்சபாண்டவரோ அபயமபயமென்றாள்
ஆகாயவாணியம்மா இல்லைநம்பார்த்திருக்கள்
ஐயன்பிடாரியரே அந்தரதேவதையே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
காளிகளே கூளிகளே வனத்துமட்டிகளே
இந்தவனத்திலிருக்குமிருகங்களே
பாருங்கள்பாருங்கள் பாவியிவன்செய்கிறதை
எல்லாரும்பாருங்கள் இவனுடையதுர்க்குணத்தை
என்னைச்சிறைபிடிக்க எழுந்துகொண்டுபோறானே
பஞ்சவர்க்குத்தானுமையும் பார்த்திருந்தபட்சிகளே
ஐவருக்குந்தானுமையும் ஆகாயவாணியம்மா
நாய்க்குக்கிடைக்குமோ நல்லமுழுத்தேங்காயும்
செரிப்பேனோ உந்தனுக்கு சேருமோதான் தருவேன்
உனக் காவலென்று பாருமே அடிப்பேன்முறத்தாலே
என்றதுரோபதையு மினங்கொடியாளே துசெய்வாள்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிறாள்
மாயவரேசுவாமியென்று மாதுபுலம்புகிறாள்
அப்போதுபஞ்சவர்கள் அரனபூசைதான்முடித்து
அரிபூசைசிவபூசை எல்லாமவர்முடித்து
நடந்தார்கள்பஞ்சவர்கள் ஞாயிறுதித்தாப்போல்
வாரார்கள்பஞ்சவர்கள் வடக்கெழுந்தசூரியன்போல்
பர்ணசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்

அங்கேதான் துரோபதையை ஆரணங்கைக்காணாமல்
காணாமல்பஞ்சவர்கள் கலங்கினார்களாம்
தக்கரிகழ்பெரிய தருமராசேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே விறல்வேந்தாவென்பிறப்பே
நெருப்பிற்பிறந்தவளை நேரவர்மன்தலைமகளை
அக்கினியில்வந்துதித்த அம்பிகைபத்தினியை
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பைங்கிளியாள்தனையே
அழகில்சிறந்தபெண்ணை ஆரணங்கைக்காணேனே
ஆரெடுத்துப்போனாரோ அறியேனேதம்பியரே
எவரெடுத்துப்போனாரோ ஏதுமறியேனே
பார்த்துவாதம்பியென்றார் பாராளுமரசர்
என்றதுகேட்டு எழுந்தார்கள்தம்பியர்கள்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூக்குமிட்டு
ஆயுதங்கள்தானெடுத்து அடவிதனைப்போய்நடந்தார்
தெற்குத்திசையிலே தேர்விசயன்தேடுவரான்
வடக்குத்திசைநோக்கி வாரான்சகாதேவன்
மேற்குத்திசையிலேதான் நகுலனுந்தேடிவாரான்
கிழக்குத்திசைநோக்கி வீமனுந்தேடிவாரான்
அந்தவனங்களிலே ஆருந்தெரியாதபோது
தேடியேகண்டுகொள்ளா திரும்பினான்வீமனவன்
காற்றுவேகமாகவேதான் கடுகிநடந்தான்வீமனவன்
ஓட்டப்போய்த்தான்பிடித்தான் பெலமானரதத்தையவன்
வீமன்கண்டானே மெல்லிநல்லாள் துரோபதையும்
அழுதகண்ணீர்தானுடைத்தாள் ஆயாசமுற்றிருந்தாள்
கைகொடுத்தான்துரோபதைக்கு தரையிறக்கிவிட்டான்
கண்டுவிழுந்தானே காமசயித்தவனும்
பார்த்துமுடிவிழுந்தான் பாவிசயித்தவனும்
இத்தகைக்கண்டவனே திடுக்கிட்டுப்பெரியநொந்து
மூர்ச்சையாய்விழுந்தானே மூடமனசயித்தவனும்
ஒருகையால்காலைத்தூக்கி உதைத்தடித்தான்மண்மேலே
அவனுடையதேர்சட்டமுமதகுதிரைகளும்
சட்டஞ்சட்டமாகவேதான் கழிபோட்டாச்சுதங்கே
தேருழுத்தகுதிரைகளை சேர்ப்பித்தான்மண்மேலே
வெற்றிமதயானை வீமனவனேதான்சொல்வான்
ஏதுபெண்ணேனாணே நற்கொடியேதுரோபதையே
வந்தவனைமன்னவனே வகையாகச்சொல்லென்றான்
அப்போதுரோபதையாள் ஏறணக்குநாண்பார்த்து
அஞ்சிப்பயந்துமவள் அருங்கிளியாளேதுசொல்வாள்
வந்தானேசயித்தவனும் வாருமிருபெண்ணேசொல்லியே
நான் வனமார்வந்துதாரு வயணங்கள்கேட்டதிலே

சொன்னேன்வசனமெல்லாம் தூதாகத் தான்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயுதத்தைத்திறமைக்கான்
மறந்துவிட்டாயென்று மன்னவனோதானெண்ணி
ஆயுதக்கைதனையெடுத்து அன்றுமெல்லோடிவந்தேன்
எட்டிக்கொடுமென்று ஏறிலேவந்தேர்மேலே
ஏறிலேபோகிற எதிரில்விட்டான் தன்கைக்கத
இவ்வளவுசெய்தியென்று விளம்பிக்கொண்டாள் துரோபதையும்
அவ்வார்த்தைதானுகேட்டு அக்காரவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனே துசொல்வான்
காட்டுசெடியிலிக்கி கடிக்கியொடுவந்தான்
மூர்ச்சைதெளிந்தானே முடிமன்னன்சிந்தவனும்
காட்டுக்கொடியாலே கட்டினான்சிந்தவனை
அப்போமதவீமன் அங்காரங்கொண்டவனாம்
தன்காலில்கட்டிக்கொண்டு தானடந்தான்வீமனுமே
பர்ணசாலைதனருகே பாஞ்சாலிகொண்டுவந்தான்
தருமருக்குமுன்னாலே தள்ளிக்கொண்டுவந்தானே
கண்டாரேதர்மராயர் கலனசவீக்கவனை
வாருங்காண்மைத்துனரே வசீகொண்டுநேதடி.
சேதுமேவக்கதெங்கள சிரானாசானைகத்தில்
வந்தவசனமெல்லாம் வாய்திறந்துசொல்லுமென்றார்
தருமர்கேட்டவுடனே தார்வேந்தன்வாய்திறந்து
மாபாவிசெயிந்தவனும் வார்த்தையதனைதுசொல்வான்
உங்களை பார்க்கபிரியமுடன் வந்தேனே பஞ்சவரே
காணமனதாகி வந்தேனே காவலரே
வந்தவிடந்தனிலே உன்னைநான்காணவில்லை
தங்கையைக்கண்டேனே தங்கள்வசனமெல்லாம்
விபரமாய்ச்சொல்லுமென வுடன்பிறந்தாள்கேட்டேன்
அப்போதுரோபதையாள் ஆணவங்கொண்டுசொல்வாள்
வனவாசம்வந்ததொருவரணமெல்லாந் தானுரைத்தாள்
திரியோதினனுரைத்த செய்திகளைதானுரைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அபமானஞ்சகித்தேன்
இருந்தமென்றுசொல்லி பேசிவிட்டுநடந்தேன்
வச்சிராயுதத்தை வைத்துமறந்துவிட்டேன்
கைகிடைக்கக்கொண்டு கடுகவந்தானதன்மையரும்
எட்டிக்கொடுமென்றே ஏவலானதங்கையவள்
அவ்வளவில்வீமன்வந்து அடித்தானேகைதானாலே
இப்படியிலேகயறுகட்டி இழுத்துவந்தான்தங்கள்முன்னே
இவ்வார்த்தைசொல்லி நின்றான்பாவிமுதான்
சாயாப்புமனவரும் தருமனதுகேட்டு
மெத்தமனமுருகி வேந்தரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து

கனிகள்பறித்துகொண்டு கடுகிவாருமென்றார்
அந்தசொல்தான்கேட்டு தனைவருங்கோபமுற்றார்
நகுலசகாதேவராஜாக்கள் கோபமுற்று
கண்கள்சிவந்துமவர் காந்தாளிகோபமுற்று
நெற்றிவிழிசிவக்க நீலவிழிபறக்க
உச்சியிர்துடிக்க உத்தமர்களேதுசொல்வார்
அண்ணாவேவீரசேனும் அடியேங்களுவார்த்தை
துரோபதையைகொண்டுபோக வந்ததொருதோசியர்க்கு
பாவையைகொண்டுபோக வந்ததொருபாதகர்க்கு
போகவிட்டபோதுமெவரோ புகழ்பெரியஅண்ணாவே
ஆக்கினைகள்பண்ணி அனுப்பவேணுமில்லையெனார்
பொல்லாதபாதகனை போகவிடலாகாது
என்றுமவர்சொல்லி எல்லவருமேகோபமாய்
ஆனைத்தாளர்பிறந்தா மன்னருடனேகோபமிட்டார்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
கோபித்தகோபமெல்லாம் குளிர்ந்தமனமுமாக
வெறுத்தவதைபாவமென்பார் வெல்லாதவர்தன்னையென்பார்
படையினிறுத்தோர் கள்ளமென்றுதாமறியார்
பொய்சொல்லாதருமரவர் புண்ணியனுமேதுசொல்வார்
கோபித்துகொண்டாக்கா லாகாதுகொற்றவரே
ஆங்காரமெச்சாது ஆகாதுமாகாது
ஆனவுமுண்டானதெல்லாம் தாங்கிக்கொள்ளப்பா
பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்
மைக்குழலையாசைவந்தவர்க்கும்பிராணம்
கனிகள்பறித்துமே கடுகிவாருமென்றார்
எதிர்த்துபேசவேண்டாம் ஏதுந்தடையுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அண்ணாவை வணங்கி
அஞ்சிப்பயந்துதாழ்ந்தார் அழகானதம்பிமார்கள்
காட்டிற்பறந்தோடி கனிபறித்துவந்து
கொண்டுவந்தளித்தார்கள் கொப்பனைஅண்ணன்கையில்
வாங்கியேதருமரவர் மைத்துனர்புசியுமென்றார்
மனதிற்பயமுடனே வாங்கிபுசித்தானும்
கனிகள்புசித்தவன் கைபூசிக்கொண்டானே
போய்வாருமென்றுமே பொட்டெனவேசரணமிட்டான்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
மைத்துனர்தன்னுடனே மன்னவர்வீமனுங்கூடப்போய்
வழிகூட்டியனுப்பிவிட்டு வாருங்கள்தம்பியென்றார்
அப்படியேசொல்லதென்று அழகானதம்பிமார்கள்
வெற்றிமதயானைவீமனவர்தானெழுந்து
அண்ணனுரைப்படிக்கு அழைத்துவந்தான்சயிந்தவனை

சென்றாரிருவருமாய் சிலஞ்சாமனைபின்பு
போர்வீமனேதுசெய்தான் கோரவழிதனிலே
ஐந்துகுடுமிவைத்து அப்பாலேதலைசிரைத்தான்
மீசைசிரைத்தானே பின்போதுபன்னிரண்டிலே
தாடிசிரைத்தானே தலைபோதுபன்னிரண்டிலே
கரும்புள்ளிசெம்புள்ளி சேர்கழுதைபோட்டுவிட்டான்
செம்புள்ளிகரும்புள்ளி சேர்க்கழுதைபோட்டுவிட்டான்
இப்படியாகவே இவிருக்கும்வேளையிலே
தக்கபுகழ்பெரிய தருமரவர்பார்த்து
அருச்சுனதம்பியரே அண்ணனைக்காணேமே
மைத்துனரைகூட்டிப்போய் வழிவிட்டோருமென்றேன்
போய்நெடும்போதாச்சு புகழ்வீமன்வீமனைத்தான்
வீமனைத்தேடி நீவிரைவில்வந்துசேருமென்றார்
கடுங்காளைவீமனைத்தான் கண்டழைத்துவாருமென்றார்
அப்படியேகல்லவென்று அருச்சுனனுமெழுந்தான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
வில்லெடுத்துக்கைபிடித்து விஜயனும்போய்நடந்தான்
அண்ணரைத்தேடிவந்தான் அருச்சுனராசதுரை
வீமனைப்பார்த்தாரே விஜயனருச்சுனனும்
கண்டானேசயிந்தவனைக் கானேமனமகிழ்ந்து
பார்த்தானேசயிந்தவனைப் பலனாலும்பூரித்து
வீமனைத்தான்பார்த்து விஜயனுமேதுசொல்வான்
என்னமரியாதை செய்தீரென்னண்ணாவே
மட்டையடிமொட்டையிட்டால் மானங்கள்வேண்டாமோ
இருமிருமண்ணேயென்று ஏங்கிடத்தானே
கானகத்திலேநுழைந்து கழுதையொன்றுதான்பிடித்து
மலைக்கழுதைகொண்டுவந்து மன்னனையேற்றினனே
இப்படியாகவேதானிவிருக்கும்வேளையிலே
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
நகுலரைத்தானழைத்து நாகர்களைத்தேடுமென்றார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
கண்டழைத்துவாருமையா காளையிருவர்களை
நாமமுடியான நகுலனதுகேட்டு
அருளருளுமென்னையா அழைத்தோடிவாரேனென்று
தட்டிவரிந்துகட்டி சாமரைப்பூசங்குவிட்டு
ஆயுதங்கைபிடித்து அடவியினிற்போய்புகுந்து
பார்த்தண்ணரைத்தேடிப் பரிநகுலனோடிவந்து
கானகமெல்லாந்தேடிக் கண்டானேயண்ணர்களை
கண்டான்சயிந்தவனுங் சன்னாட்சியானதெல்லாம்
பார்த்தான்சயிந்தவனைப் பாவிக்குவந்துமென்று
சந்தோஷப்பட்டானே சயிந்தவனைக்கண்டவுடன்

வீமாமதகரியேவில்வேந்த பன்னார்களோ
மூவிரண்டுகுடுமிவிட்டு பொட்டையடிக்கிறோ
என்றுதுயகாரம் என்செய்வேன்மைத்துனற்கு
சாணிரைத்துவைக்கு கரியானையுண்டனைந்து
தலைமேலேவைண்டைவைத்து கனிர்ளாக்குவற்றிவைத்தான்
இப்படியாகவே இவிருக்கும்வேளையிலே
அனேகவெகுபொழுது ஆனபிறகு
குருபரவெழுந்து கப்பிரமாத்தானையழைத்து
மூவர்க்கும்போலுமே முடிமன்னராசாக்கள்
இன்னம்வாக்காளேன் என்னபோதாகுறியேன்
தேடியழைத்துவீ சிக்கிரத்தில்வாருமென்றார்
தாயமுடியாளும் சகாதேவன்றானுங்கேட்டு
அப்படியேதானெ பமையழைத்துப்போவாரெனென்று
கை கசவிக்குகட்டி கருப்பச்சைசுற்றிவிட்டு
அர்ப்புவில்லுந்தானெடுத்து ஆனைமுகன்போனாறன்
அப்போதுமோவையும் ஆனைக்குதானெழுந்து
தர்மருக்குஎதிரில்வந்து சாஷ்டாங்கமெசெண்டனிட்டு
காலுக்கட்டப்போவாரேறன் ராசாக்களோர்ந்தேடவென்றான்
தருமரதுகேட்டு நளாசமிஷேதுசொல்வார்
அப்படியேபோய்வாரும் ஆனைக்குதுரோபதையே
சிக்கிரத்தில்வாருமென்று செவைதகதார்தர்மலிங்கம்
கூடெத்தாட்டுத்தாளே ஒப்பஞ்சானாதுரோபதையும்
இருவருமாகவேதா ளிவைசாதுவழிநடந்து
அண்ணர் தேக்கேதேடியேபோ ஆனைமுகன்வந்துவிட்டான்
பானைகற்றில்பழைத்தாண்டாளோ அண்ணர்க்கோ
மைத்துனனைக்கண்டவுடனேசந்தோஷமாகத்தான்பார்த்து
உள்ளக்குளிர்ந்து நிலிக்கிடபுல்லைப்பூரித்து
சகதேவன்புடவைக்கண்ணைப்பூரித்து
பரியானைதார தென்னமைத்துனர்க்குசெய்வேன்காண
கழுதைக்கோரித்துகவென்ன சிக்கிரக்கிட்டான
மூன்றுபடின்னுமரகத்தெரிவேற்றிறன
எருக்கமாலைகொண்டுவந்துமால்கழுத்திலேபோட்டான்
இருந்தவரிசையெல்லாம் விக்ககையாட்சிசொனா
மன்னவர்கள்தன்னருகே வந்துநின்றான்பாஞ்சாலி
அண்ணனைக்கண்டபின் ஆனைமுகனாறுளோ
தமயனைக்கண்டாளே சகதேவனாறுளோ
தாயமுடிவிபரேதீர் தம்போடிபன்னிவியோ
வாள்வில்லுபார்ச்சகாதேவன்தனைக்கொண்டிறோ
கானைகருலமேதிர் கரும்புள்ளிபோட்டிறோ
மூணுருறத்தசகாதேவா மூன்பின்னுமலைத்திறோ
எருக்கமாலைகொண்டுவந்து ...ர் கழுத்திற்போட்டிறோ

என்னமீபாதை அன்னைக்கு தாடைசெரிகிலேன்
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளிபூவைதானைவல்
வானத்தநக்கதிரோன் பாண்டவர்தேவிதான்
ஐவருக்குந்தேவியாள் அழகாதப்பத்தினியாள்
கற்புடையபத்தினியைக் காப்பதுவேயாரால்
இக்கழுதைதனைத்தொட்டவர் கதிகேடானார்கள்
அரவக்கொடியோன்பார்க்க அப்பவேபோயனவும்
ஏறினகழுதை பிரம்சாபமிருக்கவென்று
கட்டவிழ்க்கவந்தெதாரு காவலர்களெல்லாரும்
ஓட்டிக்கொண்டுபோகவென் றுதர்மபுத்ரசாபமிட்டான்
என் வங்கிஷத்தார்தொட்டால் வாசக்கழுதைவிட்டுவிட
காட்டுக்கழுதையிது கதிகெடவேதானிகே
மற்றவர்கள்தொட்டாலே விசிதுக்கொண்டோடவென
இப்படிக்குசொல்லியல்லோ யிட்டான்பெருஞ்சாபம்
சாபங்கொடுத்தானே தருமர்பெருந்தகையவன
இப்படியாகசொல்லி இருந்தானேதுரோபதையும்
அடித்துதூக்கினாற் அந்தசமித்தனமே
துரியனுக்குசொன்னதுபோல் தாக்கினாற்சமித்தவனை
வருகுதே அக்கழுதை வனபாகவனைதாண்டி
தான்விட்டுவந்தெதாரு தன்னாடையசெனாயண்டை
வந்துகலந்தானே வாசக்கழுதைதனைனுடனே
கண்டாரேசேனையர்கள் கண்கள்கொண்டிக்கொள்ளாமல்
பார்த்தாரேசமித்தவனைப் பார்வைகொண்டிக்கொள்ளாமல்
இதுவென்னவதிசயங்க ளென்றேசற்றேகோவென்று
கட்டையவிழ்க்கவென்று காவலர்களோடிவந்து
தொட்டுவிசிக்கவேதான் ஓட்டிக்கொண்டுபோனார்கள்
ஓட்டிக்கொண்டுசேனையுட உத்தமனைப்போய்ச்சேர்ந்தான்
அக்ரமனசேனையுடன் ஆனைமுகனைபோகத்தான்
காடுஞ்செடிதாண்டி கரிபல்லதரை தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி பதிபலனாதாண்டி
அஸ்தினாபுரமதனில் அடித்ததுஅக்கழுதை
கடையுங்கடைத்தெருவும் கழுதைகட்டுகையிலே
கழுதையைத்தொட்டவர்கள் குடுத்தேகூடவாருர்
பட்டணத்திலெல்லவரும் பரிவாகப்பார்த்தார்கள
என்ன அதிசயங்க ளென்பார்களெல்லவரும்
மாடத்தில்மண்டபத்தில் வந்தேறிப்பார்த்தார்கள
கோபுரத்திலேறிநின்று குதூகலிக்கப்போரும்
சொல்லிச்சிரிப்போரும் சீச்சீச்சியென்போரும்
இவனுக்குஇக்கழுதை ஏதென்றுசொல்வோரும்
சாமர்த்திராதிபியன் சதிசெய்தானென்போரும்

இப்படியாக இவர்களுஞ்சொல்லையிலே
மற்றுமொருவர்வந்து வாய்திறந்தங்கேதுசொல்வேன்
துரியனுடசொற்கேட்டு திரௌபதையைக்கொண்டுவர
போனதேனானைத்திற் போர்மன்னராசரண்டை
வேசிக்காசெல்லவுமிலே ஆரணங்கைக்கொண்டுசென்றுன்
அப்போ திரௌபதையு மய்யய்யயென்றள்
அபயக்குரல்கேட்டு இவர்களுமோடிவந்தார்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
மல்லினைவைக்கொண்டுபோக வந்தகொருபாவிதனை
விடலாகாதென்றுசொல்லி வீமன்மனதிலெண்ணி
அடையாளம்பண்ணவி யருப்பிருஷ் துரியனண்டை
என்றுமவர்கள்சொல்லி யிருக்கின்றவேளையிலே
அந்தக்கருதாண்டி அப்பாலேபோனுனே
மாடத்தெருதாண்டி மன்னவர்வீதிவிட்டு
துரியோதனனிருக்கும் சிம்மாசனத்தருகே
வந்துதுஅக்கமாக மகாராசன்முன்னாலே
அம்மாள்தானங்கேபோக ஆச்சரியப்பட்டார்கள்
துரியோதனன்கண்டு சிங்காதனத்தைவிட்டு
உன்னைக்கலக்கியதாரோ ஓடிவந்தான்சயிந்தனண்டை
இதற்கென்னவாரமெய்த்தா யிருந்துகொண்டேபோகுது
துரியோதனனவனும் அப்போபாஞ்சாலியேன்
எல்லோருந்தமக்குள் ஒருதுனிக்காமனை
வேண்டாமென்றும் சொல்லவேதுரியோதனன்
அப்பதிவிரதையைப் பார்த்தார்தங்கள்முன்னே
அந்நேரந்தமக்கு வந்தவர்களுந்தான்பார்த்து
கண்டிவென்றுதான்சிரித்தார் கட்டழகரெல்லோரும்
சிரித்ததைத்தாம்பார்த்து திரௌபதைசொல்லுகிறாள்
சிக்கடையிலேசிரித்தோம் சிபேசப்பேசிரித்தோம்
என்றவர்கள்சொல்லி விவாருதிசேர்வந்து
தம்பிமார்கள்லோரும் தமதுசுற்றுக்கைகொடுத்தார்
அக்கண்டபேர்களெல்லாம் அச்சமுற்றுதவித்திடும்
அப்போதவர்களெல்லாரும் அதைநிறுத்திக்கேட்டு
இவையெல்லாம்தெய்வமென்று அல்லவரும்புகழ்புனைவில்
அவ்விருத்தாசங்க ளானதொங்கதிகள்
பார்த்தவர்கள்செய்த பஞ்சவர்துரைகளெல்லாம்
இப்படியாகவே இவர்கள்பின்பாடகிலே
தாயுமுடனந்தந்த அச்சாரவர்முடிவந்து
கைகொள்ளடைக்கும் கர்ணனாக்கண்காட்டி
சர்ப்பக்கொடியோனுடனே தம்பிமாரானவரும்
சாயாம்புநியவி கவிந்தவரானவரும்
மற்றுமுள்ளமன்னரும் மகுடமுடிராசர்களும்

இன்னஞ்சிலசேனைகளும் எல்லோருமொன்றாக
காட்டுக்கழுதையுடன் கலந்துமவரோடிருர்
நாம்-கண்டுசும்மாவிருக்கக் காரியங்களல்லவென்றார்
பார்த்திருப்போமென்றால் பரிதாபந்தோணுதையா
இதுக்கொருயோசனைகள் யியம்புங்காண்மன்னவரே
அப்போதுகர்ணனுமே ஆணழகர்வதுசொல்வார்
துரோபதையைச்சொன்ன தோஷமிதுகாணும்
பத்தினிகைபேசினதோர் பாவமதுகாணும்
என்றுசொல்கர்ணனுமே யாவரையுந்தான்பார்த்து
அப்போதுகர்ணனுமே அனைவரையுந்தான்பார்த்து
குலுங்கநகைத்து கொப்பெனவேஓடிவந்து
பாரளந்தமாயன் இருப்பாதமனதிலெண்ணி
பெருமாள்துணையென்று பிடித்தானே தன்கையில்
கடுகியிழுத்தானே கர்ணமகாராஜன்
கழுதையைக்கட்டி அங்கேயிறக்குமென்றான்
அதுகண்டபேர்களும் அல்லைருங்கையைவிட்டார்
அப்போசயிந்தவனும் அங்கேயிறங்கிவிட்டான்
திரியோதிரன்முதலாய்ச் சேனையெல்லாம்வந்தார்கள்
அவரவர்களாசனத்தி லனைவோரும்வீற்றிருந்தார்
அம்பலவாசலிலே அழைத்துவந்தார்சபைதனிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரனுசன்
மைத்துனரைப்பார்த்து மகாராசனேதுசொல்வான்
கோதைதுரோபதையை கொண்டுவரப்போனீரே
மொட்டையடிபொட்டையிட்டு வாகனத்தின்மேலேற்றி
அனுப்பினாரார்காணு மாணழகாசொல்லுமென்றான்
அவன்-பேசப்பலனுமின்று பின்வேந்தனேதுசொல்வான்
போனதும்வந்ததுவும் புதுமைநடந்ததுவும்
அங்கேநடந்தகொரு ஆச்சரியந்தானுரைத்தான்
தேசத்தையாளும் திரியோதிரன்பார்த்து
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தான்
வரிசிந்துராஜனுமே மைத்துனற்கேதுசொல்வான்
வெற்றிமதயானை வீமனைக்கொல்லவென்று
பாமனைநோக்கியே பாரதவசுபண்ணி.
வீமனைகொல்லவென்று வேணவரமெற்றுவாறேன்
என்றுநடந்தானே இயலானசிந்தையுடன்
தெற்குக்கேதுதாண்டி சேராவிதிவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளமுமங்கே அதிகவனந்தாண்டி
மகாமுனிகள்தபசுபண்ணும் மாயமலைமேலே
தானுந்தபசுபண்ணான் தாமமுடியானும்
ஆதிசிவனையல்லோ அடிபணிந்தானினைந்து

அருந்தவசுபண்ணினானே அந்தசெயிந்தவனும்
அப்போபரமசிவன் அவனுக்கெதிரில்வந்து
என்னவரம்வேணுமென்று எந்தனைக்கேளுமென்றார்
அப்போசயிந்தவனும் அநேகவரங்கேட்டான்
கேட்டவரமெல்லாம் கிருபையாய்தான்கொடுத்தார்
ஆதிசிவன்கையிலே அதிகவரம்பெறுபெற்றான்
வீமனைக்கொல்லவென்று வேணவரங்கள்பெற்றான்
கெதைதொண்டைமாலையுங் கேட்டுமெய்ப்பெறுபெற்றான்
வரங்களைப்பெறுபெற்று வந்தானேசயிந்தவனும்
அஸ்தினபுரத்தே ஆனைமுகன்போகவென்று
மகாதபசுபண்ணதொரு மாமலையைவிட்டிறங்கி
நடந்தானேசயிந்தவனும் நாலுதிக்குந்தானதிர
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளங்களுமே அதிகவனந்தான்தாண்டி
வேங்கைபடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொக்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
நாங்கிலடர்ந்தவனம் முல்லைமல்லிப்பூத்தவனம்
வாந்தும்புலிகரடி இருக்கும்வனந்தாண்டி
மலைப்பாம்புகுடியிருக்கும் மல்லர்வனந்தாண்டி
இருளர்குடியிருக்கும் இருண்டவனந்தாண்டி
கள்ளர்குடியிருக்கும் கனத்தவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி பிளக்கோப்புதான்தாண்டி
வலமாய்வனக்காடு வந்துவிட்டானத்திபுரம்
அத்திபுரத்தே ஆனைமுகன்போய்ச்சேர்ந்தான்
தென்னமுடிவேந்தன் துரியோதனனிருக்கும்
சபையிற்சிம்மாதனத்தில் சயிந்தவனும்வந்தானே
மகாராசன்கொண்டவனும் மைத்துனரைத்தான்பார்த்து
அரவக்கொடியோனும் அத்தானைத்தான்பார்த்து
கடுகவேதானெழுந்து கைகொடுத்துதான்தழுவி
ஆரடாமந்திரியே அங்கிருக்குஞ்சேவகரே
சயிந்தவனுக்கிருக்கத் தங்காசனம்போட்டு
ஏவல்பணிசெய்கிறவர் எல்லவருந்தானேகேட்டு
சொல்லப்பெற்றேனென்றுமன்னர் அருக்களமூழ்திருந்து
கூறப்பெற்றேனென்றுசொல்லி முப்பிட்டெழுந்திருந்து
சேவகரொத்தலைத்தர் சிம்மாதனமிட்டார்
அப்போதுரியோதனன் அத்தானைதான்பார்த்து
வந்ததென்னநேரமென் பிரியமைத்துனரே
இட்டசிம்மாதனத்தில் எதிரவன்வீற்றிரென்றான்
அப்போசயிந்தவனும் ஆறெழுமுகமன்னன்
இட்டதொருசிம்மாதனம் எதிரவன்வீற்றிருந்தான்
அப்போதுரியோதனன் ஆனைமுகனேதுசொல்வான்

கானகங்கள்போனீரோ சுத்தானைக்கண்டீரோ
சுத்தானைக்கண்டீரோ வரத்தரம்பெற்றீரோ
இவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்பெற்றீரோ
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்பெற்றீரோ
என்றன்மனங்குளிர எனக்கறியச்சொல்லுமென்றான்
அப் பாசயிந்தவனும் ஆனைமுகனேதுசொல்வான்
போனதும்வந்ததும் புனிதனைக்கண்டதும்
இவரையுங்கொல்லவென்று ஆனவரம்பெற்றதும்
நாலிரண்டுவார்த்தைகளாய் நடத்தினன் சயிந்தவனும்
கேட்டுமனமகிழ்ந்தான் கீர்த்திபெற்றீரென்றுசொல்லி
வெற்றிபெற்றீரென்று வேந்தன்மகிழ்ந்திருந்தான்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றாவதுவருஷம் முடிந்ததுமன்னவர்க்கு

மூன்றாவது முருக்கமகாரிஷிவனம் முற்றிற்று.

௪-வது காளமகாரிஷிவனம்.

நான்காவதுவருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
முருக்கமகாரிஷிவனத்தை முடிமன்னர்தான்தாண்டி
கூடைதலைமேலே குடிவாழ்க்கைசாமானதில்
சோலிவைத்துசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசிமாடு வனவாசங்குடித்தனமாம்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுங்கணைதாண்டி அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் குடிவைத்தார்பஞ்சவர்கள்
அவ்வனத்திற்போய்ச்சேர்ந்தார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பச்சைதழையொடித்து பர்ணசாலையுண்டுபண்ணினார்
ஓரெக்குபர்ணசாலை உண்டுபண்ணினார்பஞ்சவர்கள்
மூன்றுக்குபர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணினார்
இந்துக்குபர்ணசாலை ஆனைமுகருண்டுபண்ணினார்
பர்ணசாலைமேலேபல்லோர பஞ்சவர்குடித்தனமாய்
மாதுதிரௌபதையும் மன்னர்பஞ்சபாண்டவரும்
காயுங்கனியுந்தின்று காலங்கழிக்கிறார்கள்
அவ்வனத்திற்பஞ்சவர்கள் அவரிருக்கும்வேளையிலே
மாளரக்கொண்டதொரு மகாராசனைதுசெய்தான்
அரவக்கொடியோனும் அங்கவனேதுசொல்வான்
சபையன்னிறைந்திருக்க சர்ப்பக்கொடியோனும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை

காந்தவனத்தி லிருக்கிறுரென் றறியேன்
காளிபோண்டாள் கயிலைதனைவேதாவினி
இவரையுந்தேடி அவரிருக்குந்தாவிந்து
தேடியேபார்த்து திரும்பிவந்துசேருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருகிருந்ததூதர்கள்
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்தார்கள்
கூறிப்பெற்றோமென்று கும்பிட்டெழுந்து
அஸ்தினாபுரிதாண்டி ஆரணியந்தேடிவந்தார்
காடுமேடுகளிலும் கடுமலைதேடிவாரார்
நிசாசவனத்தனிலே தேடுறார்பஞ்சவரை
அங்குமிங்குமலையும் அப்பாலேதேடிவாரார்
நைமிசவனத்தில் கவமாகத்தேடிவாருர்
அங்கிருந்தேதேடுகுர்கள் அப்பாலேதேடிவாருர்
துருக்கமகாரிஷிவனத்தே நடமன்னர்தேடிவாரார்
அங்கெங்கும்காணவில்லை இவர்பஞ்சபாண்டவரை
காமகாரிஷிவனத்தே ஓடியேவந்தார்கள்
காமகாரிஷிவனத்தில் காவலர்கள்பஞ்சவரை
பாஞ்சாலிமேனகைப் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்கிறுரென்றறிந்து வழிவழிநடந்தார்
காடுமேடுதாண்டி கஸ்திபுரம்போனார்கள்
ஆற்றுமணல்தாண்டி அஸ்தினாபோய்வந்தார்
மகாராசன்வீற்றிருக்கு மண்டபந்தனில்வந்தார்
திரியோதனனிருக்கும் செய்யசபைமுன்னேவந்து
அரசனைநீபணிந்து அடிவணங்கிக்கொண்டனிட்டார்
கண்டுதிரியோதனன் கட்டழகனேதுசொல்வான்
பார்த்துத்திரியோதனன் பாராமன்னனேதுசொல்வான்
போனீரேதூதர்களே புதுமையென்னசொல்லுமென்றார்
இவரைத்தேடியே ஆரணியம்போனோமே
காமகரிஷிவனத்தில் கண்டோமேபஞ்சவரை
பாஞ்சாலிமேனகைப் பஞ்சவரைக்கண்டோமே
என்றுசொல்லத்தானேகேட்டு எரிதாகங்கொண்டவனும்
கன்னன்சொன்னதுபோல சந்தானப்பட்டவனும்
மாமனைத்தானழைத்து மாமனேதுசொல்வான்
இன்னமும்பஞ்சவர்கள் இருக்கிறார்காணகத்தில்
மகாரசபஞ்சவர்கள் வனவாசமிருக்கிறார்கள்
தம்பிப்பிறந்தாரோடு தாரணியமன்னவரோ
பக்குவமாய்காரம் பாதிநாடாளவேரோ
கல்வியதாருடனும் விக்கினமகப்பார்க்கவேணும்
இவரையுங்கொல்லுதற்கு ஆலோசனைசொல்லுமென்றான்
மாமனேவிதுரருக்கு வார்த்தையுரையுமென்றான்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மருகனுக்கு

சாமத்துரோபெயன் சகுனிசமித்துரைப்பான்
கொல்லிக்குப்பல்லி குடிக்குரகுலியக்கேல
சூரியனைக்கால்கெடுக்கச் சொல்லுகிறான்போதனைகள்
ஆப்பாமருமகனே இவனையுங்கொல்லவென்றான்
கொடுக்குட்காளமகாரிஷியை நோக்கித்தயவ்பண்ணினானே
அருந்தவசுபண்ணினானே அந்தமுனியர்பிடியார்
இவனைக்கொல்லவென்று அவனைமறக்கேட்டான்
நல்லதென்றுசொன்னானே சாடெர்வாறென்றப்பா
நமிக்கெரியவர்காண் சாமிக்கொப்பானவர்காண்
வரத்திற்பெரியவர்காண் மகாதேவர்க்கொப்பானவர்
அவராலேயாகுமப்பா இவனையுங்கொல்லுகற்கு
உன்னாலேயானமட்டு முந்தமனையாகுமென்றான்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தான்துரியோதனன்
உக்கிரமுடனெழுந்து ஒருவனுமாய்ப்போனானே
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனையுமப்போ அரியவனந்தாண்டி
ஆரணியத்தனிலே ஆலக்கொடிபோலும்
வந்துநிற்றுமவன் மகாதபசுபண்ணுகிறான்
காளமகாமுனிவரைக் கருதிமனதிலெண்ணி
அருந்தவசுபண்ணினானே ஆலக்கொடிபோலும்
வெகுதபசுபண்ணினான் வேத்தனைக்கொல்லவென்று
பாவிதபசுபண்ணினான் பஞ்சவரைக்கொல்லவென்று
இப்படியாய்த்தவமிருந்தான் எதிராகக்கொண்டவனும்
அப்போமகாமுனிவர் மகிழ்ந்தார்தவத்தினையே
சடையுஞ்சடைமுடியும் சம்பிரமனைப்போலாக
இவருடைசடைமுடியும் கைலாசனைப்போலாக
காலிற்செருப்புடனும் கைப்பிரம்பவனுடனும்
துரியோதனனுக்கெ நேரேவந்தனரே
கண்டதுரியோதனனும் கைகொண்டுவந்தனனே
பார்த்துதுரியோதனனும் பற்றுமிக்கதெண்டனிட்டு
முத்தமிடுமென்றான் முனிக்கெதிரில்வந்து
தத்திவலம்வந்து தொழுதேகெவிழுந்தனிட்டான்
முக்காலவலம்வந்து முடியாரத்தெண்டனிட்டான்
நாற்காலவலம்வந்து நமஸ்காரித்தெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்து கட்டியகாலோடும்
வாய்புதைத்துநின்றானே மன்னவன்துரியோதனன்
காளமகாமுனியுங் கண்டுமனங்குளிர்ந்து
சிந்தைமனங்குளிர்ந்து செந்தனையுங்கூர்ந்து
சந்தோஷமானாரே சாமிபெரியவரும்
மெத்தமகிழ்ந்தவரும் வேந்தனைப்பார்த்துரைப்பார்
துர்க்குணமகராசனே அரசர்க்குநாயகனே

சூதுக்காய்வைத்தாய்நீ இக்குதையப்பன் றனிறுப
சங்கிலிவினைத்தாய்நீ சதுசுருமென்றார்
மனநிலிவினத்தனிதல்லாம் மன்னவனேனென்றுமென்றார்
பொன்னெல்லாந்தோற்றோம் போர்த்தகையென்றுமென்று
அப்போதுதுரியோதனன் அனுழுகன்தான்பார்த்து
சர்ப்பக்கொடியோனும் மங்கைமனமகிழ்ந்து
துண்டெனிறேர்கேகு படிவேனெறுர்விண்ணைப்பம்
மன்சாயிவேதுவைபா மெத்தநாடவிண்ணைப்பம்
அஞ்சிருபுரவண்டை யாவர்கொடியோனும்
நெஞ்சுவைபாண்டவரெறு திரிசேத்திரமென்பார்
மத்தவனைக்குமாரல் வைத்தேனுக்கான
தம்டெனைவிகர்க்கேன் கவியைசொல்லுகிறேன்
பஞ்சிலைகாளி பாஞ்சாலன்தான்பூத்தி
சஞ்சுவுப்புகையானி பிருத்துவிராசத்தாரி
மத்தப்பகையானம் பேசனைபஞ்சவர்கள்
பாண்டவராசான் பெற்றெடுத்தபஞ்சவர்கள்
இப்போதுதங்கள் மனத்துக்கிரையபஞ்சவர்கள்
இவளைக்கொள்ள அபிமானமெத்தவுண்டு
வினைப்புக்கொண்டுமே அனுமென்றசெயத்தை
அவர்கள்கொண்டுத்து அதுபோலுனதாது
பரமேவையாருமென்று படிமாமக்களைத்தழைத்தேன்
அனைவாமேதுவந்து அபிமானத்தாருமென்றான்
பஞ்சவனைக்கொண்டாய்ந்து பவத்தவத்தாருமைபா
அவிகைசசுறுமைகோர் அரசனைப்பண்ணியிருந்தேன்
கெஞ்சுமொழிநேர்த்தன் பலகுறவிக்கேனுண்டவிர
இந்தவாமெனைத்து சக்திமிவீர்கள்தத்தவே
சொல்லவைமெனக்கு மொத்தத்துணைவோனுமையா
மன்றுடைதம்பரிந்தாவின பாம்புக்கொடியோனும்
அந்தமகாமுனிய வரமனதுசான்றுணர்ந்து
காளமகாமுனியும் கழியமனமகிழ்ந்து
சுக்கிரவையப்பட்டமேசு சரிசங்கள்பூரித்தார்
பெருந்தவித்தாரேசு கொத்தமாமுனியும்
மனதுக்கேனைத்தபடி மன்னவனேசெய்கிறேனென்
மெச்சத்தக்கதேற்றபடி செய்கேன்சி தருசாமே
விவாகபுக்கொண்டுதான் சப்பணவியோமேபேறு
பஞ்சவரைக்கொண்டு பருவமையானைப்பேண
மேனாதனைக்காக அதிசியவைத்தானும்
பஞ்சவரைக்காக்கப் பாரைக்தரப்பதானும்
காலம்பண்டித மந்திரமன்னவத்தானும்
மெற்றியவினைதனக் கேனைத்தானவக்கதானும்
தேவர்க்கதிபதியாம் தேவேந்திரனைத்தானும்

இவர்களைப்போமென்று எமனையன்வந்தாலும்
எக்கவிதத்தாலு மிறக்கவகைபண்ணுவேனென்
என்றுவரங்கொடுத்தார் எரிசரகட்கொண்டவர்க்கு
அப்போதுரியோதனன் ஆனந்தமாகவே
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே விகடாகட்கொண்டவனும்
மனமிகப்பூரித்து மகாகன்போய்விட்டான்
காளமகாமுனியுங் கடுகிலைக்கெவர்ந்தார்
காளமகாரிஷி யிவரைக்கொல்லநினைத்தது
அப்போதுமகாமுனியு மாலோசனைபண்ணி
வேதாளந்தான்பிறக்க வேள்விதனைவளர்க்க
அக்கினிகுண்டம்வெட்டி அனலைவளர்த்தனரே
பாதாளமுதிவெட்டி பகவாலமுட்டினரே
மந்திரத்தாலேயல்லோ வாவென்றாரேவதாளத்தை
ஆயன்பெருமானு மவ்வளவுந்தானறிந்தார்
ஏழுலகமாளும்மின்ற எம்பெருமானென்னசொல்வார்
பாவமெனத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
பண்ணுப்பகையாளி பாதிரான்தாயாதி
என்றும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எக்கவிதத்திலேயு மிறக்கவகைபண்ணுகிறான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்துராதி
இவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வரலாச்சே
செல்வத்திரவியங்கள் சேதித்துப்போகுதே
தோளிற்பூமாலை தோடழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனக்குலைந்துபோகுதே
உள்ளங்கைசெல்வப்பழம் உருக்குலைந்துபோகுதே
தம்பிபஞ்சவர்கள் நாசமாகப்போகிறார்
தம்பிமார்களைத்தான் நாமப்போய்காக்கவேணும்
கைமோசம்வந்ததென்று கரியமால்தானினைந்து
எம்பெருமான் பஞ்சவரைக்காப்பதற்கு எமபுரம்போனது
அப்போதெம்பெருமா னாயிரமூர்த்திருந்து
வட்டமாகருடனேறி வருகிறார்மாயவனார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுங்குளந்தாண்டி அடிமலைதாண்டி
கிள்ளைநழுக்கொரு செடியும்மலைதாண்டி
வேலையடர்ந்தவனம் வெய்யில்புக்காவனம்
சோக்குபெருத்தவனம் கொன்றைநகைபூத்தவனம்
இளமயிலைப்போலே பிசைத்தவருங்காவேரி
வடமலைசக்கர வனமெல்லாந்தாண்டி
எமபுரத்தேடியே எம்பெருமானோடிவந்தார்
எமனுக்கெதிராக எம்பெருமான்வந்துநின்றார்

ஏமதர்மராசனவன் எம்பெருமானைக்கண்டு
கபிமாலைப்பார்த்து மகிழ்வெழுந்திருந்து
பரமன்பெருமானை வந்தனம்செய்கிறான்
ஏவலாளோடி யெடுத்துவைக்கச் சிம்மாதனம்
இட்டதோராசனத்தில் எம்பெருமான் வீற்றிருந்தார்
அப்போதெம்பெருமான் அரியாசனமெழுந்து
சிம்மாதனமேறி ஸ்ரீராமர் வீற்றிருந்தார்
வேர்க்க விருவிருக்க வேந்தர்கள் வீற்றிருந்தார்
அப்போ துரியோதனன் ஆரைப்பார்த்துரைப்பான்
என்றுனக்கிப்பாவனே ஏனைச்சிறப்புச்சொல்லுமென்றார்
மாதவனையாக எம்பெருமான் வீற்றிருக்கிறீர்
வந்தகாரியத்தை வாய்திறந்து சொல்லுமென்றான்
மாயன்பெருமானும் வார்த்தைதனைச் சொல்வார்
ஐவர்பஞ்சபாண்டவர் அடிமையாயாகிறார்
இருந்துவிடாமைக்கு இயன்றவர்பஞ்சவர்கள்
மாண்டுவிடாமைக்கு மகாராசமன்னவர்கள்
செத்துவிடாமைக்கு சேனைபஞ்சவர்கள்
பசிகெடுத்திடவே பரியோதுரியோதனன்
கொடுக்குமன்காசபமுனிவரை கோத்திச்சபைதன்னை
அந்தகாசமுனியும் வந்தனதிலிருந்தார்
கண்டுதுரியோதனன் சங்கைக்காரணம்பண்ணி
கைகட்டிவாய்புதைத்துச் சட்டமுடன் நின்றுமே
அப்போது மாமுனியும் அதிகமகிழ்ந்து
காசமகாமுனியும் கண்டுமனமகிழ்ந்து
எனக்கு வேண்டியவைக் கேளுமென்றான்
அப்போ துரியோதனன் ஆமுகமாய்ச் சொல்வான்
ஒன்றைப்புத்திசொல்லுகிறேன் ஆவலாய்க்கேளுமென்றான்
பஞ்சவரைக்கொல்வதற்கு பகைத்தயாகமதுவேணுமென்றான்
உம்முடையவைசுவே உத்தரவாக்கொடுமென்றான்
அந்தமுனிகேட்டு அப்படியேகல்லதென்று
வாக்குவரங்கொடுத்து வந்தாரேமாதமுனி
அழற்குழிவெட்டி அக்கினிசமூட்டிவைத்தான்
வேதாளமுண்டுபண்ணி வினையுமூட்டிவைத்தான்
அக்கினிக்குழியிலே அந்தரவேதாளம்
பிறக்கும்படியாகப் பெருந்தவம்பண்ணுகிறான்
அதுபிறந்தாமனதுல் ஐவர்வீரமுமாக
தொனிற்பாலே தொண்டைசிறித்துப்போகுதே
கைவிரல்பயமலே கணக்குறைந்துபோகுதே
உள்ளாக்கைசெல்விப்பழுப்ப முடக்குலேத்துப்போகுதே
நம்பினபஞ்சவர்கள் ராசாக்கள்பாடுகிறார்

ஆகையாலும்மை அழைக்கவேவந்தேன்காண்
வேதாளம்பிறந்தாலே வேக்தனையென்றனிடும்
மாண்டுமடிவார்கள் மகாராசபஞ்சவர்கள்
செத்துமடிவாரே சீராணபஞ்சவர்கள்
இன்றுரைத்தார்மாயன் எமனுடனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆபருக்கேதுரைப்பான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்களைப்பூவுள்ளமட்டும்
உம்மையேநம்பியல்லோ உயிர்கொண்டுவாழுகிறார்
காக்கக்கடனுனக்கு கரியமாலென்றுசொன்னார்
அப்போதுமாயவனார் அறிவோனையறிந்து
மாயவனார்தான்கேட்டு மனதுபொறுக்காது
கூடவருவாரோ கொப்பெனவேபோகவென்றார்
ஆபருரைகேட்டு னெப்படியேவாரேனென்றார்

எம்பெருமானும் எமதர்மராசனும் பஞ்சவரைக்காக்கவருதல்.

மாயவரும்எமனுமே வருகிறார்வாசலிலே
எமபுரத்தைவிட்டுமல்லோ இருவருமேவாரார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவருமாய்வந்தார்கள்
காளமகாமுனிவருட கானகத்தில்வந்தார்கள்
எமன்கிடாமேலே எம்பெருமான்கெருடன்மேலே
அந்தவனத்திலே வந்தாரிருவர்களும்
வந்துஇறங்கினார் மகாமுனிவர்தவனத்தில்

எம்பெருமாள் தடாகம் உண்டு பண்ணல்.

ஆயர்பெருமாளும அன்னனமேபோதுசெய்தார்
அந்தப்பொய்கையொன்று ஆயருமுண்டுபண்ணார்
மாயமாய்ப்பொய்கையொன்று மாயவருமுண்டுபண்ணார்
அகலநீளமாய் ஆறுயோசனைசதுரம்
பத்துயோசனைதூரம் பாரளந்தாருண்டுபண்ணார்
தாமரைப்பொய்கைதனை சாமியவருண்டுபண்ணார்
அலர்தாமரைப்பொய்கை அன்னனவேயுண்டாக்கினார்
அல்லியுடன்தாமரையும் ஆம்பலுமுண்டாச்சு
அழகானபொய்கையிலே அதிசயமென்னவென்றால்
அல்லியுங்கொடியுமே அதில்நெருங்கவுண்டாச்சு
அந்தரத்தாமரை அக்குளத்திலுண்டாச்சு
நாணலுங்கோரையுமே நடுவேயதிலுண்டாச்சு
அக்குளத்துக்கரையில் அழகானபூமாலைகள்
மல்லிகைமுல்லையுமே மாதவியுமுண்டாச்சு
நல்லதொருபூமலரும் நன்றானபாயுண்டாச்சு
கொன்றைகுருகத்தி கோங்குமுல்லையுண்டாச்சு
ஆற்றலரிமந்தாரை அழகானசண்பகங்கள்

ஆலஞ்செடிமுளைத்து அரசுபெருண்டாச்சு
வேம்புமரசுமங்கே வேணதுமுண்டாச்சு
பாலைமணம்வீசும் பன்னீருமாபூக்கும்
வண்ணவண்ணப்பூமரங்கள் மாவிருட்சமுண்டாச்சு
கமுகுகுலைசரியும் கஸ்தூரிமணம்வீசும்
வெரிப்பலாப்பழங்கள் வெடித்துவிழுந்திருக்கும்
மாம்பழமெங்கும் வனத்திற்பழுத்திருக்கும்
பார்த்தவிடங்களெல்லாம் பழங்கள்பரிமளிக்கும்
கண்டவிடங்களெல்லாம் கனிகள்மணம்வீசும
இப்படியாவுண்டுபண்ணார் எம்பெருமானாயவரும்
காலாகாலங்களிலே கட்டினதுபோலே
ஆயன்பெருமானதிசயமாயுண்டுபண்ணார்

ஐவரும்பெருமாளும் வேறுவடிவுகொண்டது.

எமதர்மராசரவர் பொன்னவடிவெடுத்தார்
காமபுரத்தையாளுகிற மன்மதனாகினார்
எம்பெருமான்மாயனது சென்னவடிவானார்
புள்ளிமான்குட்டியைப்போல் பொன்மான்வடிவெடுத்தார்
அந்தநல்லபொன்மானி னதிசயத்தைசொல்லுகிறேன்
தங்கமுறுக்கியே தகடடித்ததைப்போல்
மேகத்திலேயெழும்பும் மின்னலதுபோலே
மாரத்திலேயெழும்பும் சோதியதுபோலே
காட்டுகொள்ளமறகுட்டி பேர்தன்குழைதனைப்போல்
மான்குட்டிபோலவே மாமனார்வடிவெடுத்தார்
பஞ்சவர்களதனிருக்கும் பர்ணசாலைதேடிவந்தார்
முன்றுபக்கும்பர்ணசாலை முன்னுமேயோடிவந்து
ஒருபக்குபர்ணசாலை யதிலேயவர்நின்றார்
நடந்துவிளையாடி மனதுதிருப்பிவந்து
துள்ளிக்குதித்துநடந்தே திரௌபதைதன்முன்னாலே

தருமரைத்திரௌபதை மான்பிடித்துத்
தரச்சொன்னது.

கண்டாளேபாஞ்சாலி மானதைத்தானதனை
மானழகைப்பார்த்தாளே மயிலனையாள் துரௌபதையும்
கண்டுமனமகிழ்ந்து கட்டழகுதிரௌபதையும்
பார்த்துமனமகிழ்ந்தாள் பஞ்சவர்க்குதேவியவள்
மான்பிடிக்கவேணுமென்று மனதிலெண்ணி திரௌபதையே
ஆர்பிடித்துத்தருவாரோ அழகானமானை
தருமரைக்கேட்போமென்று தாவிநடந்தேவோடிவந்தாள்
தருமராஜகேவத்து சாஷ்டாங்கதெண்டனிட்டாள்
முக்காலவலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
வணங்கிநமஸ்கரித்தாள் மாதுதிரௌபதையும்

தக்கபுகழ்பெரிய தருமரவரே துசொல்வார்
வணங்குமுடியாளே மங்கை துரோபதையே
ஏதுக்குப்பெண்ணே நீ என்னைவந் துதெண்டனிட்டாய்
பின்னையுந்தெண்டனிட்டால் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
தெண்டனிட்டகாரியத்தைத் தெரியவுரையுமென்றார்
வந்துபணிந்ததொரு வயணத்தைச்சொல்லுமென்றார்
என்றுமவர்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
ஏதோவொருமான்வந் தெதிரிலேவருகிறதே
தங்கமுருக்கியே தரையிற்கவிழ்த்ததுபோல்
மேகத்துமின்னலைப்போல் மேகமதுதோணுகுது
தூரத்துச்சேதியைப்போல் தோணுதுவெந்தனுக்கு
உச்சிதமாகவே உருகுதுஎந்தனுக்கு
அதிசயமாய்த்தோணுகுது அந்தமானெந்தனுக்கு
மானெனக்குவேணுமையா வனத்தில்விளையாட
விளையாடவெந்தனுக்கு வேணும்பிடித்திதாரும்
மான்பிடித்துத்தருவீரென்று மன்னரே தெண்டனிட்டேன்
எந்தவிதத்திலும் எனக்காகபிடியுமென்றாள்
பிடியும்பிடியுமென்று பின்னொருகால்தெண்டனிட்டாள்
மான்பிடித்துதாருமென மற்றொருகால்தெண்டனிட்டாள்
அப்போதருமலிங்கம் ஆணழகர்தான்கேட்டு
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
ஆர்வளர்த்தமானேயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானேயிது யேதுமறியேனே
இந்தவனத்தி லிருக்குமபெரியவர்கள்
தவத்திற்பெரியவர்கள் சன்னியாசியானவர்கள்
வரத்திற்பெரியவர்கள் மகாரிஷியானவர்கள்
யோகத்திற்றானிருக்கும் யோக்கியமுள்ளவர்கள்
ஆர்வளர்த்தமானேயிது அறியேனேஆரணங்கே
எவர்வளர்த்தமானேயிது ஏதுமறியேனே
மனிதர்வளர்த்ததனால் வந்ததுநம்மருகே
அல்லாதேயாமானு அருகில்வந்துநிற்காது
வளர்த்தமானானதினால் வந்துவிளையாடுகுது
மானைப்பிடித்தாலே வகைமோசம்வந்துவிடும்
பெண்புத்திகேட்டுமோசம் போனவர்கள்மெத்தவுண்டு
பெண்ணாலேகெட்டவர்கள் பூமியிலேமெத்தவுண்டு
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
ஸ்ரீராமர்பட்டதொரு சேதிபோலாகுமிது
அரிராமர்பட்டதொரு அலைச்சல்போலாகுமிது
ஆசையாற்பெண்மயிலே அம்மானைபிடியென்றாய்
அதுகேட்டுதுரோபதையாள் ஆரணங்கேதுசொல்வாள்

அந்தக்கதையெனக்கு ஆண்டவரேசொல்லுமென்றான்
மாயவனார்பட்டதொரு வாலாற்றைச்சொல்லுமென்றாள்
எம்பெருமாள்பட்டதொரு இடுக்கங்கள்சொல்லுமையா

தருமர் துரோபதைக்கு மான்பிடிக்க லாகாதென்று
ஸ்ரீராமர்கதையைச் சொன்னது.

அப்போதுதர்மலிங்கம் ஆனைமுகரேதுசொல்வார்
ஆனாற்கேள்பெண்ணே அவர்கதையைச்சொல்லுகிறேன்
ராமரும்லட்சுமணரும் நற்சீதைதன்னுடனே
கைகேசிசொற்படிக்கு கானகத்தேபோயிருந்தார்
தென்னிலங்கைராவணனும் சீதையழகுகண்டான்
சூர்ப்பநகைசொல்லாலே துள்ளிப்பதைபதைத்து
இலங்கையைவிட்டுமவன் ஏகிநடந்தானே
சீதையரைச்சிறையெடுக்க தென்னிலங்கைவிட்டுவந்தான்
கண்டானேமூவர்களைக் கானகத்தில்ராவணனும்
ஜானகியைக்கொண்டுபோகச் சமையமில்லையென்றவனும்
உற்றுநினைத்தானே ஒருகோடிபுத்திகளை
இருந்துநினைத்தானே பெண்ணமுற்றசிந்தையிலே
ஆலோசனைபிரிந்து அந்தப்படுபாவி
மாரீசனையழைத்து மானாகச்செய்துவிட்டு
போய்நில்லும்சீதையிடம் பொன்மானேஎன்றுரைக்க
பொன்மானதுகேட்டுப் போகமாட்டேனென்றுசொல்லும்
மாட்டேனென்றசொல்லை பாபாவிதான்கேட்டு
அவ்வளவிலம்மானை அடித்தான்பிரம்பாலே
அடிபட்டுஓடுகுது அந்தவனந்தனிலே
மாளவனுப்பிவைத்தான் மாரீசப்பொன்மானை
சீதையிருக்குமிடந் தேடியேஓடிவந்து
மயிலனையாள்முன்னேவந்து மானும்விளையாடும்
கண்டாளேசீதையரும் கானகத்துமானதுவை
ஸ்ரீராமர்முன்னேவந்து தேவியருமேதுசொல்வாள்
மானழகைக்கண்டேனதைத் தான்பிடித்துதாருமென்றாள்
மான்பிடித்துதாருமென் மலரடியைத்தெண்டனிட
ஸ்ரீராமர்தான்கேட்டுச் சிந்தைமனங்கலங்கி
மான்வந்தமாயமெல்லாம் மாயவனார்தாமறிந்து
மானல்லபெண்ணேயிது மாயமானென்றுசொன்னார்
அல்லவென்றார்கேளாமல் அனேகந்துயரமுற்றாள்
துயரமுற்றாளென்றுசொல்லி சுவாமிமனதிலெண்ணி
ராமருமலக்ஷ்மணரை நலமாகத்தானழைத்து
மான்பிடித்துநான்வருவேன் வாரமட்டுந்தம்பியரே
சீதையருகாகத் திறமாயிருப்பாயென
இளையபெருமாளும் இவ்வார்த்தைதான்கேட்டு
அப்படியேகாத்திடுவேன் அண்ணாவேபோவென்றான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமர்போனதுண்டு
அம்புவில்லுங்கைபிடித்து அவ்வனத்திநடக்க
மாளிகைத்துறந்திடவே மாயவனுர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் உடனுடன்வேஷமதாய்
பத்துதலையொளித்து பத்திரன்வேஷமாத்து
கல்லுவொளிமறைத்து ராவணன்பேர்மறைத்து
ஜங்கமனைப்போலே சண்டாளன்வாரானே
பண்டாரம்போலேவந்தே பரிபாலிவாரானே
வனமாய்வனாந்தரங்கள் வந்தவேஷமணிந்து
இருவருந்தசாலை பினைந்திதானைப்போது
மாளிகையிலிருந்தாளே மாயாவிகன் ராமன்
இப்படியாக இவரிருக்குங்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொரு மாயவனுமேதுசெய்தார்
அந்தமான் தன்மையிலே அகப்படாத்தன்மையினால்
கையினல்வில்லெடுத்துக் கணைதனைத்தான்தொடுத்தார்
அம்புதனைத்தொடுத்து அம்பாலேவீழ்ந்தானே
ராட்சதமான்விழுந்து லட்சுமணாவென்றுரைக்க
அந்தமொழிகேட்டு அநுசனுகேட்டாரும்
மான்பிடிக்கவனுபர் மடந்தையோடுசொன்னான்
இனியபெருமாளும் எருக்காட்டுக்கேயே
ராமனைத்தேடியே லட்சுமணர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் சீதையைபிடிக்க
பிச்சைபெண்ணுகேட்டானவே அதற்கிசைந்தவள்தான்
கூசாமல்ராவணனுக் கொண்டுசென்றுன்தென்னிலங்கை
சீதையைப்போனபின்பு திருமாமர்பார்த்து
கல்லுதென்றுசொல்லிபல்லே யடைதாரிருவருமாய்
சவரியைக்கண்டல்லோ சமிதாய்பண்ணுமே
அநுமானைக்கண்டுமே அனைவருமாய்
அநுமாருமாய்லே அந்தநதுச்சகேறும்
மெத்தவுறவானர் வேர்
வாலியைக்கொன்றபின்பு வானரவீரர்தான்
சுக்ரீவனுக்குபட்டந் சூட்டிக்கடனதனில்
வாராவதிகட்டியல்லோ வந்தார்கள் தென்னிலங்கை
ராவணன்கும்பகர்ணன் ராட்சதரைக்கொன்ற
மூலபலச்சேனை முழுதுமாய்மடிய
சேனைகளைக்கொன்றல்லோ சீதையைமீட்டு
புட்பகமேறி புண்ணியர்களுமுந்தானே
அயோத்திமாபுரிதனில் அரசாட்சிபண்ணினாட்டார்
சீதைகேதாராம சீக்கிரமதானேயோ
தம்பிமார்களுகஞம் தானுங்கொண்டுருந்தார்
தீதிவராமல் செழிப்புடனே

ஐம்பத்தாறுதேசமதை ஆண்டரசொருகுடைக்கீழ்
அந்தகனையாளும் ஆணைக்கிசைந்தோனும்
நிறையம்மான்பட்டதொரு சேதிபனானும்
மாலைப்பிடிக்கவே மாட்டேனென்றுரைத்தார்

மாலைப்பிடித்துத் தருகில்லெயென்று துரோபதை
மாமன் பிணங்கினது.

தக்கபுகழுடைய தருமனிவையுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னமடைத் துரோபதையும்
ஏதுதுசொன்றாலும் ஞானமையுடையான்
வரும்விதியறியானோ மாதுகருத்துமுழுதும்
எக்குவிதத்தாலும் இந்தாளென்வெறுப்பென்றான்
அறவோனைநேசித்து அங்கேயமரவிட்டான்
தக்கபுகழுடைய தருமனவர்பார்த்து
சாபம்புகலவோ காலமங்கே துரைப்பார்
வெற்றியுடையாரே விரைவாகச்சென்று
வீமாமதகரியே வில்லேவெடுப்போது
மாலருட்டிவெறுமென்று மாறுமிணக்கலைதால்
குட்டமாலைப்பிடித்துக் கொப்பெனவேவாருமையா
கட்டுமாலைப்பிடித்துக் கடுகெனவேவாருமையா
ஓடிப்பிடித்துநீ ஒருசொல்லைவாருமென்றார்

வீமன் பிடிக்கப்போகிறது.

அன்னவுரைகேட்டு அகங்களிமாயவன்
இதுபோதுமென்று சமுக்காளிலேவீமனவன்
சல்லடம்தான்போட்டு கட்டிவரிக்கட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சொருகிட்டு
ஆயுதங்களைப்பிடித்து ஆனைதானெபோகவாற்றுக்
மாலைத்தொடர்ந்தே மதலியர்சாரவும்
தானிப்படைத்துக் கருத்தாய்வருவாரும்
வீமனைக்கண்டபோதே பெரியநடப்பாரசம்
அப்போமாவீமன் ஆக்ரோசம்கொண்டவனும்
மாலைப்பிடிக்க மகாவசூர்பின்தொடர்ந்தார்
எட்டிப்பிடிக்க எதிரில்வருவாரும்
பதுங்கிவருவாரும் பராமலைவீமன்
ஐம்பதிற்காதவழி அதேகதூரந்தொடர்ந்தார்
கண்டுகொண்டுதெரியாமல் கடுகவேபோய்விட்டார்
தேடித்திரிந்தானே திக்காசையதனில்
என்றுதுமென்றுமென்ற இடம்கண்டபோனவன்
அண்ணன்தருமருக்கும் அன்னத்துரோபதைக்கும்
என்னவென்றுசொல்வேனெ னிவ்வவதிசைத்தை
எத்தினதூரம்வந்தேன் இப்பாலேக்கபோனேனே

போனவிடமறியேன் போயிருக்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
மாயமான்போனதொரு வகையொன்றுநானறியேன்
என்றுமனங்கலங்கி எண்ணுகிறான்கோடிசிந்தை
நின்றுவிசாரமிட்டு நெடுமூச்செறிந்தானே
விடுவிடுநேரமங்கே வெயிலானவேளையிலே
நல்லஉருவமது நாவுவறளுறது
தண்ணீருந்தாகவிடாய் தனிமையாய்க்கொள்ளுகுது
நாவுவறட்டுது நல்லசலங்காணாமல்
குடலைப்பிரட்டுகுது குடிக்கசலங்கிட்டாமல்
என்னசெய்யப்போறேனென்று ஏகிநடந்தானே

எம்பெருமாள் வீமராசனை விஷத்தண்ணீர் குடிப்பித்து
கொல்லுகிறது.

இதுதான்சமயமென எண்ணிதிருமாலும்
மாறயிருந்தவரும் மயிலாய்வடிவெடுத்தார்
மயிலாவடிவெடுத்து மரத்தின்மேலேறினாரே
ஏமனகுயிலாகி யிருந்தானேமாயரண்டை
ஏமன்குயிலானார் எம்பெருமாள்மயிலானார்
மயிலுங்குயிலுமே வனந்தனிலேகூவுகையில்
அந்தக்குரல்கேட்டான் அழகானவீமனுமே
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடங்களிலே குயிலுமயிலிருக்கும்
தேடியேவந்தானே சீரானபொய்கையண்டை
தாமரைப்பொய்கை தடாகத்தைக்கண்டானே
தாகவிடாய்தீர்த்து தமயனண்டைபோவோமென்ன
தண்ணீர்தடாகத்திலே இறங்கினான்கார்வேந்தன்
அந்தரமாய்மாயவரும் அங்கொருவரோதுசொல்வார்
ஆரடாதம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
இந்தக்குளத்திலே இறங்கிஜலமுண்ணாதே
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனோதுசொல்வான்
அந்தரமாய்ப்பேசுறது ஆரென்றுந்தெரியவில்லை
அந்தரதேவதையோ ஆகாயதூர்க்கைகளோ
மந்திரதேவதையோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்பூச்சுகளோ
ஆரென்றுநானறியேன் அறியவுரையுங்கள்
வெற்றிமதயானை வீமனவன்கேட்கலுமே
அந்தச்சமயத்தில் ஆயரவரோதுசொல்வார்

ஆராலுந்தனக்கென் அப்புறக்கேதபோவென்றார்
அப்போதுவீமனவன் அவ்வார்த்தைக்கேதுசொல்வான்
தாகவிடாய்கொண்டு தண்ணீர்குடிக்கவந்தால்
தண்ணீர்குடியாதே யென்றுமேசாற்றலாமோ
தடாகமிருக்கையிலே தண்ணீர்களைதீராமல்
குடியார்போவேனோ பெற்றவரேசொல்லுமென
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியிற்பயிர்களுக்குள்
வாடாதபயிருமேது வருத்தமானபாரமேது
அதிசயமானவார்த்தை அறிந்தானையுமென்றார்
அப்போதுவீமனவன் அவ்வயணமறியாமல்
தெரியாமல்வீமனவன் தீர்த்தப்புசித்துவிட்டான்
தாகக்களையாலே தண்ணீர்குடித்துவிட்டான்
களையுந்தீமனுக்கு கண்ணைச்சொருகுது
தலையைச்சுற்றுதே தாமமுடியானுக்கு
உடம்புமறக்குதே உத்தண்டவீமனுக்கு
மரத்தடியிற்பள்ளிகொண்டான் மாலைமுடியானும்
மறந்துபடுத்தானே மதகரியவீமனவன்
தன்னைமறந்துமல்லோ தரைமேல்தன்பள்ளிகொண்டான்
மாயன்பெருமானும் வார்த்தைகேள்துசொல்வார்
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றார்
எமனைத்தானழைத்து யிவனுயிரைவாங்குமென்றார்
அப்போதெமனவன் அவசரமாயோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினானே
சூலத்தாற்குத்தியே துடிக்கவுயிர்வாங்கினானே
பாசத்தாற்கட்டியே பறக்கவுயிர்வாங்கினானே
ஜலத்தங்கரையோரம் குளிர்ந்தநிழல்தனிலே
பொய்கைக்கரையோரம் போர்வீமன்மாண்டுவிட்டான்
மாண்டுபடுத்தானே மதவீமன்குளக்கரையில்
செத்துப்படுத்தானே சேனைவீமனுமே
இப்படியாகவிவனிருக்குந்தன்மையிலே

மானைப்பிடிக்கப்போனதொருவீமனைக்காணோமென்று
தருமராஜர்புலம்புகிறது.

தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சாய்ப்புமன்னர் தருமரவரேதுசொல்வார்
மான்பிடிக்கப்போனதொரு மன்னவனைக்காணேனே
இங்கேபோச்சுதே இன்னம்வரக்காணேனே
மானைப்பிடிக்கையிலே வனாந்தவன்கண்டாரோ
ஆர்கண்டெடுத்தாரோ அபாரஞ்செய்கிறாரோ
எவர்கொன்றுபோட்டாரோ ஏதுமறியேனே
மண்ணுக்கிரையாக்கி மாயமாக்கிவிட்டாரோ
கல்லாக்கிப்புல்லாக்கி கானகத்திற்போட்டாரோ

செத்துமடிந்தாரோ சிவன்பாதஞ்சேர்ந்தாரோ
பாண்டுமடிந்தாரோ வைகுந்தஞ்சேர்ந்தாரோ
காணவும்போறேனோ கட்டழகன்தம்பியரை
பார்க்கவும்போறேனோ பாரமதகரியை
காணாமல்தம்பியரை கலங்குதேதேகமெல்லாம்
பாராமல்தம்பியரைப் பதைக்குதேயென்மனது
காளையருச்சுனரை சீக்கிரமேபோய்வாரும்
பார்த்துவா அருச்சுனரே பாரமதவீமனை
தேடியழைத்துநீ சீக்கிரத்தில்வாருமென்றார்
காளையந்தம்பிகளை கண்டழைத்துவாருமென்றார்
என்றுமவர்சொல்லி யிருந்தாரொருவிதமாய்

அருச்சுனமகாராஜன் தருமர்சொல்லைக்கேட்டுவீமனைத் தேடிப்போனது.

ஆணழகுமன்னன் அர்ச்சுனராசனுரை
தருமரைக்கேட்டுத் தானெழுந்தார்விசையன்
சல்லடங்களிட்டுமெல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
குந்தியிடுங்கால்களுக்கு குவிளைப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்கு செருந்திப்பூச்சல்லடமாம்
பில்லைமுகதாடு பிருவெடுத்துக்கட்டியாணம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
பாகுசொருகினானே பார்த்தனிடப்புறத்தே
கத்திசொருகினானே காளைவலப்புறத்தே
சிங்காணிவில்லெடுத்து சிறுநாணிதான்பூட்டி
அண்ணருடபாதம் அடிவணங்கித்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்றான் போர்விஜயக்கோமானும்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்திமெத்தவரும் மார்போடேகொண்டணைத்து
காளையருச்சுனரை கட்டழகாநீதேடி
வனத்தினுட்புகுந்து மன்னவனைநீதேடி
கண்டழைத்துவீமனைநீ கடுகவேவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தாரே விஜயபெருமானும்
வாரானே அருச்சுனனும் வனமாய்வனந்தாண்டி
கானகத்தினுட்புகுந்து காளையரைத்தேடுகிறான்
எங்கெங்குந்தேடினான் இனியவிடமாராய்ந்தான்
அந்தவனந்தனிலே அண்ணரைக்காணாமல்
மற்றுமொருவனத்தில் மாவிஜயன்தேடுகிறான்
இன்னமொருவனத்தில் இளவிஜயன்தேடுகிறான்

அண்ணனைத்தேடி யனேகதூரம்வாராரே
காட்டிலேதேடியல்லோ கடுகியேவாராரே
ஆறைமுருமன்னன் அருச்சுனராசருக்கு
தண்ணீர்வனங்கள் தாகவிடாய்கொண்டது
வாயுவாட்டுது நல்விஜயன் அர்ச்சுனற்கு
மெத்தக்களைத்தாரே வேர்வைகள்சிந்திடவே
அப்போதருச்சுனனும் ஆனமுகமேதுசொல்வான்
இந்தவனங்களிலே எங்கும்ஜலங்கிட்டவில்லை
தண்ணீர்களைப்பிலே தாகவிடாயானதினால்
தண்ணீர்தண்ணீரென்று தவித்துபுலம்பாதே
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

மாயவனருச்சுனராசனை விடாய்தீர்ப்பித்து கொல்லுகிறது.

எம்பெருமான்மாயவனும் ஏதுசெய்தாரந்நேரம்
பயிலுங்குயிலாக வனத்திலேகூவுகிறார்
அருச்சுனன்காதிற்கேட்க அவ்வனத்திற்கூவுகிறார்
பட்சக்குயிலோசை அருச்சுனனுந்தான்கேட்டு
கூவுங்குரல்கேட்டான் கோபாலர்மைத்துனனும்
அப்போசைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
தண்ணீர்தவிடந்தன்னிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி நடக்கலுற்றான்
அப்படிப்போகவென்று ஆசைப்பட்டுத்தேடிவந்தான்
குயிலிருக்குமிடங்களிலே தொடர்ந்துவந்தாரே
மயிலிருக்குமிடங்களிலே மன்னவனும்வந்துநின்று
சுற்றிப்பார்த்தாரே சூரியிறக்கன்றிலே
பார்த்தவிடங்களெல்லாம் பச்சென்றுதானிருக்கும்
கண்டவிடமெல்லாம் கமகமென்றுமணக்கும்
தாமரைப்பொய்கைகளுஞ் சாலைகளுஞ்சோலைகளும்
அவனிருட்சத்தின்கீழ் அன்னம்பள்ளிகொண்டிருக்கும்
பொற்றாமரைவாவியதனைக்கண்டாரே
கண்டுமனமகிழ்ந்தான் காண்டீபருச்சுனனும்
பார்த்துமனமகிழ்ந்தான் பார்த்திபனருச்சுனனும்
சுற்றிப்பார்த்தாரே உள்ளங்குளிர்ந்தாரே
நின்றுகரையோரம் தீர்த்தாடினாரே கோடிபுத்தி
அண்ணர்தருமருமே அங்கேமனஞ்சலித்து
தம்பிமார்காணாதே மெத்தமனஞ்சலித்து
தம்பியைக்காணாமல் தவித்துப்புலம்புகையில்
அங்கேதருமரவர் ஆயாசப்பட்டிருக்க
இங்கேகாண்டீபன் இப்படித்தான்சுற்றினே
மாயம்பெரியமயல் மரத்தடியில்தான்சுற்றினே

தண்ணீர்குடித்தாயல்லோ தாகமுந்தீர்ந்ததின்பு
அண்ணரைத்தானெழுப்பி அழைத்துநாம்போவோமென
தாமரைப்பொய்கையிலே இறங்கினான் தார்வேந்தன்
அப்போதுபாயவரும் அருச்சுனனைத்தான்பார்த்து
ஆயர்பெருமானும் அந்தரத்திலேதுசொல்வார்
ஆடாஎன்குளத்தில் அள்ளிஜலமுண்கிறவன்
காவண்டாஎன்குளத்தில் எடுத்துஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்காதேஎன்குளத்தில்
அள்ளிஜலமுண்ணை அதிசயஞ்சொல்லுமென்றார்
தாகந்தணியவென்றால் சங்கதிகஞ்சொல்லுமென்றார்
அப்போதருச்சுனனும் அவ்வார்த்தைக்கேதுரைப்பேன்
என்னஅதிசயமோ எந்தனுக்குச்சொல்லுமென்றான்
எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரருச்சுனற்கு
வாடாப்பயிருமேது வையகத்தில்பாரமேது
இவ்வார்த்தைசொன்னு லிறங்கிஜலமுண்ணுமென்றார்
ஆறுலமுறுமன்னன் அர்ச்சுனராசதுரை
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுமேதுசொல்வான்
ஆர்காணாப்பேராது எங்கையோதெரியவில்லை
எவர்காணாப்பேராது எங்கையோதெரியவில்லை
வேண்டிவிடாய்த்துநான் வேர்வைமிகவொழுக
தண்ணீர்விடாயாகித் தாகத்துக்குண்ணவந்தால்
வேண்டாமெனமறித்துத் தீண்டாதெனவுரைத்தீர்
எதிரிட்டுவந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
கண்டித்துப்போட்டிடுவேன் கண்ணில்தெரியடாநீ
எதிரிலேநிற்கவேணும் என்சண்டைபார்க்கவேணும்
சரிடாகவினதல்லோ சண்டைபண்ணிப்பார்க்கவேணும்
என்றதுமே அப்ப இறங்கிஜலங்குடித்தான்
தாகவிடாய்தீரத் தண்ணீர்குடித்தானே
தண்ணீர்குடித்தவுடன் தலைச்சுழற்றுகுது
அப்போதுமயக்கமல்லோ அதிகமயக்கமாகும்
கஞ்சாமக்கும் கனமயக்கமாகுது
அபினிமயக்கமல்லோ அவனைச்சுழற்றுகுது
தள்ளாடிவாராரே தாமுமுடியானும்
ஆறுலமுறுமன்னன் அருச்சுனராசனவன்
எண்ணாதுமெண்ணுகிறான் இந்திரன்குமாரனுமே
நினையாதுநினைக்கிறான் நீலவர்ணனைத்தானே
ஆரோதெரியாது அந்தரத்திற்பேசினார்கள்
எவரோதெரியாது எந்தனுடன்சொன்னாரே
தண்ணீர்குடியாதேயென்று சமர்த்துகள்பேசினாரே

தீர்க்கங்குடியாதேயென்று வார்த்தைபலசொன்னீரே
அவ்வார்த்தைதள்ளினனள்ளியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொல்தன்னைமறுத்துச் சுருக்காகதீர்த்தமுண்டேன்
உண்டபொழுதே உடம்பைவிட்டதையோ
தலையைச்சுற்றுதையோ தருமருக்காருரைப்பார்
அண்ணருக்குந்தம்பியர்க்கும ஆரணங்குதுரோபதைக்கும்
இந்தவிசேஷமதை எவர்கள்போய்ச்சொல்வார்கள்
செத்தவிசேஷமல்லோ சேதிபோய்ச்சொல்வாரார்
பாண்டவிசேஷமது மறுவார்த்தைசொல்வாரார்
என்றுமயங்கிச்சொல்லி வகிலமுடிகடந்தான்
தள்ளாடித்தத்தளித்து தானேநடந்துவந்து
அண்ணாருக்காக அருச்சுனன்வந்துநின்றான்
வீமருக்காக விஜயனும்வந்துநின்றான் .
கண்ணுறக்கம்போலவே கடுகிவந்துபடுத்தானே
எம்பெருமான்மாயவரும் இதுதான்சமயமென்று
காலனைச்சரித்தார் கரியமால்பொட்டெனவே
அருச்சுனன்தலையினை அதிவிரைவாய்வாங்குமென்றார்
அப்போதுஎமனவர் அதிவேகமாகவந்து
ஆலங்கொண்டுருத்திரிய பாசங்கொண்டுகட்டினானே
பகைக்கவுயிர்மாய்த்தான் பார்த்திபனருச்சுனனை
இப்படியாக இவன்மாண்டிருக்கையிலே
தக்கபுகழுடைய தருமருடசேதிசொல்வோம்

வீமனைத்தேடப்போன அருச்சுனனும் வீமனும் இன்னம்
வந்துசேரவில்லையென்று தருமர்புலப்புகிறது

அருச்சுனன்போனபின்பு அழகானதருமரவர்
மனதுசலங்கியே மன்னவருமேதுசொல்வார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
இளையோரமாத்தீ தின்னவர்வரக்காணேன்
காமத்தழகா நகுலா நீவாருமென்றார்
தக்கபுகழுடைய தருமரழைக்கவேதான்
நாமமுடியான் நகுலனுமோடிவந்து
அண்ணனெதிரேவந்து அடிவணங்கித்தெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கட்டழகனேதுசொல்வான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அழைத்தகாரியத்தை நன்றாகவேசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அழகர்தருமலிங்கம்
கண்ணீர்ததும்பிடவே கட்டழகரேதுசொல்வார்
வீமனைத்தேடியே வில்விஜயன்போனானே
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணேன்
தேடியேபோனதொரு தேர்விஜயனைக்காணேனே
போனவிடமறியேன் போய்ப்பதுங்குந்தாவறியேன்

தங்குமிடமறியேன் சஞ்சரிக்குங் காலறியேன்
ஆரோடேசண்டை அபாதஞ்செய்கிறீரோ
ஏவரோடேசண்டை எதிர்த்துப்போர்செய்கிறீரோ
மானைவளர்த்தவர்கள் வஞ்சனைசெய்தாரோ
வன்னிலைநத்தாரோ கண்டதுண்டமாக்கினாரோ
செத்ததுவுமிருப்பதுவுந் தெரிந்தெரியவில்லை
மாண்டதுவுமிழைத்ததுவும் வார்த்தைதெரியவில்லை
சத்தனாருபுத்ரனை சரியவெட்டிப்போட்டாரோ
குந்திமகிருபுத்ரனை தலையவெட்டிப்போட்டாரோ
மலைபேயனுவாரமோ வாழ்விலெபத்ததாமோ
காணவும்போகிறேன் கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போகிறேன் பாவியென்றன்றுலே
இன்னமொருவேளை யிளிசாணைப்போகிறேன்
இருவரையுந்தேடியே இட்டுவருவாயே
பெரியோர்தம்பியரை புத்தியுள்ளகல்யாணியே
அன்னவுரைகேட்டு ஆனைமுகனேதுசொல்வான்
அஞ்சிப்புலம்பாதே ஆயாசமாகாதே
ஆரோடேசண்டை அமாதுசெய்தாரோ
ஏவரோடேசண்டை எதிர்த்துப்போருதனும்
சண்டையதுசெயித்துச் சபித்திட்டுக்கொண்டுவாரேன்
அமாதுதான்செயித்து அவர்களைக்கொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இப்போதேயாய்ந்து
ஓடியழைத்து ஒருநொடியில்வாரேனென்றான்
தேடியழைத்து சீக்கிரத்தில்வாரேனென்றான்

கருடன் தருமராசர் சொற்படிக்கு வீமனையும்
அருச்சுனனையும் தேடப்போனது.

அடிதொழுதானே கட்டழகன்கருடன்
தென்கொடிக்கால்களுக்கு தெருசுப்பூச்சல்லடமாம்
மங்கியிலைக்கால்களுக்கு மாதனைப்பூச்சல்லடமாம்
தூக்கியைக்குங்கால்களுக்குத் துக்கிப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமெல்லோ தட்டுவரிந்துகட்டி
வாங்கெடுத்துச்சொருகினானே மன்னவிடப்புறத்திலே
கத்திசொருகினானே காலவலப்புறத்தே
ஆயுதங்களெடுத்து அண்ணருக்குத்தெண்டனிட்டு
போகவிடைதாருமெனப் போர்மன்னனுரைக்கைதொழுதான்
தக்கபுகழுடைய தருமர்மனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
காமறுடிமனே கருடனென்கண்மணியே
போனவனைத்தேடியே பொறுமையுடன்பார்த்து
சென்றவனைத்தேடி சிக்கிரமபாராய்ந்து

[illegible] திருவகையுங் கண்டெழுந்தவாறுமென்றர்
[illegible] விளைழுந்தவாறும்
பொய்யாருமென்னைப் பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே [illegible]
[illegible] வடக்கெழுந்த [illegible]யன்போல்
[illegible] அன்னைக்காத்தேடிவாறன்
தேடிவாறானே [illegible]
[illegible] அன்னை [illegible]
[illegible] அப்பா [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] இறைக்கிட்டுவெப்பறந்து
[illegible] அன்னை [illegible]
[illegible]
[illegible]
[illegible] தலைமகாராசனுக்கு
[illegible] அங்கதராய்வந்தேனே
[illegible] அதிகதாகமுண்டசக்கே
[illegible]
[illegible]

[illegible] விசமீறுடிப்பித்துக்
கொன்றது.

[illegible] சொல்வார்
[illegible]
[illegible]
[illegible]
[illegible] வனத்தில் [illegible]
[illegible]
[illegible]
[illegible] தப்படியே
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்றார்
குளத்திலிறங்கினனே கொப்பெனவேநகுலனவன்
மாயர்பெருமாளும் பலராமர்தான்பார்த்து
அந்தரயாதிநின்று ஆயரவரேதுசொல்வார்
ஆடாதம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிஜலமுண்ணாதே
தண்ணீர்குடியாதே தாமரைப்பொய்கையிலே
குளத்தைவிட்டிப்புறம்வா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வபணந்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபந்தெரியவில்லை
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாயதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
எங்கள்குளத்திலேநீ இறங்கிஜலமுண்ணவென்றால்
வையகத்திலதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாப்பயிரின் வயணமுறைத்தாயானால்
இறங்கிசலமுண்ணும் இல்லையென்றால்போய்நடவும்
சொன்னாலேநீர்குடியும் சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தாமமுடியானே
குளத்திலடிவையாதே கொற்றம்போர்பண்ணவனே
என்றிதார்சொற்கேட்டு ஏதுசொல்வான்சீர்நகுலன்
நீகேட்டவார்த்தைக்கு நான்கேட்குந்தன்மையென்ன
நீதியல்லநீர்தூர நின்றுதான்பேசுறது
என்னெதிரில்வந்தாலே இருதுண்டாய்போட்டிடுவேன்
என்றுசிலவார்த்தை நின்றுமவன்பேசினனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
மறுவார்த்தைசொல்லாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பனவேநகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்புசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும்
தண்ணீர்புசித்தவுடன் தாறுமாறாய்விழுந்து
தலையைச்சுழட்டுது தார்வேந்தராஜனுக்கு
உடம்புமறக்குதே உத்தண்டவீரனுக்கு
என்னாதுமென்னுகிறான் இயலானநகுலனுமே
ஆரோதெரியாது அந்தரமாய்ச்சொன்னார்கள்

அவ்வார்த்தைகேளாமல் அன்னியெதிர்த்தமுழன்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகதிர்த்தமுழன்டேன்
கண்ணுந்தெரியவில்லை காரணமுந்தோணவில்லை
நிலமுந்தெரியவில்லை நினைவுமறக்குதே
அறியாதநான்புரிந்தே னென்றல்லோ ஆணழகன்
அண்ணர்க்குத்தம்பியர்க்கு மானக்குறைபனைதக்கும்
அந்தவனந்தாண்டி ஆர்தான்போய்ச்சொல்லுவார்கள்
இந்தவிசேஷமதை யாரேயுரைப்பார்கள்
தருமனையறிந்தால் சற்றும்பொறுக்காரோ
அண்ணனுந்தம்பியரு மழுதுபுலம்புவார்கள்
இங்கேயிவர்வரக்கி யிவர்களிருக்கையிலே
அங்கேகருலனுமே அன்னைநான்கண்டாளே
பாண்டவர்சீர்குலை வசராயிணையுண்டு
செத்தான்கருலனுமே கோரகானகத்தில்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே

வீமனையர்ச்சுனனையு மழைக்கபோனநகுலனையுங்
காணோமென்று தருமர்புலம்புகிறது

அப்போதுமன்னவரு மாணழகனேதுசொல்வார்
சகாதேவனையழைத்து தருமரவரேதுசொல்வார்
அப்பாசகாதேவா அதிசயக்கதைகேளும்
மான்பிடிக்கப்போனவீரர் மதவீமராசனையும்
வில்லைக்காணவென்று வில்விசயராசனையும்
தேடியேபோனதினே தேர்விசயனர்ச்சுனனும்
வில்விசயனைத்தேட நகுலனும்போய்நடந்தான்
மூவர்களும்போனாரே முடிவேந்தராசாக்கள்
ஒருவரையுங்காணேனே உத்திரவுதானறிய
மான்பிடிக்கப்போனவர்கள் வந்தவருஞ்சேரவில்லை
தேடியேபோனவர்கள் திரும்பிவந்துசேரவில்லை
தம்பிசகாதேவா தாமழுதுவானே
தேடிப்போய்ப்பாரேயோ சேதிவந்துசொல்லாயோ
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டாரபிழைத்தாரோ மறுவார்த்தைதானறியேன்
மானைப்பிடிக்கையிலே மான்வளர்த்தார்கண்டாரோ
மானைவளர்த்தவர்கள் வதைதபண்ணினாரோ
சத்திரியர்களோ சந்தியாசியானவரோ
சத்திரியவர்கள் சபித்துப்போட்டாரோ
காணவும்போறேனே கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போறேனே பாவிபெண்கண்ணாலே
இன்னமொருக்கால் இங்கேவந்துசொல்வாரோ
இளையசகாதேவா இப்படிங்கேவாராயோ

காளைசகாதேவா கண்டழைத்துவாருமோ
பாரமுடிமன்னர்களைப் பார்த்துமேயழைத்து
வருவாயோதம்பியரே வார்த்தைகள்சொல்லுமென்றார்
அப்போசகாதேவன் அண்ணரைதெண்டனிட்டு
தாமமுடியான் சகாதேவனேதுசொல்வான்
அஞ்சாதீரண்ணாவே அழைத்தோடிவாரேன்நான்
காளையந்தமூவரையும் கண்டழைத்துவாரேனென்றான்
பார்த்தழைத்துவாரேனென்றான் பாரமுடிமன்னர்களை
என்றுயெழுந்தானே இளையசகாதேவன்

சகாதேவன் தருமர்சொல்லைக்கேட்டு தமையன்மார்
மூவரையுந் தேடிக்கொண்டு போனது.

சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்களுக்கு நெரிஞ்சிப்பூசல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு அத்திப்பூசல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூசல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
ஈட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
அண்ணரைதெண்டனிட்டு ஆணழகனேதுசொல்வான்
போகவிடைதாருமென்றான் போர்விசயன்தம்பியவன்
தக்கபுகழுடைய தருமாவர்பார்த்து
வாழ்த்திபெடுத்தவருமார்போடேகொண்டணைத்து
அப்பாசகாதேவா அறிவுள்ளகண்மணியே
அண்ணமார்போனதெரு அடவிதனிற்சென்று
காளையந்தமூவர்களைக் கண்டழைத்துநீர்வாரும்
அண்ணர்களைக்கண்டு அழைத்தோடிவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்சகாதேவன்
அண்ணரைதேடியே அதிவிரைவாய்போய்நடந்தான்
தமையர்களைதேடியே தார்வேந்தன்போகலுற்றான்
எட்டிநடந்தானே எழிலானசூரியன்போல்
தேடிவருகிறானே சீரானகானகத்தில்
எங்கெங்குந்தேடியே இனியவிடமாறாய்ந்து
கடுகவருகையிலே காலுமடைத்திடுது
சொல்லுகிறேனென்றுவந்து கூடியுறவாடினர்கள்
இனியிருக்கஞாயமல்ல என்றுவழிபிடித்தான்
ஆனையுஞ்சேனையும் அண்டவொண்ணுப்பானையமும்
தப்பியிருந்த தளபெரியசேனைகளை
கூட்டிநடந்தானே கொத்துப்போல்வீரியனும்
காடுஞ்செடிநடந்து கரியமலைதான்கடந்து
ஆறுஞ்சுனைகடந்து அநேகமலைதான்கடந்து
அத்திநகர்பட்டணத்தை அடைந்தான்திரியனுமே
அந்தசமயத்தில் ஆயனும்அர்ச்சுனனும்
ஒருவற்கொருவர் உறவாடிபோய்நடந்தார்
மலையேயதிஉச்சி வாராரிருவருமாய்
தருமருந்துரோபதையும் தம்பிமாரிருவருமாய்
கடுகியெழுந்திருந்து கார்வண்ணரைத்தொழுதார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
பெருமான்மனமகிழ்ந்து பிரியமுடன்தான்வாழ்த்தி
அல்லவரைக்கையமர்த்தி அரிராபர்வீற்றிருந்தார்
தருமருடனுகை சாமிபவரேது சொல்வார
காலைக்கடன்முடித்துக் கையேநிஜெபதபங்கள்
செய்துகொண்டிருக்கையிலே தேரோரிஅந்தரமாய்
ஆரோவொருகெந்தருவன் அநேகக்கெருவமதாய்
போகிறவனென்கையிற் பனிச்சென்றுதம்பலத்தை
துப்பினுன்சக்கரத்தைத் துணித்துவாவென்றனுப்ப
கிரீடி அபயமெனக் கெந்தருவனோடிவரக்
எனக்குபகையான இயலானபாதகனை
ஆதரிக்கஞாயமுண்டோ அமர்செய்யக்காரியமேன்
என்றேனுடமர்பொருத இராஜாவேஞாயமுண்டோ
தக்கபுகழ்பெரிய தருமராஜாதிசொல்வார்

அறியாமற்செய்தபிழை ஆண்டவனே மனம்பொறுத்து
தெரியாதார்செய்தபிழை தேவர்மனம்பொறுத்து
இரவும்பகலுமே எப்போதுங்காத்தான்
உம்மைத்தொழுதல்லோ உலகாளவந்திருக்கிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைச்சதமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியவரைச்சதமென்பேன்
உம்மையேதெய்வமென்று உயிர்கொண்டலையுமேனும்
என்றுவணங்கினார் இபலானதருமராசர்
உள்ளங்குளிர்ந்துமே உகந்தாரேதுசொல்வார்
அருச்சுனனைத்தான்பார்த்து அரிராமரேதுசொல்வார்
சென்றதைஉன்சபாதம் தேடிவந்தென்மகனே
அபயமிட்டபோர்க்களத்தார் உதவிக்கவல்லபிரான்
செப்பியதான் அருச்சுனன் தேடிவந்தென்மகனார்
பார்கண்டநாக்கராக மேல்வரஞ்சொல்லிவிட்டார்
பெரியோர்பரமனின் பெரியதோர்கோறதியோம்
உன்னிரும்கல்லபிரான் உகக்கிரைதுமில்லை
சகோதரமார்கள் தர்மபஞ்சபாண்டவரே
இக்கலையைவிட்டு இனியகையைப்போயிருக்கன்
எதுவிலவல்தாழுக் எல்லேனினைத்திடுகன்
பொய்யாமெமென்று பொருகோலாழுக்கிருக்கார்

எம்பெருமான் விடைபெற்று தன்னிருப்பிடம் செல்லுகிறது.

நிலைமையாழ்த்திய அரிமர்போய்கடந்தார்
சமிதுவெசடியும் கரியபல்நான்கான்
மாயவரோ போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
மாராய்தீதெய்கருவேர வார்த்தையொன்று நீர்கேளும்
(உன்) [illegible]
[illegible]
[illegible]
அப்போதுதெய்க்தருமன் அருச்சுனர்க்கு விடைகொடுத்து
[illegible] செய்தபாவத்தை இராஜனேதீர்த்துவிட்டார்

தெக்காவன் அர்ச்சுனர் தமயனிடம் விடைபெற்றுக்கொண்டு
சக்கிராபட்டணம்போகிறது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அருச்சுனனேதுசொல்வான்
[illegible]
[illegible] ப்புரிதானறுப்பும்

எந்தன்மேல்தயவு நீ என்றுமறவாதே
போய்வாருமென்றுசொல்லி புண்ணியருங்கூறினார்
மாயனையுங்கெந்தருவன் வணங்கியேதெண்டனிட்டு
போதச்சரணமென்று போய்நடந்தான்கெந்தருவன்
ஏழாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு
இந்தக்கதைதன்னில் இடறுகளுண்டானால்
ஜகத்தினிலுள்ளவர்கள் சரிபாகயிக்கதையை
இகழ்ச்சியாயுள்ளதெல்லாம் புகழ்ச்சியாய்தான்திருத்தி
அகத்தினிற்றன்பொருந்தி அன்பாகத்தான்படித்தால்
சுகத்துடன்வாழ்ந்து சுவர்க்கபதிசேர்வார்கள்
இந்தப்படியாக வெப்போதும்வாழ்ந்திடுவார்
வாழ்ந்திருவிடைகொடுத்தார் மாயவனைப்போது
வாழிவாழியென்றுசொல்லி வாயளித்தாரிவரனார்

ஏழாவது கெந்தர்வபர்வம் முற்றிற்று.

எட்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைகளின்மேலே குடிவாழ்க்கைதானகத்தில்
தோலிவைத்ததேமேடு கூடைதனிலேமேலேவைத்தார்
மன்னிவைத்தமேடு வனவாசம்போனார்கள்
குருபாரிஷிவனத்தில் குடித்தனமாய்போனார்கள்
அந்தவனத்திலே இவர்குடித்தனமாய்
ஐந்துபேர்க்குபர்ணசாலை அழகாகவும்பண்ணார்
ஏழுபேர்க்குபர்ணசாலை எழிலாகவும்பண்ணார்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாட்சென்றபின்பு

துரோபதைவனசாரிக்கு பாரிசாதபுஷ்பம் கேட்கிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
ஒற்றையொருநாளில் ஒன்றியாய்த்துரோபதையாள்
அந்தவனத்தினதிசயத்தைப்பார்த்தவர
வரத்திற்பெரியவராம் மகாரிஷியானவரும்
யோகத்திற்பெரியவராம் தபத்திற்பெரியவராம்
சாமியிலும்பெரியவராம் தபத்திலிருந்தவராம்
அவர் பூசைபண்ணுந்தீர்த்தம் பொய்கைபோகுது
ஓடுஞ்சலத்திலே ஒதுங்கிவரும்பூமலரும்
பாரிசாதபூமலரும் பரிமளமாய்வீசுது
ஆற்றிலடித்துக்கொண்டு அலைந்துவருகுது
கண்டாளேதுரோபதையாள் கடிதுமனதுகொண்டாள்
மெத்தாசைப்பட்டனளே வேல்பொருங்கண்ணாளும்
என்னதுவென்றுமிகு எண்ணித்துரோபதையும்
ஆரோடேசொன்னாலே ஆகுமிக்காரியங்கள்
எவரோடேசொன்னாலே எடுத்தளிப்பாரிம்மலரை

வெற்றிமதயானை வீமருடன்சொன்னமாறல்
பறித்துத்தருவார்காண் பரிமளத்தைநாமறிய
என்றுரைத்தாளே இளங்கொடி துரோபதையும்
பர்ணசாலைமேலாகப் பாஞ்சாலிஓடிவந்து

துரோபதை வீமனைப் புட்பங்கேட்கிறது

வெற்றிமதயானை வீமனைத்தான்பார்த்து
ஏலப்பசுங்கிளியாள் இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவின்னப்பம்
காணாதுகண்டேன்காண் கண்டாசைபட்டுவந்தேன்
பாராதுபார்த்துவந்தேன் பார்த்தாசைபட்டேனையா
என்மனதுக்கேற்றபடி எனக்குக்கிடைத்தாரும்
வெற்றிமதயானை வீமராவோதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பச்சைப்பசுங்கிளியே
ஏதுநினைத்துவந்தாய் எனக்கறியசொல்லுமென்றார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அகிலாண்டகாவேரி ஆறொன்றுதான்வருது
ஆற்றங்கரைமருகில் அங்கொன்றுதான்வருது
பரிமளத்தோடிருக்குது பார்த்துவந்தேன்பாரிசாதம்

வீமன்பாரிசாதபுட்பம் கொண்டுவரப்போகிறது

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
இஞ்சிசிறும்பெண்ணே என்றேயெழுந்திருந்து
கெண்டிமிங்கால்களுக்கு செரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டிமிங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்திமிங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தக்கப்பூச்சல்லடமாம்
தட்டுவரிந்துகட்டி தாமரைப்பூச் சுங்குவிட்டு
தெண்டாயுதமெடுத்து சிலைவீமன்வாரானே
ஆற்றங்கரையோரம் அந்தவீமன்வாரானே
பூமரத்தைத்தேடியே போறானேவீமனவன்
யோசனைக்குயோசனை உயரமுள்ளபூமரமும்
இதுவென்னதிருமரம இட்சணமேபெசொன்னவா
ஏழுசுற்றுவேலிகளாம் இருபக்கமுமேயும்
மாமலைதன்னிலே வல்லுணமார்காவலதாம்
பூவனத்திற்போகவென்று போனவில்வீமனவன்
வாசற்படியிலே வல்லனுமார்படுத்திருந்தார்
கண்டாரனுமாரும் சிரிவீமனைப்பார்த்து
வீமனுக்கும் அனுமாருக்குஞ்சண்டையாகிப் பின்புசமாதானப்படுதல்.
ஆடாராட்சதனே அஞ்சாமற்போகவந்தாய்
இந்தவனத்திலே எதுக்குப்போறாயென்றும்
போகவிடேனென்றானே போராணனாபோது

வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
கோபம்வருகுது கோலாகலவீரனுக்கு
சாணுண்டுஇக்குரங்கு தடைபடுத்துதென்றுசொல்லி
கைரெண்டும்நீட்டியே கட்டழகன்வீமனவன்
கோடையிடிபோலே குத்தினான்நடுமுதுகில்
அந்தஅடிசத்தம் அந்தவனம்கிடுகிடென்ன
அந்தவனத்திருந்த அநேகமிருகமெல்லாம்
மறுகாலொருவனத்தே மருண்டோடுதேமிருகம்
அனுமாருடரோமங்கள அயர்ந்துகொடுத்ததுகாண்
கோபம்வருகுது கோபாலதூதுவர்க்கு
என்னையடித்தவனை இட்சணமேகொன்றிடுவேன்
என்றுசொலலித்தானெழுந்துநின்றானே நல்லனுமான்
அடித்தானேவீமனை அடிவானத்திடிபோலே
கோடையிடிபோலே குத்தினான்பார்கலங்க
அந்த அடிபட்டவுடன் அங்கேகளைத்தானும்
மண்மேல்விழுந்தானும் மல்லாந்தபாவனையாய்
விழிகள்பிதுங்கியே விழுந்தானே மூர்ச்சையதாய்
மாண்டவன்போலே மண்மேல்விழுந்தானே
அநேகநெடுநேரம் ஆனபிறகாக
மூர்ச்சைதெளிந்து முடிமன்னன்தானெழுந்தான்
கண்டானேநல்லனுமான் கடுகியவனேதுரைப்பான்
என்னுடையசண்டையிலே எவரும்பிழைத்ததில்லை
இவன் ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
அடித்தஅடியோடே அவனியில்விழுந்தவன்காண்
தவறியெழுந்தவன்காண் தப்பிப்பிழைத்தானே
என்றுமனதிலெண்ணி இயலனுமானேதுரைப்பான்
ஆரடாராட்சதனே ஆங்காரமுள்ளவனே
ஆரென்றிருந்தீர்நான் அரிராமதூதனல்லோ
லங்கையழித்தவன்நான் ராவணனைவென்றவன்காண்
அஞ்சனாதேவிபெற்ற அனுமந்தன்நானல்லவோ
என்னோடெதிர்த்தவனும் இனிபிழைக்கப்போறீரோ
என்றவுரைகேட்டு இயலானவீமனவன்
உற்றதுகேட்டு மெத்தப்பயந்தவனும்
அண்ணரென்றறியாமல் அமரதுசெய்தோமே
என்று பச்சைத்தழையுருவி பாதத்திற்றான்போட்டு
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டான்
ஐங்கால்வலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கந்தெண்டனிட்டான்
கண்டாந்தநல்லனுமார் கடுகியேயதுரைப்பார்
ஆரடாதம்பீநீ அரியவுரையுமென்றான்
உன் ஊரேதுபேரேது உன்னுடையபேரென்ன

ஆருடையபுத்திரன்தான் அறியவுரையுமென்றான்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
என்தகப்பன்வாயுராஜர் என்தாயார்குந்தியம்மாள்
மந்தாரக்குந்தியம்மாள் பெற்றெடுத்தமகாராஜன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலமணிகளைவருண்டு
தருமராசர்தம்பி தாக்குடன்வீமனென்பேர்
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வான் நல்லனுமான்
உத்தமனேநாமிருவர் ஒக்கப்பிறந்திறல்
என்னுடையசண்டைக்கு எவரும்பிழைத்ததில்லை
தம்பியென்றதாகையினால் தப்பிப்பிழைத்தீரோ
மாளாமல்நீபிழைத்தாய் மதவீமனாகையினால்
என்று ஒருவர்க்கொருவர் உறவாடித்தானேபேசி
ஏதுவகையாக யிங்குவந்தாய் தம்பியரே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனவரேதுசொல்வார்
இந்தவனமதனில் வந்தோம்வனவாசம்
பாஞ்சாலன்பெற்றமகள் பஞ்சவர்னற்கிளியாள்
பாரிசாதப்பூமலரை பார்த்தாசைபட்டாளாம்
காணாதப்பூமலரைக் கண்டாசைபட்டாளாம்
பாரிசாதப்பூமலரைப் பறிக்கவென்றுயிங்குவந்தேன்
வேண்டிவந்தப்பூமலரை வேல்வேந்தர்தாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுமந்தனேதுசொல்வான்
குருபாரிவனத்தில் கோடியுங்காவலர்கள்
ஏழுலட்சங்குண்டிவர் இவ்வனத்திற்காவலுண்டு
இத்தனைகாவலிலே எப்படிக்குப்போய்வருவாய்
அந்தரியிற்பறித்தால் ஆக்கினைசெய்திடுவார்
கொல்லநினைப்பாரே குடிகேடுவந்திடுமே
ஆருமறியாமல் அவருடையபுட்பவனம்
என்னசெய்வேன்தம்பியரே எப்படிப்போய் நீவருவாய்
உனை வால்முனையிற்கட்டித்தான் வனத்திலேவிட்டிடுவேன்
ஆருமறியாமல் அம்மலரைநீபறித்து
வாலையசக்கிவிட்டால் எடுத்துதானவந்திடுவேன்

வீமன் அனுமான்வாலின் வழியாகச்சென்று ராட்சதரை யெல்லாங்கொல்லுகிறது

என்று வாலிலேகட்டினான் மதகரியான்வீமனைத்தான்
வாலைக்கிளப்பி வனத்திலேபோகவிட்டான்
இந்தவனப்பூவெல்லாமறியவென்று
வாலையவிழ்த்தானே மதகரியனப்பொழுது
அசக்கிவிட்டாவென்றுசொல்லி அனுமாரும்வாங்கினார்
வீமனைக்காணாமல் மெத்தமனந்தளர்ந்தார்
ஆயாசப்பட்டு அனுமந்தன்தானிருந்தான்

வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கவென்று
சுற்றிவருகிறான் சுந்தரமாய்வனத்தை
மல்லிகைமுல்லை மலரோடுசெண்பகமும்
பாரிசாதபுஷ்பமரம் பரிமளம்வீசுகுது
வீசுகின்றபுட்பமரம் வேருடனேபிடுங்கி
படுத்துப்புரண்டானே பரிமளத்தைதானறிந்து
அந்தவனமெல்லாம் அதம்பண்ணுனபோது
பூமரங்களைவீமன் அதம்பண்ணகாவலர்கள் வந்துசண்டைபண்ண
இறந்தவர்போக மற்றவர் ரிஷியாருக்குச்சொல்லல்
அந்தவனத்திலே அனேகம்பேர்ராட்சதரும்
எல்லவருந்தான்வந்து எட்டினார்வீமனண்டை
வந்துவளைத்தார்கள் மதகரியான வீமனுடன்
எட்டினார்சண்டை எழும்புதுசமருமப்போ
ஒருவற்கொருவர் யுத்தங்களாகுது
வெற்றிமதயானை வீமன்வெகுண்டெழுந்து
அடிப்பான்கதையாலே அனேகம்பேர்கீழேவிழ
அனந்தம்பேர்ராட்சதரை அதமாக்கிக்கொன்றனே
இந்தவிதமாக எண்கோடிராட்சதரை
கொன்றுவதைத்தானே கோடானகோடிகளை
கொன்றவர்தான்போக நின்றதொருராட்சதர்கள்
குருபாரிஷியருகே கொப்பெனவோடிவந்தார்
அபயமபயமென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
எதுக்கபயமிட்டீர் என்னகருமமென்றார்
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
சிங்காரமாவனத்தைச் சீரழித்தான்பாவியவன்
மரங்களைத்தான்பிடுங்கி வனமெல்லாம்அதமாக்கி
எழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
இவ்வார்த்தைகேட்டு எரிக்குமகதிரவன்போல்
காயுங்கதிரவன்போல் கண்சிவந்தார்குருரிஷியும்
கோபம்வருகுது கொடுங்காலருத்திரன்போல்
என்னுடையபூவனத்தில் எவரும்வருவதில்லை
தேவர்முனிவர் தீண்டொணாபூவனத்தை
ஆரடா தூதுவரே ஆயிரம்பேர்போங்களென்றார்
கைப்பிடியாய்த்தான்பிடித்துக் கடுகெனவேகொண்டுவாருங்கள்
என்றசத்தங்கேட்டு எழுந்தார்களாயிரம்பேர்
வாய்வேகமாகவே வனத்திலேபோயிறங்கி
ஆடாராட்சதரே ஆங்காரகோபமுடன்
வனத்தையதமாக்கி வந்தவனைக்கொன்றவனே
எங்களுடையபெருமை இட்டுவைச்சொன்னரோ
குலத்திற்பெரியவர்காண் குருபரமகாரிஷியும்

உன்னை அழைத்துவரச் சொன்னார்காண் ஐயருமிப்போது
கடுகெனவேவாருமென்று கையைப்பிடித்திழுத்தார்
கைபோடேகைப்பிடித்தான் சட்டியேகையைவிட்டார்
ஆயிரந்தூதுவரை அரைக்ஷணத்தில்தட்டிவிட்டான்
அத்தனைபேரையும் அவனொருவன் கொன்றுவிட்டான்
ஈரொருவன் தப்பிவந்தே தன் நல்வார்த்தைசேதிசொல்ல
என்றவன் கூறலுமே எழில்குருபாமுனிகேட்டு
கோவைப்பழம்போலே கூரவிழிகள்கண்சிவக்க
சவுரிப்பழம்போலே தன்னிரண்டுகண்சிவக்க
நெருப்புப்போல்கண்சிவக்க கெறுகெறெனவேபல்கடித்து
கலாசமனமெழும்பச் சாலெனன்றுமேதான்றுபல்
தானெழுந்து சபிக்கமனந்தானாகி
ஏறினார்கனகதண்டி எழில்குருபாமுனியவரும்
பாரவனத்திருக்கும் பங்களாதன்னருகே

பஞ்சபாண்டவர்களைச் சபிப்பதற்காக குருபா
முனிவருகிறதை எம்பெருமாயரிந்து அனை
வரையும் சமாதானப்படுத்துதல்

வருகிறவேளையிலே மாயவரிதுவறிந்தார்
காவலர்கள்பஞ்சவர்க்குக் கைமோசம்வந்ததே
மோசந்தான்வந்து மிடுக்குதேபஞ்சவர்க்கு
பொல்லாதகாலம் பிறந்ததைவர்க்கு
ஆகாதகாலம் ஐவர்க்குவந்ததையோ
உள்ளங்கைநெல்லிக்கனி உருக்குலைந்துபோகுதையோ
தோளில்செபமாலை தொண்டழிந்துபோகுதையோ
பெட்டியிலேதாரணம் பெருமைகுலையுதையோ
எழில்குருபாரிஷியுடனே எதிர்ப்பாரொருவரில்லை
மாமாக்கிரோதாக்கினிதன்னிலே கொன்றிடுவார்
ஐவரைக்கொன்றிடுவார் அனர்த்தம்வராமலே
காத்திடவேதானே கடைபோகக்காப்போமென்று
அட்டாங்கருடனேறி வாராரேமாயவனார்
ஐவரிருக்கும் ஆரணியம்வந்துவிட்டார்
சாயாம்புமன்னன் தருமருங்கண்டாராம்
எடுகியெழுந்திருந்து கார்வண்ணனைத்தொழுது
சரணமடைந்தாரகன் தர்மமுடிராசாக்கள்
இங்காதனங்களிட்டார் ஸ்ரீராமர்வீற்றிருக்க
இட்டசிங்காதனத்தில் ஏறியிருந்தாராம்
சாயாம்புமன்னர் தருமவரேதுரைப்பார்
இன்னேரவேளையிலே எம்பெருமானிங்குவந்தீர்
அடியாரைத்தேடியோ ஆண்டவரேவந்ததென்ன
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
அடியனுக்குமாயவனார் ஆதிமூலமேதுசொல்வார்

நால்வரிருக்கையிலே நல்லதம்பியெங்கேயென்றார்
வெற்றிமதயானை வீமராசனெங்கேயென்றார்
தருமாறியேனென்றார் தப்பியரைக்காணேனென்றார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
பாரிசாதமலரைப் பார்த்தாசைப்பட்டேனையா
பிரியமாய்வேண்டுமென்று பிணங்கினேன்வீமரண்டை
பூபறித்துவாரேனென்று போய்விட்டார்வீமராசன்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
கைமோசம்வந்ததுகாண் கபடமில்லா தருமராயர்
ஐவர்பஞ்சபாண்டவரே அனர்த்தம்வரநாளாச்சே
குருபாரிசிவனத்திற் கொப்பெனவேபோய்புகுந்தான்
மரத்தைப்பிடுங்கியவன் வனநாசமாக்கிவிட்டான்
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டான்
அந்தவனத்தை அதமாக்கினபடியால்
கொல்லவருகிறார் கொப்பெனவேமாமுனியும்
தவத்திற்பெரியவர்காண் சகலகலைவல்லவர்காண்
வரத்திற்பெரியவர்காண் வல்லகுருமாமுனியும்
அதிகசாபம்தானிடுவார் ஐவரைக்கொன்றிடுவார்
என்னசெய்யப்போறேனென்று எம்பெருமாள்கூறுகையில்
அஞ்சிப்பயந்துமல்லோ ஆண்டவற்கேதுசொல்வார்
இத்தனைநாள்காத்தீரே இன்றுகையைவிட்டீரோ
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்தீரே
அம்பலவாசலிலே அபிமானங்காத்தீரோ
ஆபத்தைத்தீர்க்கவந்த ஆண்டவரும்நீரலவோ
உம்மைவிடவேறெமக்கு உற்றதுணைதானுமுண்டோ
காக்கக்கடனுனக்கு என்றுமவர்கைதொழுதார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
குருபாரிசியுடனே பேசிக்கொண்டுதானிருப்பேன்
அப்போதுநாலுபேரும் அந்தவழிவந்திடுங்கள்
தருமரேயும்மைநான் தாழ்ந்துவணங்குகிறேன்
உன்னைவணங்கினால் வுபசாரவார்த்தைசொல்லும்
ஆரென்றுகேட்பாரே அந்தக்குருபாமுனியும்
உம்மிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுவுரைத்தாலே எழுந்துவணங்கிடுவார்
வணங்கிநமஸ்கரிப்பார் வாழ்த்தியெடுத்தணைப்பீர்
வெற்றிமதயானை வீமனெதிர்வந்தாலும்
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்பேன்
அந்தரிஷியாரும் ஆரென்றுதான்கேட்பார்
உன்னிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுசொல்லிநானிருப்பே னிவ்விதமாய்ச்செய்யாவிட்டால்
அந்தகுருபாமுனியும் அனர்த்தம்பண்ணிப்போட்டிடுவார்

ஆகையால்நான்போறேன் ஐபரேபின்வாரும்
என்றெழுந்தாராம் இயலானமாயவரும்
வாரசர்பெருமாளும் வனத்தூடுதான்நடந்து
குருபாமுனிவெதிரே கொப்பெனவேவருகையிலே
மாயவனைக்கானுகையில் வணங்கினார்குருபாமுனி
ஒருவர்க்கொருவர் உறவாடிபேசினார்கள்
மாயன்பெருமாளே வனத்திலேயெங்குவந்தீர்
இந்தவனந்தனிலே துவகையாகவந்தீர்
வந்தவகையதனை வாய்திறந்துசொல்லுமென
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வனசாரியாகவே வந்தேன்குருபாமுனியே
வந்தவிடத்திலிந்த வனத்திலுமைக்கண்டேன்காண்
இன்னேரவேளையிலே எங்குவந்தீர்சொல்லுமென
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
வனத்திலேபோய்புகுந்து மரங்களைத்தான்பிடுங்கி
வழுவட்சந்தூதுவரை எல்லவரைக்கொன்றிடுவான்
பொல்லாதபாவியைக் கொல்லவென்றுபோறேன்காண்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிராமமேதுசொல்வார்
உம்முடையவனத்திலே ஒருவர்வரப்போரதில்லை
தெய்வலோகத்தாரும் தீண்டாதபூவனத்தை
அமரர்சித்தமுனிவராலும் ஆகாதுன்வனமழிக்க
உருபிடக்குறன்வனத்தை அதமாக்குப்பாலகனை
இட்சணமேகொல்லுகிறேன் இட்டுவரச்சொல்லுமென்றார்
இருவருமாகவே அமர்க்கொல்லவென்று
ஆடாததாவிலே அழைத்துவாராட்சதனை
என்றுஅவர்பேசுகையில் இயலானதருமரவர்
சகுனித்தானனுப்பி கவ்வியர்க்கேதுரைப்பார்
அண்ணருந்தம்பியரும் ஆதிநாராயணரும்
குருபாரியருகே கூடியேயிருப்பார்
சொல்லவென்றதூதுவரை கட்டியுரைச்சொல்வார்கள்
அப்போதுதூதுவர்கள் எழுந்தும்மைதான்வருவார்
வந்தவுடனுமமை வணங்கியேஸ்தரிப்பார்
அப்போதுநீர்னும் ஆசீர்வாதப்பிரமா
சொல்லிவரச்சொன்னார்காண் சரிசமுடனேயென்று
தருமரிவையுரைக்கத் தாமேதநகுலனுமே
வாயுவேகமாகவே வந்துவிட்டானவீரனண்டை
அண்ணுமதனீமா அண்ணருக்கிருஷ்ணரும
இப்படிக்குச்சொல்லச் சொன்னார்களென்னையென்
வீமனுக்குச்சொல்லிவந்து விட்டான்நகுலனுமே
வனத்திகுருபரிடம் வந்துவிட்டான்நகுலனுமே
தம்பிமார்புடைசூழ தருமர்வருகையிலே

அருகேவரப்பார்த்து அரிராமர்தானெழுந்து
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்க
பார்த்தார்குருபாரிசி பயந்தவருமேதுசொல்வார்
எந்தவூர்எந்தநாடு இவர்பேச்சைசொல்லுமென்றார்
ஜெபத்திலும்தபத்திலும் செய்நிடுமோர்நிஷ்டையிலும்
அதிகமுடையவர்காண் அழகானதருமரிசி
ஆதிகயிலாசம் அரனிடந்தனிலே
உன்னுடையபேர்விளங்க ஒருமணியடிபடுது
முனிவர்பேரிலே மூன்றுமணியடிபடுது
அன்னதானங்களிலே அதிகமுடையவர்காண்
யோகத்திற்பெரியவர்காண் அக்னிலும்வல்லபிரான்
ஏறெடுத்துப்பார்த்தாலே எரிந்துவிடும்லோகமெல்லாம்
பொய்வசனஞ்சொல்லாதார் புகழானதருமரிசி
தருமரிசியாரை தழுவியணைத்துக்கொண்டு
சிங்காதனத்தில் சிறாகவீற்றிருந்தார்
தக்கபுகழுடைய தருமரிசியேதுசொல்வார்
சாமிபெருமாளே சந்நியாசியானவரே
இருவருமாகவே இங்குவந்தவாறேது
என்றுநான்சொல்லுகையில் ஏதுசொல்வார்குருபாரிசி
தருமரிசியாரே சாமியேநீர்கேளும்
என்னுடையதோட்டத்தில் எவரொருவர்வந்ததில்லை
அந்தரலோகத்து அமரர்கள்வந்ததில்லை
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
வந்துபுகுந்து வனத்தைப்பாழாக்கினான்
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டான்
ஆகையாலிங்குவந்தேன் அவனை அதமாக்கவென்று
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமரிசி
உம்முடையதோட்டத்தை அழிப்பாரொருவரில்லை
இங்கேயழையுங்கள் இக்ஷணமேஜெயித்திடுவேன்
என்றவர்சொல்லுகையில் இட்டுவந்தார்வீமனை
திக்கெனவேதானெழுந்து ஸ்ரீராமர்மாயவரும்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்வீமருக்கு
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
கண்டார்குருபாரிசி கடிகியேயேதுசொல்வார்
அவன்பாரென்றுதெண்டனிட்டார் ஆயன்பெருமாளே
ஆறுலுங்கேளுமையா அரியரிசியாரே
ஆதிகயிலாசம் அரனிடந்தனிலே
உம்முடையபோராலே ஒருமணியடிபடுது
தருமரிடபோராலேமூன்றுமணியடிபடுது
அந்தரிசிபோராலே ஐந்துமணியடிபடுது

யோகத்திற்பெரியவர்காண் உத்தமரிஷியாரும்
ஆதிசிவனிலும் அதிகமுடையவர்காண்
தினமூன்றுவேளையிலே திரவியக்களஞ்சியங்கள்
அவரிருக்குமிடங்களிலே அன்னக்களஞ்சியங்கள்
ஆரோனவரோ அறியாமற்கொல்லவந்தேன்
இன்றுஅவர்நினைத்தால் எல்லவரைக்கொன்றிடுவார்
என்றுசொன்னபோதே எழுந்தார்தருமரிஷி
தருமரிஷியெழுந்திருந்து சாஷ்டாங்கதெண்டனிட்டார்
குருபாமுனியங்கு கொப்பனவேதெண்டனிட்டார்
அடியார்கள்செய்ததெல்லாம் அய்யாமனம்பொறுத்து
தெரியாமற்செய்ததெல்லாம் தேவர்மனம்பொறுத்து
வனத்தைவாழ்த்ததொரு மகிமையைச்சொல்லுமென்றார்
ஆசனம்போட்டார்கள் அமர்ந்துகொலுவிருந்தார்
அப்போதவமரிஷி அங்கவர்க்குவரமுசெய்தார்
குருபாரிஷிபெருமை குவலயத்திற்சொன்னார்கள்
அந்தப்பேர்சொல்லுகையில் அதிசயபட்டிருந்தேன்
பார்க்கப்பிரியமாக பாருலகில்நான்திரிந்தேன்
அங்கவனத்திலே அனந்தங்கோடிராட்சதர்கள்
என்றனைக்கொல்ல எழுந்தார்கள்தூதுவர்கள்
அவரென்றறியாமல் அல்லவருங்கொல்லவந்தார்
அக்குருவர்வந்திறும் அல்லவரைக்கொன்றுவிட்டேன்
இதுவேதருமமென்றான் இயலாணவீமரிஷி
குருபாமுனிவரும் கொப்பெனவேதெண்டனிட்டு
அடியார்கள்செய்ததெல்லாம் ஐயர்மனம்பொறுத்து
பாக்கியஞ்செய்ததினுல் பாதங்கிடைத்ததுகாண்
கருதிதவஞ்செய்தாலுங் காணஅரிதாகும்
கார்த்தபடியாலே பாவந்துலைந்துவிட்டேன்
பாராததேவர்கள் வந்தபடியாலே
என்னுடையஆச்சிரமம் எல்லாரும்வாருமையா
பாலடிசிலுண்டு பழவர்க்கம்தான்புசித்து
போசனஞ்செய்துநீங்கள் போவீர்கள்வாங்கவென்று
குருபாரிஷியாரும் கொப்பெனவேதெண்டனிட்டு
பட்டுரத்னப்பாய்போட்டுப் பாய்மேலேவீற்றிருந்தார்
மாயவருந்தருமரிஷி மதம்பெரியமாமரிஷி
தம்பிமார்நால்வருடன் தாமுங்கொலுவிருந்தார்
குருபாரிஷியுமங்கே கொப்பெனவேதானெழுந்து
தாதுவரைத்தானழைத்துச் சொல்லுவாரோர்வார்த்தை
ஆயிரக்கலஅரிசி அடிசில்சமையுமென்றார்
காயுங்கனியுங் கறிகளமையுமென்றார்
நல்லபொரிக்கறியும் ராசாக்கள்போசனமும்
அடிசில்சமைத்தேனென்று அடிவணங்கிதெண்டனிட்டார்

குருபாமுனிகேட்டு கோப்பெனவேதாமெழுந்து
கடுகசரணமென்று கைக்குச்சலங்கொடுத்தார்
பலாயிலைதைத்துப் படைத்தார்களன்னமதை
சமைத்திட்டசாதங்கறி தானேபுசித்தார்கள்
உபசாரம்பண்ணியவர் உண்ணுங்கள்சாமியென்றார்
அத்தண்டபேரும் அமுதுபுசித்தார்கள்
சந்தனம்புட்பமும் தாம்பூலம்வாங்கிக்கொண்டார்
அத்தண்டபேரும் ஆலிங்கனஞ்செய்துகொண்டார்

பஞ்சவர்களைந்துபேரும் பெருமாளுமவரவரிடஞ்
செல்லுகிறது.

போய்வாரோமென்று போதநடந்தார்கள்
பர்னசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்
ஏழுலகையாண்டவராம் எம்பெருமானேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமன்செய்தகாரியத்தை
நாமிருந்தபடியாலே நாடியுமைக்காக்கவந்தோம்
அல்லாதேயாமானால் அனைவருமாண்டிடுவார்
எங்கேயிருந்தாலும் இடால்லேசெய்திடுவான்
ஆகாதகாரியங்கள் அழும்புகள்செய்யலாமோ
இந்தவனத்தைவிட்டு ஏகுங்களடுத்தவனம்
அந்தவனத்தில் ஐவரும்போயிருங்கள்
ஆண்டுகழிந்தது அவ்வனத்தில்போயிருங்கள்
போய்வாரோமென்றுசொல்லி போகலுற்றாரெம்பெருமான்
எட்டாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு

எட்டாவது குருபாமுனிவனம் முற்றிற்று.

9 வது, ரோமரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைசாமானத்தில்
கோலிவைத்தசிம்மாடு கூடைதலைமேல்வைத்தார்
மண்ணிவைத்தசிம்மாடு கூடைதலைமேல்வைத்தார்
ரோமரிஷிவனத்தில் துரிதமுடனேவந்தார்கள்
ஐந்தடுக்குபர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்குவேளையிலே
நெஞ்சில்ரோமமாமுனியை நினைத்தார்தருமராசர்

ஐவரிடத்துக்கு ரோமரிஷியவர் தருமர் தனதுதுன்
பத்தை அவரிடத்தில்சொல்ல அவர்
அதற்குவழிமானஞ்சொல்லுகிறது.

ஆசனம்போட்டு அடிபணிந்தார்தருமராசர்
எந்தவூர்எந்தநாடு எங்கிருந்து இங்குவந்தீர்
ஊரேதுபேரேது உத்தமனேசொல்லுமென்றார்

வர்த்தமானமதை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுதருமலிங்கம் ஆண்டவருக்கேதுரைப்பார்
குருகுலவம்மிசத்தில் குந்திமைந்தரைந்துபேர்கள்
தருமன்காண் வீமனவன் தம்பிதனஞ்சயனும்
நகுலசகாதேவ ராசாக்களைவரையா
தருமராசாவென்னுந் தாரணியையாண்டிருந்தோம்
பங்கும்பகையாளி பாதிநாள்தாயாதி
செங்கமப்பகையாளி சேனைநாள்தாயாதி
பெரியதந்தைபிள்ளை போரான்திரியோதிரன்
இவனைக்கொல்லவென்று ஆலோசனைதேடி
விருந்துண்ணவாருமென்று விருந்தோலைதானனுப்ப
மெய்யானதுவென்று விரைவாகப்போனேனையா
வாரவழிதனிலே வைத்தானே தண்ணீர்பந்தல்
வசநாபி தண்ணீர்பந்தல் வைத்தானேபாவியவன்
கொல்லநினைத்தானே கொப்பெனவேஎங்களைத்தான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தில்
பின்னுமொருயோசனையும் செய்தான்பெரும்பாவி
வருகிறவழியிலே வசிகளைநாட்டினான்
உருக்கூசிசெப்பூசி ஒருகோடிநாட்டினான்
எழுகூசியினைகமேல் இரும்பூசிதான்பிடித்தார்
கோடிமுள்ளுகத்திகளும் குழிக்கேபுதைத்துவைத்தான்
பாண்டுமடிவாரென்று வசிகளைநாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தில்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
பொய்க்குழியைவெட்டியே போட்டுவைத்தார்சிம்மாசனம்
ஆழக்குழியிலே பட்டுக்கம்பு நிறுத்தி
ஆயுதங்களுடனே அள்ளிறக்கிவைத்தானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
என்னையிட்டுக்கொள்ளுமென்று எங்களுக்குச்சொல்லியவன்
ஏழுலட்சம்மல்லர்களை எங்களிடத்தானனுப்பி
என்னையிடச்சொல்லி எனதுயிரைவாங்குமென்றான்
அதற்குப்பிழைத்தோமே பாண்டவனார்புண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
அரசப்புதின்னைக்கொடுத்து அபிஷேகமாமென்றான்
பாரவசிகோட்டை வைத்தானேசீருடன்
பாரவசிகளைப் பர்வதம்போல்காட்டினானே
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
உண்ணுகிறசாதத்தில் ஒருக்கால்மருந்தையிட்டான்

குடிக்கிறதண்ணீரில் கொடிக்காரன்கனகாரமிட்டான்
தப்பிப்பிழைத்தோமென்றே சாமியுடைய வலியத்தால்
பின்னுமொருபிசகினை செய்தானே துரும்பாவி
சொல்லினேன்யாது சொக்கட்டான் சூதாடி
ராச்சியமிழந்து ராச்சியத்தைத்தோற்றுக்கொண்டான்
சேனைதுரைத்தனமுந் தோத்தனத்தைகொண்டான்
இனையூக்கெளித்து ஆள்காரருங்கொலித்து
கற்றுநாமூர்த்த கள்ளரையிடக்கிருக்கைத்தான்
இவருடதேவியாளை அப்பனத்திற்கொண்டுவந்து
தனைமடுடபெண்சாதி தாசெனன்றுமென்றுமான்
மூலையிலிருக்கபெண்ணை முற்றாத்தில்ழுக்குளைத்தான்
அப்பொழுதுபேர்த்திசவன் அவமானக்காழ்வுபண்ணுவன்
மாதுவிடன்தப்போதுவெண்ணும் வைய்யரினவேசிறுணல்
அரசர்சபைதனிலே அம்பலத்தித்துமானகன்முன்னே
சொல்லாததுசொல்லியே துகிலுரிந்தானே
பாரவனவாசம் பரதேசம்போனமேன்பு
பன்னிரண்டுவருஷம் பாரவனத்திரிந்து
அக்யாதவாசமேயே ஆண்டொருவருஷம்
வேஷமிட்டுவேயாரி வித்திருக்கவென்றுசொன்னான்
பதிமூன்றுவருஷஞ்சென்று பட்டணத்தில்வர்த்தாக்கால்
பக்குள்ளபிரகாரம் பாதிதேசந்தருவேனென்றான்
ஆகையாலாண்டவரே ஆரண்யமாய்த்திரிந்தோம்
வருஷமொன்றுதப்பிதில் வந்தோமிவ்வனந்தனிலே
உங்கள்வனத்திலே ஒருவருஷம் வாசம்
உட்கையாருக்கிறோமே உன்வையுன்னரசிக்யாரோ
இந்தவனத்திலே இருக்கச்சொலவருணும்
என்றவசோதருமர் இறங்கியேதண்டனிட்டார்
வைதந்திதபேர்கள்தால சன்யாசியானவரும்
உத்தமராக்கேட்டாரே உரோமசரிஷியாரும்
குபாசப்பட்டுமனம் அதினைமனதுசலித்து
இந்தவனவனத்தில் இடமுமெயதபாவியவன்
சொல்லியேக்கதானே கொடும்பாவிதிரியோதனன்
கடுமெடுப்பதில்லை ராச்சியக்கருவதில்லை
வெகுசொப்பதில்லை பக்கதனைத்தருவதில்லை
இவர்தனிகைவொருவன் அரவபதியேபாவிராஜன்
துரிரியவளைகயில் அமரிராமியேபருமெபற்றான்
மாற்றுக்கொள்ளிடாமல் வையகத்தைதுண்டுபடலாம்
அல்லாதேயாரும் அரசனக்குறிட்டாது
என்றவர்சொல்லுகையில் ஏதுசொல்வார்தருமராயர்
இவர்போலொருவர் அக்கிரமைதனையாரேசென்றால்
சுயர்சொல்லாது ஆரதொருக்காரும்

மாயன்சொல்லல்லாது மற்றொருவருமாகாது
அவ்வார்த்தைதனைக்கேட்டு அரிவிதுரரேதுசொல்வார்
மாயன்பெருமானே வாசலைநாடியிருக்கிறேனென்றார்

தருமர் எம்பெருமானை விதுரர் தோத்திரம் பண்ணுகிறது.

சாயாப்புயன்னவனார் தருமராஜனேதுசொல்வார்
அநாதநாதனையமனே ஆண்டவனேவாருமென்றார்
ஏழுலகையாண்டவனே எம்பெருமானேவாருமென்றார்
மாசறுவலியோடே பாற்கடலிற்பள்ளிகொண்டாய்
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆண்டவனேவாருமென்றார்
தருமர்மறுகதவையில் சாய்வாரழைத்து

தருமர் தோத்திரம்பண்ணினதைப் பெருமானறிந்து தருமரிடம்வருதல்.

ஏழுலகையாண்டவராம் எம்பெருமான்வாராராம்
வட்டமலைசூழுடனே மாயவரும்வந்துவிட்டார்
ஆபரணமுனைமயில் இருக்கப்பொருந்து
முக்கனல்லவர்தாமுழுவனைக்கிதெண்டனிட்டார்
தெருத்தும்வாமனைநெருங்கு சிங்காதனம்போட்டார்
சிங்காதனத்தின்மேலே ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
கண்ணேயமைபூத்தது வருகருமென்றார்
பண்டுபிறுக்கினதுமயமாறுதையுமென்றார்
சாயாப்புயன்னவனார் தருமராஜனேதுசொல்வார்
மற்றொருவர்நாமில்லையோ மாயனேநீர்கேளும்
இந்தவனத்திலேயிருக்கிறோமரியே
மழுவினைதரித்தது வனமதிலேயுபவசித்து
ஆலமதிறேன்கேட்டார் அரிதானமாமுனியும்
மந்தருமத்தை வார்த்தையெனவைப்பதறைத்தேன்
திருவேபரிதான்செய்த நீதியெனவைப்பதறைத்தேன்
அத்தனையுங்கேட்டு ஆயாசப்பட்டவர்காண்
இனிமேலதொருவரையும் அடையாதிருப்போகவென்றார்
பஞ்சவரிலொருவரையும் பாயாதுபோக்கவென்றார்
ஆதிசிவனிடத்து அஸ்திரப்பெற்றுவந்தால்
பார்த்தனேவென்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
போக்கவெனவுரைத்தார் புனிதமகாமுனியும்
ஆகையாலும்மை அழைத்தேனென்றார் அந்தரியே
மயக்குமிடாதேவர்நீலவந்தீரேமாயவரே
இனியிடக்குக்காரியங்கள் எம்பெருமான்சொல்லுமென
ஆயன்பெருமாளும் அவருமங்கேதுசொல்வார்
வாரும்பெரியவரே வையவாழ்க்கைபோதனரே
இவருடையார்த்தை அதிகாரமெத்தனக்கேன்
பஞ்சவர்கள்தங்களுக்குப் பாட்டனிருக்கின்றார்காண்

அவரையுமிங்கே அழைத்தாற்போதரியுமென்றார்
வேதவியாசரை வேண்டியழையுமென்று

ஐவரும்வியாசபகவானை நினைத்துவணங்க
வியாசர் வருதல்.

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அங்கேதனேவேதான்வணங்கி
வேண்டிநமஸ்கரித்து வியாசரைக்கைதொழுது
வாருமென்றுதானினைக்க வந்தார்வியாசரிஷி
சடையுஞ்சடையழகும் தம்பிரான்போலேவாரார்
ஐவரிருக்குமந்த அடவியில்வந்தாரே
எழுலகையாண்டவனார் எதிர்கொண்டார்வியாசருக்கு
ஐவரெழுந்திருந்து அடிபணிந்தார் இருவருக்கும்
ஆயருஞ்வியாசருமே ஆலிங்கனம்பண்ணிக்கொண்டார்
ஆசனத்துமேலாக அனைவோரும்வீற்றிருந்தார்
வேதவியாசருமே வேந்தரைப்பார்த்துரைப்பார்
என்னகருமமாக என்னையழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தைபங்கேதுசொல்வார்
பரமன்பதம்நோக்கி பாரதவஞ்செய்யவென்று
பாசுபதம்பேருபெற்று பாரதத்தைவெல்லவென்று
ஆரைநாம்போகச்சொல்வோம் அரன்பாதம்காணுதற்கு
தருமரைப்போகவிட்டால் சாமிபதந்தானறியார்
வெற்றிமதயானை வீமனாலாகாது
நகுலசகாதேவ ராசராலாகாது
அருச்சுனரைப்போகவிட்டால் அரனாரைக்காணவல்லான்
பரமசிவனருகில் பாசுபதம்பேருபெற்று
வேணவரம்வாங்க விஜயனவர்வல்லவன்காண்
என்றுமவர்யோசனையாய் எழில்விஜயனைப்பார்த்து
பார்த்திபா அர்ச்சுனரே பரமன்பதிநோக்கி
ஆதிசிவன்பதிக்கு அருச்சுனாபோறீரோ
கைலாசபதியிலே கர்த்தாவைநீகண்டு
அதிகவரம்பேறுபெற்று அருச்சுனரேவாருமென
காண்டீபருச்சுனரும் காலையவரேதுசொல்வார்
அடியேனை அனுப்பிவைத்தால் அவசியம்போய்வாரேன்
அப்போபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
கைலாசம்போனாலே கட்டழகாசொல்லேன்கான்
ஏகும்வழிதனிலே இருப்பார்கள்வேணபெண்கள்
மினைல்ரம்பையூர்வசியும் மேனகைதிலோத்தமையும்
அழகில்மிகுந்தபெண்கள் அனேகம்பேர்தானிருப்பார்
கண்டால்விடுவதில்லை கடிகிமோகங்கொள்வார்
பார்த்தாசைபட்டாலே பார்த்திபாவிடுவதில்லை

கண்டோன் றுடையாரைக் காணவரிதாகும்
அல்லாதேபோனால் அருச்சுனைஉந்தனுக்கு
போரவழியிலே பெண்கள்தொடர்ந்தாலும்
தங்கைதமக்கையென்று தள்ளிவிட்டுப்போனாலும்
பார்த்தாசைப்பட்டாக்கால் பரமசிவன்பாதம்
எத்தனைகாலம் இருந்துதவம்பண்ணுலும்
பாரத்தவஞ்செயினும் பரமசிவன்காட்சிதாரார்
பரபத்தியிருந்தால் பரமசிவன்வந்தருள்வார்
அந்திபகலும் அதிராத்திரிவேளையிலும்
இன்னபுறவாதே சிவனைநினைந்து
மோனத்துடனே பிறைமூட்டி தவஞ்செய்தாலே
சிவனாபமைவிழித்து சேனைதாந்தருவார்
முப்பத்திரண்டுகோடி முனிவரெல்லாங்கூத்தாட
சதுபத்திரண்டாயிரம் ரிஷிகள்நடப்புரிய
பார்வதிசமேதராய் பரமசிவன்வந்திடுவார்
கோரும்வரங்களெல்லாம் கொடுப்பார்பரமசிவன்
அப்படிக்குபோகவுன்னு லாகுமோவாள்விஜயா
மெய்யுந்துறைக்கட்டு வாழ்விஜயனே நீசொல்லாய்
ஆதிசிவனைநான் அரைநாழிமறந்திருக்கேன்
போமாய்பெண்களென்மேலாசைபடக்கொண்டாலும்
வரவழிமறந்து வார்த்தைகள்பேசினாலும்
தாயென்பேன் தமக்கையென்பேன் சாமியேயென்பேன்
சத்தியவான்பெண்களை தவிர்வாய்வாங்கிவாரேன்
பேசச்சொல்லவுந்தன் போய்வாரேன்சாமியென்றான்
அதுவேயல்லாமல் வண்டனேயென்றனுக்கு
போகும்வழிதனிலே புதுமைகடந்தாலும்
சிவனார்பதியிலே செய்யுந்தவமழிக்க
மழேலைக்குறு சிவனாரும் வஞ்சனைகள்செய்தாலும்
எதுவினைவந்தாலும் எந்தனுக்குத்துணையாரும்
சாமிதேவசாகசன்றி வாங்கிவாரேன்வரங்களென்றான்
அப்போதுமபயவரும் அவ்வார்த்தைக்கேதுசொல்வ
போகும்வழிதனிலே பொற்கொடியாளைகள்சரி
அம்பலவாண்போலே அழகில்சிறந்தவள்தான்
அர்ச்சுனனேஉன்னையே அதிகவரம்பெற்றவள்தான்
உன்னைமயிரணைப்பண்ண உகந்திருக்கிறாள்தான்
அவள்வந்துவழிமறிப்பாள் வள்விஜயாமலைவரே
மாதரைக்கண்டு வார்த்தையொன்றுஞ்சொல்லாதே
தாயென்றும்தங்கையென்றும் தாய்வேந்தாசொல்லாதே
வரும்போதுபெண்ணையுன்னை மாலையிட்டுக்கொள்ளவென்று
சாயாம்புமேனியினை கண்டகருப்பழகா
தக்கதுசொல்லிப்போம் சாமியுடபதிக்கு

அதிகவரம்பெருபெற்று அர்ச்சுனரேவரும்போது
ஏலகன்னிமாதரை இளங்கொடியைமாலையிட்டு
வரும்போதுமாலையிட்டு வந்துவிடும்அருச்சுனரே
மற்றொருவினைவந்தால் வந்துநான்காத்திடுவேன்
போய்வாருமென்றுசொல்லிப் பெருமாள்செலவுதந்தார்

அருச்சுனன்சிவனைக்காண போலவதற்குச்சோடித்தல்.

சூலபாணிரூபம்போற் சோடித்தானர்ச்சுனனும்
எந்தெந்தமுள்ஸ்தீபு இளவிஜயன்தான்தரிப்பான்
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
குந்துசடையங்கே குலுங்க அருச்சுனற்கு
உள்ளமெல்லாம்லிங்கம் உடம்பெல்லாம்வெண்ணீறு
ஆவியெல்லாம்லிங்கம் அங்கமெல்லாம்வெண்ணீறு
காவிகாசாம்பரமுங் கட்டினன்அரைதனிலே
அன்றுரித்தமான்தோலும் கயிலாசமான்தோலும்
கன்றுபுலித்தோலும் கயிலாசமான்தோலும்
காதிலேகுண்டலமுங் கையிற்கமண்டலமும்
ஏகவேஷ்டிதானணிந்தான் இயலான அர்ச்சுனனும்
பிரமமுடித்தாழ்வடங்கள் பெரியருத்திராட்சமணி
பஞ்சமணிதாழ்வடமாம் பலவிதமாலைகளாம்
நாகபாளிக்கங்கணமாம் லாடமிகச்சங்கிலியாம்
வேலாயுதம்சூலாயுதம் வெண்புலித்தோலாசனமாம்
அரைசற்றுக்கிண்கிணியாம் அழகுமயில்தாழ்வடமாம்
குருயோகபுத்தகமாம் சுரையோடுகமண்டலமாம்
கஞ்சாக்குடுக்கைகளாம் கௌதமர்ஜோளிகளாம்
சங்குஜெயகண்டிகை தானணிந்தாருச்சுனனும்
கனுக்கால்சிலம்புகளாம் காலில்மிதியடியாம்
அஷ்டாபரணமெல்லாம் அருச்சுனன்தான்தரித்தான்
வியாசரும்டாயவரும் மிக்கவாமொன்றுதந்தார்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
ஐவர்களுந்தனுககு சிக்கிரம்தந்தோமென்றார்
போய்வாருமருச்சுனரே பொன்னுலகந்தான்தேடி

அருச்சுனன் ஈஸ்வரரைக் காணப்போகிறது.

அந்தச்சமயத்தில் அருச்சுனனுந்தானெழுந்து
எல்லாரையும்பணிந்து எழுந்தானருச்சுனனும்
போய்வாரேனென்றுசொல்லி போனானருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அந்தவியாசருமே
எல்லாரையும்வாழ்த்தி யிருவருமேபோய்நடந்தார்
மாயன்பெருமாளும் வாழ்கருடன்மேலேறி
இவரைவாழ்த்தியே அரிராமர்போய்நடந்தார்
வில்லேந்தாருச்சுனனும் விரைவாய்வனந்தாண்டி

காடுசெடிதாண்டி கடுகியேவாரானே
அரனையவன்காணவென்று அதிதுரிதமாகவாரான்
சிவசிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வாரானே

எம்பெருமாள்பெண்வேஷமாய் வருகிறது.

அருச்சுனன்நினைவறிய அரிராமரேதுசெய்வார்
யோககன்னிபெண்போல முடிமன்னர்வடிவுகொண்டார்
சின்னஞ்சிறியபெண்ணாய் ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
மின்னலொளிபோல மேகவண்ணர்வடிவெடுத்தார்
அல்லார்தலைமயிரும் ஐந்துமுழம் ஆறுமுழம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துநான்குமுழம்
நாசாம்பழத்திலும் கருத்தகருப்பழகும்
நச்சம்பழத்திலும் இருண்டகறுப்பழகும்
வாரிக்குழல்முடித்து வான்சவுரியுட்சொருகி
கொண்டைக்குக்குப்பியிட்டு கொலுசுமுத்துதொங்கவிட்டு
கம்மல்ஜிமிக்கிகளும் காதிலேயிட்டாளும்
கழுத்திலணிந்தாளாம் கனகமணித்தாழ்வடமும்
கல்லுதொருபொன்காரை நடுக்கழுத்திலேதரித்தாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுறமாய்ப்பொன்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இருபுறமாய்ப்பொன்தாலி
முத்துச்சரப்பணியாம் மோகனமாலைகளாம்
அரைக்கிசைந்தவொட்டியாணம் ஆடைமேற்றரித்தாளாம்
காலுக்குதண்டைகளாம் சலத்துகொலுசுகளாம்
காலாழிபீலிகளும் கல்லணையும்புல்லணையும்
அழகுபணிகளெல்லாம் அலங்காரப்பண்ணினார்
கதம்பமுஞ்சந்தனமும் கஸ்தூரிமணங்கள்வர
அன்னம்போல்நடந்து ஆண்டவனார்வாராரே
அருச்சுனன்போனவழிதாரு அடவியிலேவந்துவிட்டார்
அருச்சுனனைத்தான்பார்த்து ஆண்டவனுமேதுசொல்வார்
ஐயாபெரியவரே அறிவுள்ளசங்கமரே
நீர்படித்தவரே நெறியுள்ளசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
எங்கிருந்துபோறீர்காண் இயலானசங்கமரே
கோடிசரணமையா கும்பிட்டேன்சுவாமியென்றார்
உன்னைமுழுதும்பாவனையும் உலகத்தில்கண்டறியேன்
உம்மைகண்டபோதே உருகுதேதேகமெல்லாம்
காமவிகாரத்தால் கலங்கிப்போறேனையா
மோகவிகாரத்தால் மூர்ச்சைபட்டுபோறேனையா
காமக்கலையைத்தான் சமிதீர்க்கலாகாதோ
மோகவிகாரத்தை மூர்ச்சையைத்தீருமையா
மன்மதனெய்தகணை மார்புருவிப்போகுதையா
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதையா

அரைநாழிஎன்னுடனே அணைந்திருந்துபோகொணுதோ
ஒருநாழிஎன்னுடனே உளமகிழ்ந்துபோகொணுதோ
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணலஸ்தனத்தைப்பார்
என்னழகும்பாவனையும் எசெறடுத்துப்பாருமையா
என்னைப்போல்பெண்களுமக் கெங்கேகிடைப்பார்கள்
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கலியுகத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மகாவிடாய்தீருமையா
தோளோடேதோளணைந்து சுகத்ததமெள்ளத்தாருமையா
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சிவிளையாடுமையா
குங்குமமெத்தையிலே கூடிவிளையாடுமையா
வாருமையாசங்கமரே என்றுவழிமறித்தாள்

அருச்சுனன்மோகினியைப்பார்த்துச் சொல்லுகிறது.

எசெறடுத்துபார்த்தானே எழிலாருச்சுனனும்
எண்ணுதுமெண்ணுகிறுன் இயல்விஜயனப்போது
மாயவனுர்சொன்னதொரு வார்த்தையெல்லாமெய்யாச்சு
என்றல்லோவாள்விசையன் ஏதுரைப்பான்கன்னியர்க்கு
ஆதிகயிலாசம் அரன்பதியேபோறேனம்மா
கர்த்தாவைக்காணவென்று கைலாசம்போறேனம்மா
வம்புகளைச்சொல்லாதே வழிதனைமறைக்காதே
பெற்றுவளர்த்ததொரு பேர்பெரியதாயல்லோ
கூடப்பிறந்தவள்நீ கூட்டுப்பாலுண்டவள்தான்
தங்கைதமக்கையுநீ தாயாருநீயல்லோ
தூரயில்லும்அச்சியரே தோதங்கள்பண்ணுதே
இடையில்லும்அச்சியரே என்னருகேவாராதே
என்றுநடந்தானே எசெறடுத்துப்பாராமல்
மற்றுமந்தக்கன்னியரும் வார்த்தைகளைதுசொல்வாள்
சேரவென்றுவந்தேனே செல்லுமென்றுசொல்லாமோ
பெண்சாகியென்றுவந்தால் பெற்றதாயெண்ணலாமோ
ஆத்தாளென்றெண்ணலாமோ அடுத்தமுறைவந்தாலே
தாயென்றுற்றூன்போமோ தனிமுறைவந்தாக்கால்
ஆண்டிக்குமுறையுமில்லை அரிவாளுக்குறையுமில்லை
எருதுக்குபேச்சுமில்லை இடையனுக்குறையுமில்லை
அரைநாழிபோகத்திலே அமர்ந்திருக்கால்போருமையா
மார்போடேமார்பணைத்து மருருமுத்தந்தாருமென்றுள்
தின்னப்பழமிருக்க சேனதூரப்போவானேன்
கானலிலும்வெய்யலிலும் காட்டுவழிபோவானேன்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
சோழிசதூரங்கம் சொக்கட்டாநடலாம்வா
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கவுருக்கமுண்டு
வாருமையாசங்கமரே மனைக்குநாம்போயிருப்போம்

தானாகவந்தபெண்ணை தள்ளிவிட்டுப்போகலாமோ
போனாற்பலனுமில்லை பித்தனைக்காண்பரிது
வளையாடிப்போனாலே வித்தகரைக்கண்டிடலாம்
தனதிரண்டைக்காட்டியே தான்மறித்தாள்மோககன்னி
இவளுடையவார்த்தைகளை இளவிசயன்தான்கேட்டு
கோபம்வருகுது கொல்லமனந்துணிந்தான்
வில்லெடுத்துக்கைபிடித்து வில்நாரிபூட்டிவிட்டு
அம்புறாத்தூணியிலே அலகம்பைத்தானெடுத்து
கொல்லநினைத்தானே கோலகுயறந்தாளை

அருச்சுனன்பாணமெடுக்கபெண்மறைந்து
பெருமாள்வருகுதல்,

கோபாலகிருஷ்ணரவர் கொப்பெனமாயவனார்
கண்டானேவான்விசையன் கர்த்தருடமாயையென்று
இளவிசயனருச்சுனனும் பிரியமனப்போகையிலே
மாயன்பெருமாளும் வாராரேவந்தவழி
வட்டமாய்க்குடைபிடி வாராரேயந்தவழி
கண்டானே அருச்சுனனும் கடுகியவன்தெண்டனிட்டு
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வான்
இங்கேனோவந்திருந்தீர் இயல்பானவான்விஜயா
காளையக்கஅருச்சுனனும் கடுகியேதுசொல்வான்
மாயவரேசொன்னாலதிர் வனத்திலேயேயாச்சு
ஆரோ ஒருதெய்வகன்னி அநேகநேரமென்னைமறித்தாள்
வந்துவழிமறித்து வார்த்தைகளாடினளே
சொல்லாதசொல்லியே தோதங்கள்பண்ணினளே
என்றுசொல்லிஅருச்சுனனும் மேலெடுத்துப்பார்த்தானே
கன்னிவளையுமே கழுத்திலேமணியும்
கண்டானேவான்விஜயன் கடுகெனநகைத்தானே
அனைத்துக்குலுக்கிறீர் ஆயன்பெருமாளே
மையைதுடைக்க மறந்தீரோமாயவரே
மணியையவிழ்க்க மறந்தீரோமாயவரே
பொட்டைக்கலைக்க மறந்தீரோபுண்ணியரே
ஆபரணக்கழற்ற மறந்தீரோஅச்சுதரே
என்னகோலம்வந்தாலும் பெற்றுமையாளுக்கு
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஆயன்பெருமாளும் அந்நேரமேதுசொல்வார்
மைத்துனனுடைத்தனமே மனவருத்தமென்னசொல்வேன்
அருச்சுனனுடைத்தனமே ஆண்மையுமென்னசொல்வேன்
வான்விசையனுடைத்தனிட மனதறியவந்தேன்காண்
கர்த்தாவைகாணவல்லாய் கடுகிவரவாய்க்கவல்லாய்
பாமனைக்காணவல்லாய் பாசுபதம்வாங்கவல்லாய்
சதனைக்காணவல்லாய் இனியவரம்வாங்கவல்லாய்

போய்வாருமென்றுசொல்லிப் பெருமாளனுப்பினர்
ஆனுலழகுமன்னன் அருச்சுனராசனை
விடைபெற்றுக்கொண்டானே வேந்தனருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அரிராமரேதுசெய்தார்
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஓங்கிவளர்ந்தொரு மூங்கில்வனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போய்சேர்ந்தார்

ஒன்பதாவது ரோமரிஷிவனம்
முற்றிற்று.

௰-வது-பேரண்டவனம்.

பத்தாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போறார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
பேரண்டவனத்திலேதான் பிரியமாய்ப்பஞ்சவர்கள்
வந்தார்குடித்தனமாய் வனத்திலேவாசம்பண்ண
ஐந்தடுக்குபர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
பூதநாதனைத்தேடி போரானேவாள்விசையன்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
ஓம்சிவாயென்றுசொல்லி ஒலித்தானேசெயகண்டிகை
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
இருண்டவனத்திலே இருக்கின்றபேரண்டன்
அநேகதூரம்போயிருந்தா னுகாரந்தேடிவர

பேரண்டச்சி அருச்சுனன்மேல் மோகித்தல்.

பேரண்டராட்சதன்றன் பெண்சாதியானவளும்
தன் னந்தனியாய்த் தானிருந்தாள்மண்டபத்தில்
அரகராவென்றசத்தம் ஆரணங்குதான்கேட்டு
கொத்தளம்போல்மூக்கழகும் மத்தளம்போல்புட்டங்களும்
ஊனமூஞ்சிகுரங்குதலை ஒன்றுமுதகழகாம்
செம்பட்டமயிரழகன் சிங்காரப்பல்லழகாம்

பனைமரம்போற்பல்லழகாம் பருவதம்போற்கண்ணழகாம்
கழுத்தைச்சுற்றிக்கண்டமாலை இடுப்பைச்சுற்றி அரைக்கடுவன்
தொடையைச்சுற்றிஒட்டுப்புண் தோளைச்சுற்றிபெருஞ்சிரங்கு
நின்றேனேயாமாகில் நிலத்தில்விழிபிரண்டுஸ்தனம்
இன்னஞ்சொல்லுகிறேன் இரண்டுஸ்தனத்தழகை
கப்பலின்மேல்வாரதொரு கொப்பரைத்தேங்காய்போல்
தோணிமேல்வாரதொரு சொரக்காய்போல்தானிருக்கும்
பல்லிலேபடிந்திருக்கும் பாசிபடர்தாமரைபோல்
சீழுஞ்சொலநீரும் தேகமெல்லாநாற்றம்வரும்
காயமதிற்படிந்தழுக்கு கற்றாழைநாற்றம்வரும்
அருகேவைத்துநின்றாலே அசங்கிதமாய்த்தோன்றும்
மாவுரியைத்தானுடுத்தி வாராளேபோண்டச்சி
ஆண்டிபெரியவர்தன் அருகில்வந்தாள்ராட்சசியும்
பண்டாரம்பெரியவனைப் பார்த்தாசைபட்டாளாம்
வாயைத்திறந்தவள் வார்த்தைகளேதுசொல்வாள்
நில்லுமையாஎங்கபோரே நெடுந்தூரப்போகாதே
உன்றனைசப்பட்டதல்லால் வேறொருவராசையில்லை
மார்பைப்பார்தோளைப்பார் மருவினையாடவேபார்
அனாதரிநானுடனே அமர்ந்திருந்துபோங்காணும்
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
மன்மதபாணமது மார்புருவிப்போகுதையா
மோகவிகாரமதை மூர்ச்சைசலயத்தீருமையா
என்னைப்போலபெண்ணுமக்கு எங்கேகிடைப்பார்கள்
தேடிப்புறப்பட்டானுந் தேசத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைத்து மருவிவிடாய்த்தீருமையா
தோளோடேதோளணைத்து சுகங்கள்தெளியுமிப்போ
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சியிருப்போமென்றாள்
ஏறெடுத்துப்பார்த்தானே என்னவென்றுக்கேளானே
அரகரா அரனேயென்று ஆண்டியுந்தானடந்தான்
காமவிகாரத்துடன் கடியந்தராட்சசியும்
போண்டாட்சசியும் பின்னேதுவார்த்தைசொல்வாள்
கண்டாசைப்பட்டுவந்தேன் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை
என்னவென்றுகேட்கவில்லை ஏறுமுகம்பார்க்கவில்லை
என்னைபாராமற்போனீரோ பாதகனாசையாலே

போண்டச்சி அருச்சுனனுடன் சபதங்கூறுதல்.

என்புருஷன்வந்தபின்பு இட்டுன்னைவரவழைத்து
என்னெண்ணம்பிரகாரம் இருந்துமருவிடுவேன்
என்றுசபதமிட்டு இயவானராட்சசியும்
காமவிகாரங்களுடனே தானடந்தாள்
மோகவிகாரமெனும் மூர்ச்சையுடன்போனாளே

வளையலைத்தானுடைத்து மார்பெல்லாந்தான்கிழித்தாள்
முகத்திலறைந்துகொண்டு மோதிப்புலம்புகிறாள்

பேரண்டச்சி அழுதகுரல்கேட்டு பேரண்டன்வருகுதல்.

அழுதகுரல்சத்தம் அசந்தானேபேரண்டனும்
எதுக்கழுகிறாள் என்னுடையதேவியரும்
வயிறுபசியாகி வாய்விட்டழுதாளோ
என்று-ஐம்பதுயானை அவன்கையில்தானெடுத்து
சினந்துஎறிந்தானே தேவியருகில்விழ
பின்னும்புலம்புகிறாள் பேரண்டாட்சியும்
எதுக்கழுகிறாள் இளங்கொடியாளென்தேவி
இத்தனைநாளில்லாம லின்றுபுலம்புவதேன்
அறிந்துவருவோமென்று ஆங்காரமுள்ளவனும்
நிமைப்போதிலங்குவந்து நின்றுமேபேரண்டன்
எதுக்கழுகிறாய்நீ என்னுடையதேவியரே
பேரண்டச்சி தன்புருஷனுடன் தன்வரலாறுகூறிச்சண்டைக்கு
போகச்சொல்ல பேரண்டன் சண்டைக்குப் போகிறது.
பேரண்டாட்சியாள் பிரியமுடனேதுசொல்வாள்
மாலையிட்டநாள்முதலாய் மனதுகுறைவந்ததில்லை
நான்பெண்பிறந்தபாவமது போதுமையாஎந்தனுக்கு
என்பாவிதலையிலே பத்தழுத்தையெழுதிவிட்டான்
செல்வத்தலையிலே செப்பேடெழுதினது
அல்லல்படவோ அமைத்துவிட்டார்பிரமதேவர்
ஐயையோபெண்பிறப்பு ஆனதுஎன்னசெய்வேன்
நான்புத்தியில்லாவரசியல்லோ பேரண்டாட்சதனே
வாரவழிதனிலே வைத்திர்சமுசாரம்
என்னைத்தனியேவிட்டு இனிபோகஞாயமுண்டோ
உன்தேவியாயிருந்தும் ஊருக்குபெண்டாவேனோ
சுந்தரப்பெண்நானல்லவோ சொரூபமுடையவள்தான்
அழகில்மிகுந்தவளே ஆரோஒருவன்தான்
உத்தமியாளென்றுசொல்லி வுணராமல்கொருவன்
பத்தினியாளென்றென்னை பாராமலிங்கொருவன்
ஆண்டிபெரியவர்தான் ஆண்டவனில்வந்தவர்தான்
வந்தபெரியவரை வணங்கியேதெண்டனிட்டேன்
தன்-கஞ்சாகுடுக்கைக்குத் தண்ணீர்கொண்டுவாருமென்றார்
தண்ணீரும்தான்கொடுத்தேன் சாணகம்தான்செய்தேன்
நெருப்பெடுத்துவாவென்றார் நெருப்பைக்கொடுத்தேனே
அள்ளியேநீறுதந்தா ரணிந்துகொண்டேன்நெற்றியிலே
வாடிநீபோடியென்றான் வலதுகைதொடையேறுமென்றான்
பொல்லாத்தனங்கள்செய்து போய்நடந்தான்சங்கமனும்
அவனைகைப்பிடியாகவே கடிகியேகொண்டுவாரும்

அல்லாதேயாமாகில் அநீதமாய்மாண்டிடுவேன்
பேரண்டச்சி அழுகையிலே பேரண்டன்தானெழுந்து
எழுந்தானேராட்சதனும் என்றுமில்லாக்கோபமுடன்
ஆலமரம்பிடுங்கி தோளின்மேலேவைத்தவனும்
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேஓடிவந்தான்
மின்லுமில்லுஞ்சங்கமமோ நெடுந்தூரம்போகாதே
ஆடாபண்டாரம் அரிவுவெட்டசங்கமமோ
என்னுடையபெண்சாதியைஎங்களிருகண்மணியை
வழியிலேவிட்டுவிட்டு வனத்திற்குடியிருந்தால்
பிச்சையெடுக்கிறவன் பெண்டோடிபிடிக்கிறவன்

பேரண்டனுக்கும் அருச்சுனனுக்கும்சண்டை

அரைநாழிக்கொள்ளையிலே அவியுங்கொள்ளிடுவேன்
இட்சணமேபோகையிலே எமபுரஞ்சேர்த்திடுவேன்
என்றேயடருகிறான் இவனைராட்சதனும்
அதனைமுதுகுவன்னன் அருச்சுனனுஞ்சொல்வான்
வாடாராட்சதனே வார்த்தையொன்றுநீகேளாய்
ஆதிசிவன்பாசம் அம்பாதங்காணவென்று
பார்த்தபசுபன்னை பாசுபதிபோகையிலே
வாரவழிகளிலே வழிமறித்தானுன்தேவி
கண்டாரைப்பட்டேனென்று கடிகிமையக்கிருமென்றாள்
பொல்லாதாள்சேர்ந்தனைத்து போக்கவென்றானுன்தேவி
நான்வாரைசிறக்களிலே வண்ணமுகம்பார்க்கவில்லை
மற்றொன்றுகேட்கவில்லை எதிரிக்குப்பார்க்கவில்லை
வீணானவார்த்தைசொல்லி மேல்போட்டுவாராதே
அடிபாயச்சண்டையிலே அவமானஞ்செய்யாதே
என்னோடேதிரக்கையிலே ஒருகண்ணைப்பொட்டிடுவேன்
பெண்சாதிவார்த்தையினால் பிராணனொழிக்காதே
மாறுவதுதருமமல்ல மன்னுடவுமென்றான்
வார்த்தைசொன்னவுடன் இராட்சதனும்
எதிர்த்தானையப்போர்க்கு இரண்டுபேரும்நடிக்க
கண்டானருச்சுனனும் கண்கள்சிவப்பேற
கோபம்பெரிதாகி கொல்லவெனத்துணிந்தான்
வில்லைத்தான்பூட்டி விசைக்குணைக்கொளித்து
நாதமிட்டார்த்தாளிமுக்குக் கைகணைமயவாங்கினான்
பேரண்டராட்சதன்றன் பிராணனைப்போக்கவென்று
அலகமைப்பத்தரவெடுத்து அஸ்திரத்தைப்பூட்டினான்
பத்திரவுபதேசஞ்செய்து மார்பளவாக்கினான்
மேலிட்டுராட்சதன்மேல் விடுத்தகணைஅஸ்திரந்தான்
பேரண்டன்தன்தலையைப் பிடரிக்கொய்தானதற்கே

அருச்சுனன்பாணத்தால்பேரண்டன்

பேரண்டச்சிபுலம்பல்

அறுத்ததலைக்கீழேவிழ தாகாசமாயெழும்ப
மற்றொருகணைதொடுத்தான் வாள்விஜயனருச்சுனனும்
அறுத்ததலையுமல்லோ அவன்தேவிவாசலிலே
கொண்டுபோய்ப்போடுமென்றான் கொப்பெனவேவாள்விஜயன்
தள்ளிப்போய்விட்டதுவேசண்டாளன்தன்தலையை
அவன்மாண்டபிற்பாடு அருச்சுனனுந்தானடந்தான்
அந்தச்சமயத்தில் அடைவானபேரண்டச்சி
தலையையவள்பார்த்து தன்புருஷன்தலையெனவே
கண்ணீரைச்சோரவிட்டுக் கதறிப்புலம்புகிறாள்
விழுந்தாளெழுந்தாள் மண்மேலேபுரண்டழுதாள்
மாரடித்துத்தோளடித்து மண்தூற்றியேயழுதாள்
கோவென்றசத்தமுடன் குழறிபுலம்புகிறாள்
மலையேபருவதமே மண்மேலேசாய்ந்தீரோ
மேசமலையேநீ விண்ணுலகஞ்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியங்கள் நின்னயத்தைநானறியேன்
வச்சிரத்தூணேநீர் மண்ணோடொன்றுந்தீரோ
கல்லானதூணைக் கரையானரித்ததுவோ
இரும்பானதூணேநீ இற்றுவிழுந்தாயோ
எங்கேயோவானம் இடிக்குதென்றிருந்தேன்
தப்பாமல்வானந் தலையிலிடித்ததையோ
தெருவிலேகையைவிட்டுத் தினகரனைசாட்சியென்றாள்
சந்தியிலேகையைவிட்டுச் சந்திரனைசாட்சியென்றாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகமாகுதையோ
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலையேபருவதமே செத்துமடிந்தீரோ
செத்துமடிந்தீரோ சிவலோகஞ்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியத்தின் நிண்ணயங்கள்நானறியேன்
சந்தனமிருபுசத்தை சரிவெட்டிப்போட்டாரோ
குங்குமமிருபுஜத்தை குளிரவெட்டிப்போட்டாரோ
கொண்டைபரிகொடுத்த கோழியைப்போலானேனே
செட்டைபரிகொடுத்த செம்பருந்துபோலானேனே
அடிவானத்திடிபோல அழுதுபுலம்புகிறாள்
பேரண்டராட்சியாள் புரண்டுபுரண்டழுதாள்

பேரண்டச்சியழுகிறதுகேட்டு தெய்வகன்னிகள் வருதல்.

அந்தச்சமயத்தில் அழகானதெய்வகன்னி
ஏழுபேர்சத்தகன்னி இளங்கொடிமாதர்களும்
தீர்த்தங்களாடவென்று தெய்வகன்னிவாரார்கள்
அழுகுரல்கேட்டு ஆயாசப்பட்டார்கள்
ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாய்ப்பேசுகிறார்
ஆரோதெரியாது அழுதுபுலம்புகிறாள்
இத்தனைநாள்வரையில் இவ்வோசைகேட்டதில்லை
அழுகுரல்கேட்டு அப்புறம்போகொணாது
அழுதவிடத்திலே யாவரும்போவோமென்று
புலம்புமிடத்திலே போட்டெனவேவந்தார்கள்
ஆரடிமங்கையரே அழுதுபுலம்புவதேன்
பேரண்டாட்சியும் பிரண்டழுதுசொல்லுகிறாள்
ஆரைக்கழுத்தி அரைகழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குறைக்கழுத்தியானேனே
பஞ்சணிழந்தேன் மணமிழந்தேன் பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கலாச்சே
என்றனையுரைப்பேன் என்னுடைய அம்மமாரே
ஆரோவொருபண்டாரம் அரன்பதிக்குபோறான் நான்
வாடியென்றுபோடியென்றும் வம்பாகப்பேசினேனே
சொல்லாததுசொல்லியே சேர்ந்துஅணையவந்தான்
புத்திகடையானான் போய்க்கேட்டார்சங்கமனே
என்தாலியைக்கொன்றுவிட்டு கிளிகியேபோகிறார்காண்
மங்கிலியப்பிட்சை வரங்கொடுத்துப்போங்களம்மா
என்றவுரைகேட்டு இயலானகன்னியர்கள்
ஆயாசப்பட்டுமல்லோ அதிகமனஞ்சலித்து

தெய்வகன்னியர் அருச்சுனனைக்கண்டு இரக்கஞ்சொல்லுதல்.

சங்கமனைத்தேடியே நடந்தார்கன்னியர்கள்
பெரியபெரியவரே அதிகவுப்பண்டிதரே
நீர்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
பதிதாய்ப்பசுபன்னி புத்திகெட்டகற்றவரே
நில்லுமில்லுஞ்சங்கமரே தெரிந்தாரம்போகாதே
போரவழிதனிலே பொல்லாங்குசெய்யலாமோ
சிவனையன்றி வெம்பத்தேபோகலாமோ
ஆதிசிவனையாழும் அரன்பதிபோனாலும்
கோருமவரத்தை கொடுப்பாரோபரமசிவன்
ஏமாசங்கமரே இப்படிக்குச்செய்யலாமோ
ஆகாதகாரியங்கள் அழிவுதேடிப்போகலாமோ
என்றுபகர்த்தார்கள் இளங்கொடிமார்கன்னியர்கள்
ஆறுமுகமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
சிவனார்பதிக்குநான் தெரிசித்துபோறேனென்ன

அவள்-வந்தவழிமறித்து வார்த்தைகள்பேசினளே
சொல்லாதுஞ்சொல்லியே சேர்ந்துஅணையுமென்றாள்
அவள்புருஷன்வந்தென்னை அங்கீகமாய்க்கொல்லவந்தான்
எத்தனைசொன்னாலும் இரங்காமற்கொல்லவந்தான்
ஆயுதத்தினாலே அறுத்தேனவன்றலையை
என்மேலேகுற்றமுண்டோ வினைதடுக்குதீர்
இருவர்விசேஷமெல்லா மெதிராகக்கேட்டிடுவோம்
வாருமையாவென்றுசொல்லி வரவழைத்தார்சங்கமரை
பேரண்டராட்சசியாள் பிரண்டுபழுமிடத்தே
அருச்சுனராசாவை அழைத்துவந்துவிட்டார்கள்
தெய்வலோகக்கன்னியர்கள் தேன்மொழிமாரேதுசொல்வார்
இருவருடவார்த்தைதனை யெல்லாமிவர்கேட்டு
ஐயாபெரியவரே அகிலைப்படைத்தவரே
புதிதாய்த்தபசுபண்ணி புத்திமெத்தபெற்றவரே
பெண்ணின்பிழையைப் பொருத்தருளும்புண்ணியனே
அடியார்கள்செய்தபிழை ஆண்டவர்நீர்பொறுத்து
மங்கிலியபிட்சைதந்து மகாதேவர்பதிபோனால்
ஆதிசிவனார் அதிகவரமருள்வார்
எங்களைப்பற்றியே இவ்வினைபெழுப்பிவிடும்
என்றுவணங்கியே இறங்கியேதெண்டனிட்டார்
அருச்சுனராஜாவும் அதிகமனமகிழ்ந்து

தெய்கன்னியர் அருச்சுனனைசேட்க அருச்சுனன்மகிழ்ந்து
தேவேந்திரனுக்கு ஓலையெழுதி அனுப்புதல்.

சேமக்குருத்தோலை சிக்கெனவேதான்வாரி
வாரியவோலையிலே வக்கணைகள்வைத்தெழுதி
என்னவென்றுவோலை எழுதுகிறானர்ச்சுனனும்
அமராபதியாளும் அங்கபிரான்எனதகப்பா
தெய்வலோகமாளும் தேவேந்திரன்என்தகப்பா
மந்தாரக்குந்திபெற்ற வாள்விஜயனர்ச்சுனனும்
ஆதிசிவன்பாதம் அடியேனுங்காணவென்று
வாரவழிதனிலே வகைத்தெரிந்தேன்பேரண்டனை
அமரதுசெய்தேன்காண் அறுத்தேனவன்தலையை
பேரண்டன்தன்னுயிரை பிர்மலோகத்திருந்தாலும்
இங்கேயிருந்து எமலோகம்போனாலும்
அவனுடையதன்னுயிரை அனுப்பிவையும்என்தகப்பா
எந்தனைப்பற்றியே இட்சணமனுப்பிவையும்
அல்லாதேயாமானால் அமராபுரம்வருவேன்
தேவேந்திரன்பதியை சிதரவேகொள்ளைகொள்வேன்
ஆடுகொள்ளைமாடுகொள்ளை அழகானவீடுகொள்ளை
ஐயாவுன்பட்டணத்தை அனைத்துமேகொள்ளைகொள்வேன்
என்றுயெழுதினான் இயலானவோலையிலே

ஓலைச்சுருள் மடித்து உகந்துசெந்திரிக்கையிட்டு
வில்லினைத்தானாரிபூட்டி வில்லைநுணத்தொனித்து
அந்தச்சுருளோலைதன்னை அம்புவாயில்தான்கொடுத்து
ஐந்துமலியசக்தி அம்பேநீபோயென்று
மந்திரமாயிட்டு வாங்கிவிட்டானஸ்திரத்தை
மார்புளத்தாலெடுத்து தோள்புளவாங்கிவிட்டான்
வருகுது அஸ்திரந்தான் வானுலகந்தான்தேடி
தேவேந்திரனுடைய தேசமணிக்கம்பத்தில்
வான்விசயஸ்திரத்தால் மணியசைந்தாடிற்று
மணிக்கண்டருகேவந்து வாங்கினான் அஸ்திரத்தை

அருச்சுனன் ஓலையைத்தேவேந்திரன் பார்த்து
எமனிடத்திற்சென்று கெண்டபேரண்டன்
உயிரைவாங்கி அனுப்புதல்.

செந்திரிசை ஓலைச்சுருள் தேவேந்திரன்விரித்து
எழுதியவாசகத்தை இந்திரனுந்தான்படித்தான்
அதிலிருக்கும்வாசகத்தை யாவுமறிந்துகொண்டான்
இக்கெனவேவாகனமேறித் தேவேந்திரன் வருவான்
எமபுரந்தேடி எமனருகிற்போய்ச்சேர்ந்தான்
கண்டவுடனெமனும் கடுகியெழுந்திருந்து
எதிர்கொண்டழைத்து இட்டுவந்தான்மாளிகையில்
எதுகருமமாய் இங்குவந்தீர்ராசாவே
அந்தமொழிகேட்டபோல் அதிசயமாய்த்தானுரைக்கான்
என்றனிடமப்போதுரைசொல்வாரிந்திரரும்
எல்லாருயிர்காக்கும் எமதர்மராசனேகேளும்
பொல்லாதபாவியவன் புகலும்பேரண்டனுயிர்
இங்குவரக்கண்டானேல் எதனுக்காய்தயவுபண்ணும்
என்றுடனசனை இரக்கமாய்த்தானுரைத்தார்
செக்கிலேபோட்டுத் திருப்புகிறான்னேரம்
என்னேரமும்பின்னுக்கா வெப்படித்துமபோதையிலே
பேரண்டன்றன்னுயிரை பொட்டெனவேதான்கொடுத்தார்
மாபாவிதன்னுயிரை மைச்சிமிழிலேயடக்கி
அம்புவாய்தனிலடக்கி அனுப்பினானிந்திரனும்
வாய்வேகமாகவே வந்ததுஅருச்சுனர்முன்

அருச்சுனனை பேரண்டனுக்கு உயிரளித்தல்.

மைச்சிமிழைத்தான்திறந்து வல்லுயிரைமாற்றினான்
வெண்ணீறுதான்போட்டு வேறுபட்டதலையெடுத்து
அறுத்ததலைமுண்டமும் அனைத்துந்தண்ணீர்தெளித்தான்
கட்டிபெருப்பினான் தன்னுடையபொற்பிரம்பால்
தூங்கிவிழித்தவன்போல் திடுக்கிட்டெழுந்திருந்தான்
ஆரடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமனே
என்றுஅலறியெழுந்தானே இயலானபேரண்டனும்

எழுபேர்கன்னியர்கள் இளங்கொடிமாரேதுசொல்வார்
ஆங்காரராட்சதனை ஐயரைச்சரணம்பண்ணும்
அபசாரமுன்மேலே அனந்தங்குற்றம்வந்திருக்க
உந்தனுயிர்தான்கொடுத்த உம்பர்பிரானைசகுமடா
சாஷ்டாங்கமாக சரணம்பண்ணும்ஐயருக்கு
என்றுசொன்னபோதையிலே இரங்கியேதெண்டனிட்டான்
சரணம்சரணமென்று சரணமிட்டார்பேரண்டனும்
இறந்துவிட்டசிவன் எழுப்பிவிட்டாராண்டவனை
உமக்-கேதுதரப்போறேன் [illegible]யலானசங்கமரே
ஆபத்துவேளையிலே அழைத்தால்வருகிறேன்
உந்தனுக்குதவியாக ஒத்தாசைபண்ணுகிறேன்
என்றுஉபசரித்தான் இயலானராட்சதனும்
அனைவரைங்கையமர்த்தி அருச்சுனனும்போய்நடந்தான்
அரகராஅரனேயென்று அரன்மேலேதியானமானான்
சிவசிவாசிவனேயென்று சிவன்மேலேதியானமானான்
ஒருவன் அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
அடித்தானே செயகண்டிகை தொனித்தானே சங்குதனை
ஏலகன்னிவனத்தில் எழில்விஜயன்போகலுற்றான்

ஏலகன்னி அருச்சுனனைப்பார்த்து அழைத்தல்.

அரகராவென்றசத்தம் அதிர்ந்தாளே ஏலகன்னி
ஆரடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
வாரவரார்காணும் மயிலினையேபாருமென்றாள்
திக்கெனவேதானெழுந்து தெருவீதிவந்தார்கள்
வருகிறசங்கமனை மாதர்கள்கானவிந்து
ஓட்டம்நடையுமாயோடிவந்தார்தாதியர்கள்
என்தாயேஏலகன்னி எவரோதெரியாது
ஆதிசிவன்போல அழகுபடைத்தவர்காண்
ஒருக்காலும்வந்ததில்லை உச்சிதமாயவாறார்காண்
என்றசத்தந்தான்கேட்டு எழுந்தாளேஏலகன்னி
தண்டையசையவே தார்குழலாள்தானடந்தாள்
அருச்சுனனைக்கண்டு அதிசயமானாள்
கண்டாசைபட்டாளே கட்டழகிஏலகன்னி
பார்த்தாசைபட்டாளே பசுங்கிளியாளேலகன்னி
வடிவழகுஒப்பனையும் வாள்விஜயன்சீரழகும்
உற்றுற்றுப்பார்த்துமவள் உள்ளமுருகுகிறாள்
காமவிகாரத்தாலே கட்டழகியேதுசொல்வாள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவிருந்தசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
வருவீர்வருவீரென்று வழிபார்த்துநானிருந்தேன்
எப்போவருவீரென்று இந்தவனங்காத்திருந்தேன்

உன்னாசைபட்டிருந்தேன் உலகில்வேறாசையில்லை
காமவிகாரத்தாலே களைப்பட்டுப்போறேனையா
மன்மதனெய்தகணை மார்புருவிப்போகுதையா
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதையா
அதிகவிகாரங்கொண்டேன் ஐயாபெரியவரே
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகந்தேர்பாரும்
என்னிலும் அழகுடையாள் எங்குங்கிடையாது
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கருணாற்கிட்டாது
மார்போடே மார்பணைந்து மகாவிடைதீருமையா
தோளோடே தோளணைந்து சுத்தைபெள்ளதெளியுமையா
கட்டிலுண்டு மெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
பொன்னும்பொருளுமுண்டு பொக்கிஷங்கள்மெத்தவுண்டு
தின்னக்கல்பாக்குமுண்டு செலவழிக்கரொக்கமுண்டு
ஆடவென்றுல்லாசமுண்டு அமர்ந்திருக்கமேடையுண்டு
பக்திபுலாவுதற்குப் பாசாலைமெத்தவுண்டு
மருவியேபாடி மன்மதரேவிற்றிருப்போம்.
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
ஏறெடுத்துப்பாராமல் இளவிஜயனருச்சுனனும்
ஏலகன்னிமாது அவள் இளங்கொடியாளைதுசொல்வாள்
என்னாலும் அருச்சுனரே யெந்தன்முகம்பார்க்கொணாதோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லொணாதோ
மாலைபத்திரத்தின்மேல் வச்சிரமுடிகிந்திடுமோ
வச்சிரமுடிகிந்தாலே வாரியெடுக்கேனோ
தங்கத்திரைத்தின்மேல் சங்கமுடிந்திடுமோ
தங்கமுடிந்தாலே தடவியெடுக்கேனோ
என்னுடன்பேசினால் ஏதுக்குறையுமோடா
கைதான்சாயுமோ கட்டைதுளிர்த்திடுமே
இருமபுகையுமோ இங்கேயேயுன்மனது
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகத்தைப்பார்
முகத்தோடே முகமணைத்தால் மூர்ச்சைதெளிந்திருப்பேன்
மார்போடே மார்பணைத்தால் மகாவிடாய்தீர்ந்திருப்பேன்
தோளோடே தோளணைந்து சுகக்களித்திருமையா
வாருமென்றுசொலவே மயிந்தாளேலகன்னி
வாயைத்திறவானும் வண்ணமுகம்பாரானும்
என்னென்ன சொன்னாலும் ஏறுமுகம்பாரானும்
சிவனைமறவாமல் சிவன்மேல்தியானமானான்
அரனைமறவாமல் அரன்மேல்தியானமானான்

ஏலகன்னி அருச்சுனனைக் கோடுகிழித்து அணைபிட்டு நிறுத்தல்,

ஏலகன்னிமாது இளங்கொடியாள் கோபமானாள்
எழுகோடுகிழித்து இங்கேநில்லுமென்றாள்

உன் குருவின்மேலாணைகாணுங் கோடுவிட்டுப்போகாதே
ஐவர்மேலாணைகண்டாய் அடிவிட்டுப்போகாதே
தம்பிகமையன்மார் தாய்மேலேயாணையிட்டாள்
ஆணையிட்டுவேலகன்னி அரண்மனைக்குப்போய்சேர்ந்தாள்
மாளிகைவாசலுக்குள் மண்டபத்தில்வீற்றிருந்தாள்
அவள்வருவதற்குள்ளாக வாள்விஜயனேது செய்தான்
எண்ணுதுமெண்ணியே ஏதேதுதானினைப்பான்
ஆரைநினைத்தானே அளவற்றசிந்தையிலே
எவரைநினைத்தானே எண்ணமுற்றசிந்தையிலே
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாகுதையா
எவரைநினைத்தாலே இந்தவேளைக்காத்திடுவார்
ஆபத்தைக்காப்பதற்கு ஆராலேஆகுமென்று

கோட்டில்நிற்கும் அருச்சுனன்காளியைத்
தோத்திரம்பண்ணல்.

அந்தவனக்கன்னியரை அருச்சுனன் தானினைந்து
சூலிகபாலியம்மா சுந்தரிதுர்க்கையமே
சண்டாளிபிடாரியம்மா சங்கரியேஏகவல்லி
மண்ணும்பிடாரியம்மா வழக்காடுந்துற்கையமே
ஆபத்துவேளையிலே ஆதரிக்கவேணுமம்மா

அருச்சுனன்காளியைநினைக்ககாளிவந்துவரலாறுவினவல்.

என்றுநினைத்தானே இயலானகாளியரை
வாள்விஜையன்தான்வருந்த மாகாளிதான்வருவாள்
டேகையொருகையில் டமாரமொருகையில்
வாளுமொருகையில் வளைதடியுமொருகையில்
அம்புவில்லுங்கைபிடித்து ஆயுதமாகவந்தாள்
ஆரடாதம்பிநீ அடவியிலேயெனைநினைத்தாய்
ஊரேதுபேரேது உன்னுடையவண்மையென்ன
என்றவள்கேட்கையிலே யிரக்கிசரணமிட்டான்
ஆரென்றுகேட்டாயோ ஆச்சிபரேசொல்லுறேன்கேள்
பாண்டுமகாராஜனபெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
ஐவர்பஞ்சபண்டவர்கள் அருச்சுனராஜனென்பேர்
மாயவனுமைத்துனன் வாள்விஜயனென்பேர்
ஆதிகைலாசம் அரன்பதியேபோறேனம்மா
பரமனைநோக்கியே பாரதவஞ்செய்யநான்
போறவழிதனிலே பொற்கொடியாளேலகன்னி
கலியாணம்பண்ணுமென்று சடிகிபெனைமறித்தாள்
கோடுகிழித்துஎன்னைக் குறுக்கேதடுத்தாளே
ஆணையிட்டுயெனைமறித்து அரண்மனைக்குப்போய்விட்டாள்

மறுபடியும்வருவேனென்று மாளிகைக்குப்போய்விட்டான்
ஆகையாலெந்தாயே அபயமிட்டுஉனையழைத்தேன்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாள்ஈஸ்பரியும்

காளியம்மன் அருச்சுனனை ஆணைவிடுவித்தனுப்புதல்.

அஞ்சாதேயென்மகனே ஆணையிட்டேன் தோஷமில்லை
முக்காலுந்தோஷமில்லை முத்திரையைச்சுழற்றி
தெரித்தமுத்திரையை நிலத்தனிலேவைத்துவிடும்
இந்தவனக்கடத்து என்னைநினைத்தக்கால்
உந்தனுட முத்திரையை உனக்கேதயவுசெய்வேன்
என்றுசொல்லக்காளியம்மாள் ஏய்ந்துவிட்டான்வாள்விஜயன்
திரித்திருந்தமுத்திரையைத் தாயாரின்கைக்கொடுத்தான்

காளி அருச்சுனன்போல் நிற்பதை ஏலகன்னிகண்டு
தான் அலங்காரம் பண்ணிக்கொள்ளல்.

வாள்விஜயன்போனபின்பு மாகாளியென்னசெய்தாள்
அருச்சுனனைப்போலாக அங்கேவடிவுகொண்டாள்
காவிகாசசாம்பரமும் கட்டி அரைதனிலே
இந்துசடைபோட்டுச் அழகுசடைமார்புரள
வாள்விஜயன்போலே மறைப்பிலேநின்றாளாம்
இப்படிக்குக்காளி யிருக்கின்றவேளையிலே
ஏலகன்னிமாது இளங்கொடியாளேதுசெய்தாள்
மஞ்சள்குளித்தாள் மைமெழுதிப்பொட்டுமிட்டாள்
வார்முடித்தாளாம் வாசசவுரியுட்சொருகி
கொண்டைக்கழகாக கொண்டைமயிர்தான்முடித்தாள்
சந்திரப்பிறைசூரியப்பிறை தலையிலணிந்தாளாம்
ஆணைமகிழயப்பெண்மயிலும் அழகாகத்தான்முடித்தாள்
முத்தாலேகட்டியபூ மூனாலே தொங்கலிட்டாள்
காதுக்குப்பொன்னோலை கைக்குவளையலிட்டாள்
செண்பகப்பூநாசியிலே சேர்த்தணிந்தாள்மூக்குத்தி
தோள்வளைகைவளைந்து தொடுத்தாள்ரவிக்கைதனை
கண்டசரமாய் கல்பதக்கமோதிரமாம்
கொத்துசரப்பளியாம் கொத்துமுத்துதாழ்வடமாம்
முத்துசரப்பளியாம் மேனகைமாலைகளாம்
சன்னல்பின்னல்தாழ்வடமாம் தாயித்துப்பேரொளியும்
கடகஞ்சரிபவளம் கைநிறையபொன்வளையல்
தண்டைகொலுசுடனே சலங்கையும்பாடகமும்
காலாழிபீலி கல்லிணையாம்புல்லிணையாம்
அரைக்கிசைந்தஒட்டியாணம் அலங்காரம்பண்ணாளாம்
பொன்னிழைத்தப்பட்டாடை பூவாடைதான்தரித்தாள்
சாந்துசவ்வாதுடனே சந்தனமும்பூசினாள்
மருவுமருக்கொழுந்தும் மல்லிகைப்பூமுடித்தாள்
வாசனைபரிமளக்க வாராளேஏலகன்னி

ஆடிதாதி அலங்காரத் தோழிகளை
எடுத்துவா கனகதண்டி இட்சணமேபோகவேணும்
தாதிமாரோடிவந்து தண்டிகைகொண்டுவந்தார்
ஏறினாள் தண்டிகையை எடுத்தார்நெருங்நடையை
சங்கபர்தானிருக்கும் தாவுதேடிவாராளாம்
பல்லக்கைவிட்டிறங்கிப் பாதஞ்சரணமென்றாள்
ஆனையிட்டேன்தோஷமில்லை ஆண்டவனேபாருமென்றாள்
ஏறினார்பல்லக்கில் இயலானசங்கபரும்
ஏலகன்னிதானும் ஏறினாள்பல்லக்கிலே
மாளிகைவாசலிலே வந்துஇறங்கினாராம்
பட்டுரத்னப்பாய்போட்டு பண்டாரம்விரித்திரென்றார்
ஆசனத்தின்மேலே அமர்ந்தாளேஏலகன்னி

ஏலகன்னி அருச்சுனனுக்கு விருந்திடச்சமையல்பண்ணல்.

இளங்கொடிமாதரை ஏலகன்னிதானழைத்து
அடிசில்சமையுமென்றாள் அரண்மனையிலெல்லவர்க்கும்
சர்க்கரைப்பால்போசனங்கள் சமையுங்கள்மாதர்களே
பஞ்சணைமெத்தையும் பள்ளியறைசோடியுங்கள்
இவ்வார்த்தைதனைச்சொல்ல எழுந்தார்கள்தோழியர்கள்
சித்தமுறைசெய்யுஞ் சித்திரித்தாதியர்கள்
இக்குமுறைபங்கருந்து என்றுஎழுந்தார்கள்
அடுப்புமெழுகுவார் அட்சதைக்காப்பிடுவார்
வெங்கலப்பானையிலே வெள்ளிருலைசாய்ப்பார்
பால்சம்பாவரிசி பதிங்கலந்தான்களைந்து
கொதிப்பாற்றியேஇறக்கக் கொப்பெனவேதான்சமைத்தார்
வாழைக்காய்கொய்வார் வழுதலங்காய்காம்பரிவார்
சுழப்பலாக்காயை இளமுள்ளுபோக்கிடுவார்
கொத்தவரைக்காய்தனைக் கூட்டியரிந்திடுவார்
செம்பொனவரைக்காய் சேரஅரிந்திடுவார்
பாவற்காய்தானரிவார் பாங்கிக்காய்தானரிவார்
இலகுசுரைக்காய் இளந்தமரத்தைதானரிந்தார்
தேங்காய்திரிகிடுவார் மாங்காயரிந்திடுவார்
பாம்புப்புடலங்காய் பாதிரிப்பீர்க்கங்காய்
பிஞ்சிமுருங்கக்காய் பேரானகொத்தவரை
சுண்டக்காய்வண்டக்காய் சுத்தமுள்ளமுள்ளங்கி
வள்ளிக்கிழங்குகளும் வாழைத்தண்டுகீரையுடன்
சிறுகிழங்குசிறுவள்ளி சிறப்பானசேமத்தண்டு
கருணைக்காராக்கருணை காராதனுள்வள்ளியும்
அரைக்கீரைசிறுகீரை அத்திமுருங்கக்கீரை
முன்னைமுசுட்டை முக்குரட்டைகீரையுடன்
காரைபிரண்டையும் கற்கீரையுள்ளதுவும்
பிடுங்கினார்இளங்கீரை பேரானகொத்தமல்லி

கடலைஉருந்துபச்சை காராமணிப்பருப்பும்
அவரைத்தொவரையொடு அநேகவிதபருப்பும்
கொள்ளுடனெள்ளுநுங் கோதுமையுங்கலந்து
பத்துவகைத்தப்பளமும் பாங்கானகூட்டமுது
பத்துவகைப்பச்சடியும் பாங்கானகீரையுடன்
புளிக்கீரை துவர்க்கீரை பிரட்டைகீரையுடன்
ஆயிரத்தெட்டுவகை அரிக்கறிபொறிக்கறியும்
நூற்றாறுவகைக்குழம்பும் அடைவுடனேதான்சமைத்து
காரமுமுப்புங் கலந்து அறுசுவையும்
புத்துருக்குநெய்யதனி லப்போதகிவைகள்வார்த்து
வடகப்பொடிபோட்டு மணச்சீரகம்போட்டு
சீரகமும்வெந்தயமும் சேரத்தான்போட்டு
கறிவேப்பிலையும் கறிக்குதிட்டமாய்ப்போட்டு
காசயுஞ்சுவையுமென்று தாளிக்கவேதான்மணக்க
மணங்கள்கமகமென்ன மாதர்த்துப்புகறியற
தாளித்திறக்கினார் தாமரைவர்ணமாதே
செம்பொன்பிரியனாதே ல்சோபமடிக்கினார்
வரியகாய்சேர்ந்து வகைவகையாய் வெட்டுகிறாள்
இஞ்சிவெதுபிச்சை இலைமலைநார்த்தையுடன்
நாரத்தைநிச்சிலியும் கல்லைநெல்லியுடனே
நூக்கில்கருத்தாளும் மூற்றுவளமிளகு
அத்திக்காய்மாவடுக்கும் அமுதமாநார்த்தையோ
வில்வக்காய்கடுக்காய் விளாம்பிஞ்சுமாதுளம்
கண்டக்காய்களாக்காயும் கருத்தபாலும்தக்காளி
மாங்காய்முதலான மற்றுமுள்ளநாரதயும்
வத்தல்வகைபிசர்ந்த வகைமாலையுருண்டைகள்
ஆறண்டக்காயும் அதக்காக்காயும்
பாவற்காய்சேவற்காய் பச்சமிளகாய்களும்
சுக்கங்காய் தாறுவேலின அருக்காமைபாம்பாயும்
அறுசுவைவர்க்கமுடன் அப்பளங்களாயும்
பழவகைகள்தான்சேர்த்த பலவகைமைத்தான்சேரும்
மாம்பழம்வாழைப்பழம் பலாப்பழம்
செவ்வாழைமுறிவாழை நிரண்டக்கொட்டைவாழையும்
மாதுளைச்சிலியும் மஞ்சட்கொய்யாப்பழமும்
அஞ்ஞியுருகெல்லி அழகுகொய்யாப்பழமும்
தமர்த்தம்பழங்களும் நல்லசீதாப்பழமும்
மற்றுமுண்டானபழ வகைவெள்ளாருந்தேர்த்தார்கள்

ஏகலிக்குத் தாதிகள்பள்ளியறை சோடித்தல்.

அதிசீலமொருகாதி அரணைக்குளம்செழுத்து
பள்ளியறைதான்திறந்து பாங்கிகளாசத்திபண்ணி

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரச்சுவர்பூசி
கண்மூன்றுடைய கனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி
காம்பரிந்தமல்லிகையை கட்டிலின்மேலேசொரிந்து
கண்ணாடிசல்லிகட்டி கவுரிமான் சுங்குவிட்டு
மாவிலைத்தோரணமும் மல்லிகைமாலைகட்டி
எங்குமலங்கரித்து ஏந்திழைமாரோடிவந்து
ஏலகன்னிமுன்னாலே இளங்கொடிமார்தெண்டனிட்டு
அடிசில்சமைத்ததென்று ஆரணங்குதெண்டனிட்டார்
கெண்டியில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைத்தார்
ஏலகன்னிசங்கமரும் எழுந்தாரிருவருமாய்
கைபூசிக்கொண்டு கடிகியேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
இட்டாரேபோஜனங்கள் இவருக்கழகாக
பச்சென்றபழவகையும் பச்சடியும்பாளித்தார்
பொறித்தபொறிக்கரியும் பொன்போல்சிறுபருப்பும்
காராவின்நெய்வார்த்து கடிகிப்பொசியுமென்றார்
சிமிட்டிமுழிப்பளவில் செகமாதாகாளியம்மை
வைத்தவொருசாதமெல்லாம மாயையாயுண்டுவிட்டாள்
மற்றுமொருக்காலே வட்டித்தார்போசனங்கள்
மறுபடியும்போசனத்தை மாயையாயுண்டுவிட்டாள்
ஆயிரம்பேருக்கு சமைத்தஅடிசிலெல்லாம்
ஐயவொருவருக்கு அன்புடனேவட்டியென்றான்
கடுகளவுநாழிகையில் காளியம்மை உண்டுவிட்டாள்
வன்னஞ்சோறில்லையோ என்பசியாறுகைக்கு
வயிறுபசியாற்றாமல் மாலையிட்டுக்கொள்வேனே
மேதினியிலெப்படிக்கு விவாகமதுசெய்வேன்காண்
இவ்வார்த்தைகேட்டு ஏலகன்னிஏதுசொல்வான்
ஏரியோஉன்வயிறு இயலாளசங்கமரே
மடுவோகுளமோவுன் வயிறுகுஞ்சங்கமரே
பெண்டுபிள்ளையில்லாமல் பிழைத்தீரோவூர்திரிந்து
இன்றையதினத்திலே போசனமிட்டாச்சி
நாளையதினத்திலே நன்றாய்பொசித்திடுவீர்
வாருமென்றுசொல்லியே வருந்தியேநீர்கொடுத்தான்
வாய்பூசிக்கைபூசி மாளிகைக்குப்போய்நடந்தார்
பள்ளியறைவீட்டிலே பஞ்சணையில்வந்தார்கள்
சங்கமருமனமகிழத் தம்புருதான்தொனித்தாள்
இன்னாரவாத்தியங்கள் கோஷ்டமுடன்தான்படித்தாள்
காதாரக்கேட்டுமே காளியம்மைதான்மகிழ்ந்தாள்

ஏலகன்னி காமவிகாரத்தால் அர்ச்சுனனென்று அணையப் போக காளிநான் அருச்சுனனல்லவென்று சொல்லல்.

காமம்பொறுக்காமல் கடிகியேலகன்னி
மார்பில்விழுந்து மருவியணையவந்தாள்
காளியென்றுதானறிந்து கைவிட்டாளேலகன்னி
என்னைக்கெடுத்தீரே என்பாவங்கொண்டீரே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கஞாயமுண்டோ
அருச்சுனராசாவை அங்கெனவேபோய்மறைத்தாள்
நில்லுநில்லுஞ்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கஞாயமுண்டோ
என்னைக்—கலியாணஞ்செய்து கடுகநடுவுமென்றாள்
ஆறலமுருமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
ஆதிகைலாசம் அரன்பதிக்குப்போறேனே
சிவனார்தன்கையாலே சேனவரம்பெற்று
வரும்போதேலகன்னி மாலையிட்டுக்கொள்ளுகிறேன்
என்னைமறக்காதே ஏலகன்னிநாயகமே
போகச்செலவுதாராய் போய்வாரேன்பெண்மயிலே
ஆணையிட்டாலல்லாது அடியேன்செலவுகொடேன்
என்றதுகேட்டுமே ஏதுசொல்வான்வாள்விஜயன்
ஆணையிட்டுத்தந்தாளே ஆரணங்கைவிவாகஞ்செய்ய
மாதர்செலவுதர வல்விசயன்போய்நடந்தான்
அந்தவனங்கடந்து அப்புறம்போகலுற்றான்
பத்தாம்வருஷம் முடிந்ததுபஞ்சவற்கு

பாண்டவனம்—முற்றிற்று.

௰௧—வது சபாமிருகவனம்

அந்தவனத்தைவிட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைசானகத்தில்
கோணிவைத்தசீமாட்டு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசீமாட்டு வனமேகுடிபுகுந்து
காடுகடந்து கரியமலைதான்தாண்டி.
சபாமிருகந்தானிருக்கும் தனிவனத்திற்போனார்கள்
ஐந்தடிக்குப்பர்னசாலை அழகாகஉண்டுபண்ணார்
ஏழடிக்குபர்னசாலை எழிலாகஉண்டுபண்ணார்
அங்கேகுடித்தனமாய் ஐவர்கள்தானிருந்தார்
இப்படியாகச் சிலநாளிருக்கையிலே
சபாமிருகந்தனிலே தனஞ்சயனைப்போக
வெள்ளானைவனந்தனிலே வில்விசயன்வாரானும்
உலகமதிர்ந்திடவே உத்தமனும்வாரானும்
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்

ஒருவன்சிவனேயென்ன உலகர்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அடித்தாரேஜேகண்டிகை
சிவசிவாவென்றுசொல்லி தொனிக்கவேசங்குதனை
சங்குதொனிகேட்டு சபாயிருக்கத்தானெழுந்து
வால்கிளப்பிகுமாளமிட்டு வருகுதேவெள்ளானை
தன்னிழலையேபார்த்து தாவிவருகுதானை
கொம்பினால்மலையைபறித்து குத்திக்கிளப்பிவிடும்
அருச்சுனரைக்கொல்லவென்று ஆனைவருகையிலே

அருச்சுனன் யானையைக் கொல்லுகிறது.

கண்டானேவாள்விஜயன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாணிபூட்டி விசையுடனே தொனித்தான்
அர்த்தசந்திரபாணமெடுத்து மந்திரத்தையுச்சரித்தான்
மதயானையைக்கொல்லவென்று மார்பணைவாங்கினான்
அருச்சுனன்விட்டதொரு அர்த்தசந்திரபாணமது
மதயானைதன்னையே வகுத்ததுநடுவிலாய்
வீரிட்டுவிழுந்ததே வில்விஜயன்தன்கையால்

அருச்சுனன் கையினால் விழுந்த யானை ஒருபிராமணனாகவந்தது

ஆனைமடிந்திடவே அதிலொருபிராமணன்தான்
பஞ்சாங்கப்பிராமணனாய் பார்ப்பானவெளியானான்
கண்டானே அருச்சுனனும் கைகூப்பிப்பிராமணனை
வாரும்பிராமணரே மதயானையானீரே
ஆனேன்சங்கமமோ அவ்வார்த்தைச்சொல்லுகிறேன்
தெய்வலோகந்தன்னிலே சிவனுடையபூங்காவனம்
ஐயாபூங்காவனத்தில் அதிகாரியென்னுதுகாண்
அம்மைபூங்காவனத்தில் அதிகாரமென்னுதுகாண்
ஐயர்வனத்தார்கள் அம்மைபோகொணாது
ஒன்றையொருநாளில் உச்சிதத்தைப்பார்ப்போமென்று
அம்மைவனங்களிலே அதிகாலைபோகையிலே
ஆயிரம்பெண்களிலே அதிலொருத்தி
கண்ணுக்கினியபெண்ணை கண்டாசைபட்டேனே
பார்த்தாசைபட்டேனே பைங்கிளியைக்கைபிடித்தேன்
என்னைதிமிறிவிட்டு ஈஸ்பரியாள்பக்கஞ்சென்றாள்
ஈஸ்பரியாள்தன்னுடனே இச்செதியுரைத்தாள்காண்
அம்மையதுகேட்டு அதிசிவன்பக்கஞ்சென்றாள்
உமையவளதுகேட்க உம்பர்பிரான்பக்கல்வந்து
ஐயாநுஉன்வனத்தில் அதிகாரஞ்செய்கிறவன்
எந்தன்வனக்கன்னியரை இவன்பிடிக்கஞாயமுண்டோ
என்றுமிகச்சொல்லுகையில் ஈஸ்பரனார்தானேகேட்டு
என்னைவரவழைத்து ஈய்ந்தார்பெருஞ்சாபம்
என்னுடையசாபமது எப்போதுநீங்குமென்றேன்

ஆதிகைலாசம் அருச்சுனன் வருகிறான்
அருச்சுனைக்கொல்லவே ஆங்காரமாய்ப்போகையிலே
அருச்சுனன்போகமுற்று அப்பாலேசென்றிடுவான்
என்றதுபோல்நீரும் என்சாபப்போக்கிவிட்டீர்
வாருமென்றிருவருமாய் வனத்திலேபோகுறார்கள்
போகப்பிராமணனும் புதுமையொன்றுசொல்லலுற்றான்

அருச்சுனனுக்குப்பிராமணன் குயவன் வரலாறுகூறல்.

ஆற்றேன்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
செப்புமொழிதவறான் திருநீலகண்டரவர்
கொடுக்கவாதார் குயவன்குயத்தியரும்
இப்படியாக இவரிருக்குங்காலையிலே
மகாராசன்வாசலிலே மங்கலகாரியத்தால்
கோவுங்குயமுட்டி கொண்டுவாவென்றுரைத்தார்
அக்ஷணம்நீலகண்டன் அனேகமுட்டிசொப்பணிட்டு
பொன்போலழுத்தியே போட்டான்பெருஞ்சூளை
சூளைகலைத்து சட்டிமுட்டிசட்டி
மகாராஜன்வாசலிலே வைத்தனேகொண்டுவந்து
மகாராஜன் தான்பார்த்து மகிழ்ச்சியாய்குயவருக்கு
சொர்ணமணிமுத்தும் துகிலாடையுமெடுத்து
நீநில்லாபூஷணத்தை நீலகண்டனுக்கருளி
போய்வாருமென்றுமே போகச்சொலவருள
வெகுமானம்பெற்றுமவன் வீதிவருகையிலே
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
காற்றுமழையுங் கடுமைவருகுது
தேவதாசிவீதி தெருத்திண்ணையோரத்தில்
வந்துபடுக்கிறான் வான்மழைபோகளவும்
அந்தச்சமயத்திலவ்விட்டுத்தாசியவள்
போசனமுண்டுமே பொற்கலத்தைத்தான்கழுவி
சன்னல்கதவையவள் தான்திறந்துஊற்றினாள்
மண்ணுடையான்றன்மேலே வந்துவிழுந்தது
அப்போசிவசங்கரனே சலந்தெளிக்கராரென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாசியவள்
அஞ்சிபயந்துமே ஆரென்றுகேட்கலுற்றாள்
மண்ணுடையான்நான்காணும் வந்தேனிதுவழியாய்
வான்மழைக்குமாதரசே வந்துறங்கினேன்
ஆரோதெரியாது அன்னஜலந்தெளித்தார்
என்றதுகேட்டுமே ஏலப்பசுங்கிளியாள்
மெத்தப்பயந்துமவன் வீட்டேறக்கொண்டுசென்று
அபிஷேகமாட்டிவைத்தாள் ஆனந்தமாயவனுக்கு
சாமுவர்த்தி இளநீர்சந்தபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அலங்காரம்பண்ணினாள்

போஜனமிட்டுமவள் புட்பமூர் தான்கொடுத்தாள்
சந்தனமுந்தாம்பூலம் தான்கொடுத்தாள்தையலரும்
அன்றையராத்திரி அங்கிருந்து குருபனவன்
மற்றநாட்காலையில் வந்தானேவாழ்மனைக்கு

குயவன்மனையாளுக்கும் குயவனுக்கும்தர்க்கம்

குயவனுடதேவி கொம்பனையாள்கண்டாளாம்
கண்டுபுருஷனைக் கண்ணீரைத்தான் துடைத்தாள்
கோவென்றசத்தமுடன் குமுறியழுதாளாம்
ஆரோடேபோகவே அமர்ந்திருந்தீர்மன்னவரே
என்னைவிட்டுப்பிரிவதற்கு என்னமனம்வருமோ
வேசியர்கள்வீட்டிலே விளையாடிவந்தீரோ
உன்னுடனேபேசேனே உன்முகத்தைப்பாரேனே
பெற்றதகப்பனைபோல் பிரியமுடன்பாத்திருப்பேன்
குருக்களுடமையை கொள்ளைகொண்டுபோனவர்கள்
தாயில்லாப்பிள்ளைகளை தலையிலடித்தவர்கள்
சிசுவதைபண்ணவர்கள் ஸ்ரீவதைப்பண்ணவர்கள்
பெரும்பாவிசேருகிற பெருநரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டாள் இளங்கொடியாளக்குயத்தி
இவ்வார்த்தைகேட்டுமவன் எரிபரந்தநீலகண்டன்
கண்கள்சிவந்துமே காந்தளப்பட்டானும்
மெய்யானவார்த்தைகளை விளம்பினேன்மெல்லியற்கு
பொல்லாதவார்த்தையினுற் புலம்புகிறாளிதுசெய்வேன்
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வான்நீலகண்டன்
இன்றுமுதலாக இனிநெடுநாள்வரைக்கும்
உன்னுடனேபேசினுல் உனக்குத்தகப்பனென்றான்
அவ்வார்த்தைதள்ளினுல் அனேகபாவஞ்சொல்லுகிறேன்
அபயமென்றுவந்தவனை அனியாயம்பண்ணபாவி
பெரும்பாவிசேருகிற பெருநரகம்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இயலானநீலகண்டன்
அப்படியாக அனேககாலந்தானிருந்தார்

ஆதிசிவனும்பார்வதியும் பண்டாரவேஷமாக
வந்துஇருவரையும் ஒருமைப்படுத்தி
மோட்சமீதல்.

ஆதிசிவனுக்கும் ஆதிபரமேஸ்பரிக்கும்
பொறுத்துமுடியவில்லை பொல்லாச்சபதமிது
இருவரையும்பேசிவைக்க ஈஸ்பரனுர்வந்தாராம்
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுச்சங்கமாய்
ஆண்டிபெரியவராய் ஆண்டவன்வடிவெடுத்தார்
அம்மையுமையவளும் ஆண்டிச்சிவடிவெடுத்தார்
விநாயகன்வீரபத்ரன் வேல்பொருதங்கந்தனுமே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்

கன்றுபுலித்தோலும் கைலாசமான்தோலும்
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரானைப்போலாக
நீலகண்டனுக்காக நினைத்தார் திருவோடு
கதிரோனைப்பாத்திரமாய் கடுகெனவேகைபிடித்து
வாரார்பரமசிவன் வனமாய்வனங்கடந்து
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
நீலகண்டன்வாசலுக்கு நிமலரும்வந்தவிட்டார்
ஆடாபத்தரே அறிவுள்ளபுண்ணியனே
என்பிள்ளைபெண்சாதி யிவ்விவர்களெல்லோரும்
பசிவோடேநாங்கள்வந்தோம் பசியாற்றிநீரனுப்பும்
பிள்ளைபசியாற்றில் புண்ணியங்கள்வேணதுண்டு
குழந்தைபசியாற்றில் குமாரனைப்பெற்றிடுவாய்
உத்தனுறன்றுளறயார் உன்னுடையபெண்சாதி
வாழ்த்துசுகமாவீர் மகாதேவர்புண்ணியத்தால்
என்றல்லோசங்கமரும் ஈய்ந்துவிட்டார்வெண்ணீறு
வாங்கியணிந்துகொண்டு வணங்கியேதெண்டனிட்டான்
நல்லதுசங்கமரே நான்செய்தபாக்கியத்தால்
வந்தீர்களிப்போநான் வாழ்ந்துசுகமானேன்
பத்துநாழிகைபொழுதில் பசியாறநீங்கள்வந்தால்
போசனமுண்பீர்காண் போய்வாருஞ்சங்கமரே
என்றுமவரேதுசொல்வார்சங்கமரும்

சங்கமர் நீலகண்டன்மனஞ்சோதித்தல்.

நான்போசனம்பண்ணுகிற பொன்னான திருவோடு
இங்கேவைத்துநான்போறேன் எடுத்துமறவாமல்வையும்
ஊர்திரிந்துநான்வாரேன் உன்வசத்திருக்கட்டுமென்றார்
என்பாட்டனார்காலமிலே பண்ணின திருவோடு
பாத்திரம்போய்விட்டால் பழிவந்துசேருமென்றார்
என்றதுகேட்டு ஏதுசொல்வான்நீலகண்டன்
ஆனாற்கேள்சங்கமரே ஐயாபெரியவரே
என்னுடையதேவியுடன் இவ்வார்த்தைதனையுரைத்து
சாதங்கறிவகைகள் சமைக்கவேசொல்லுமையா
பாவற்பயிர்பந்தலின்மேல் பாத்திரந்தனைவைத்துவையும்
அரன்மனைக்குள்ளேநுழைந்து அச்சியமாந்தனைமுடித்து
மன்னனுடையான்வார்த்தைதனை மாதருடனுரைத்தார்
பந்தலின்மேலாகப் பாத்திரங்கள்வைத்தநின்பின்
பாத்திரத்தைப்பார்த்திரென்று பண்டாரந்தானடந்தார்
செப்பிநடந்தாரே திருநீலகண்டன்வாழும்
அத்தெருவுதான்கடந்து அடுத்ததெருவீதியெல்லாம்
ஆத்திமுலையருகில் ஆதிசிவன்வந்தயர்ந்தார்
அந்தசமயத்தில் ஆதித்தன்போய்மறைந்தார்
சுக்கலாதேவிமகன் சூரியன்தான்மறைந்தான்

குயவனுடதேவியரும் குடிவாழ்க்கைசெய்திருந்தாள்
அனேகநெடும்பொழுது ஆனபிறகாக
மண்ணுடையான்தானெழுந்து வாசலிலேவந்தமர்ந்து
பாவர்பந்தலைப்பார்த்தான் பாத்திரத்தைகாணோமென்று
தேவியெதிரில்வந்து திகைத்தார்போல்நின்றுவிட்டான்
கைநீட்டிநீலகண்டன் கண்காட்டிகேட்கிறான்
ஆரணங்குமாதுகன்னி அறியேனென்றுசாடைபண்ணாள்
மனதுசஞ்சலமாக மண்ணெடுத்துப்பண்ணுகிறார்
பன்னிருந்தாளெடுத்து பாத்திரமபண்ணினான்
சுடிகியேசூளைபோட்டு கவிழ்த்துவைத்தான்பந்தலிலே
ஐயரும்அம்மையுமாய் ஆதிசிவன்வாராராம்
திருநீலன்மாளிகையில் சிவசிவாவென்றுவந்தார்
கடியியேநீலகண்டன் கைக்குச்சலங்கொடுத்தான்
கைப்பூசிக்கொண்டு கடுகியேஉள்நுழைந்தான்
பாத்திரங்கொண்டுவந்தார் பண்டாரம்பார்த்துவிட்டார்
என்னுடையபாத்திரம் எங்கேயென்றார்சங்கமரும்
வைத்துநீர்போனபின்பு மாயமாய்ப்போச்சுதையா
ஆகையால்ஆண்டவனே அட்சணமேசெய்துவைத்தேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும்
என்-பாட்டனார்காலையிலே பண்ணிவைத்தபாத்திரத்தை
ஏமாத்திமோசம்பண்ணி இல்லையென்றுசொல்லலாமோ
மகாராஜனிடத்தில்வாரும்வழக்கைப்போய்ச்சொல்வோமென்றார்
மடிபிடித்துசங்கமரும் வாராரேதானிழுத்து
முடிமன்னன்றன்சபைக்கு முன்பாகவந்துசொன்னார்
பசித்தவென்றுசோறுகேட்டேன் பகலைக்குவாருமென்றார்
வச்சிரத்தாலிழைத்த மாணிக்கப்பாத்திரத்தை
இவர்கையில்நான்கொடுத்து இஷ்டமிடப்போயிருந்தேனே
வந்துபின்னேகேட்டாலே மாபாவிகாணோமென்றான
ஆகையினாலேதான் அழைத்துவந்தேனும்மிடத்தில்
அதிதிபரதேசி யாருமில்லையென்றனுக்கு
ஆண்டியுமையென்று அவரிடத்திலேநீர்கேட்டு
வாங்கியேதாருமென்றார் மகாராஜாராஜாவே
என்றுதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராஜன்
ஆரடாநீலகண்டா அறிவுகெட்டபாதகனே
பரதேசியுடைமையைநீ பறிக்கிறதுநியாயமோடா
குயவன்குயத்திபரைக் கொப்பனைவெட்டுமென்றார்
வெள்ளிப்பிரம்பாலே வீசியடியுமென்றார்
மாறியடியுமென்றார் வந்தகுயவனைத்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தார்தலையாரி
எருக்கமலராலே எட்டியடித்தாரே
உள்ளம்நடுங்கமேனி உதிரம்வடியுதங்கே

அப்போமகாராசரிடம் ஆண்டியவரேதுசொல்வார்
இன்னஞ்சிலராசரண்டை இட்டுபோய்போறேனையா
கட்டவிழ்த்துவிட்டிடென்றார் கடுகிலேகண்டனைத்தான்
அரண்மனையைத்தாண்டி அப்புறம்போகையிலே
ஆதிசிவனும் அங்கேமனமகிழ்ந்து
சன்னிஷபத்திலே ஐஸ்வரிசெக்கத்திலே
பேழைவயிற்றோனும் பெருச்சாளிவாகனத்தில்
கந்தர்மயில்மேலே கடுகியேவந்துநின்றார்
தங்களுடவாகனத்தில் சாமிகளுமேறிவந்தார்
வந்தவிசித்திரங்கள் மன்னனுடையான்கண்டுவிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
சிவனுமபத்திபட குறைகளைத்தீர்த்தாரும்
காட்சிகொடுத்துக் கைலாசம்போனாராம்
கீசகண்டன்பெருபெற்ற கேமாகுதிவ்வனந்தான்
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
புண்ணியவனத்திலே போய்ஸ்தானம்பண்ணிவந்தால்
என்பாவந்தீரவே ஈஸ்வரனார்வரமளிப்பார்
என்றுபொய்கைதனிலே பொட்டெனவேஸ்நானஞ்செய்து
சிவனைநினைத்து திருநீற்றுக்காப்பணிந்து
அரனைநினைத்து அள்ளியிட்டான்வெண்ணீறு
பஞ்சாட்சரமணிந்து பகவானைப்பூசைசெய்து
அகாரஉகாரமென்ன அடித்தானே ஜெபகண்டிகை
நமசிவாயவென்று ஜெபித்தானே சங்கரனை
சிவாயநமவென்ன உலகஞ்சிவனையென்றும்
அகாரமென்றுசொல்லி அந்தணன்தாண்டினன்
மற்றுமொருவனத்தில் வாராதிருவருமாய்
இந்தவனந்தானுடைய தென்றானே விஜயன்

சபரிருக்கவனங்கடந்து ஊர்க்குருவிவனம்வருதல்.

ஊர்க்குருவிபெற்ற வனமென்றுஉத்தமனும்
வாயில்லைச்சொல்ல மகாபட்சிகள்தான்
ஏக்கவிதனப்பட்டான் கல்லாலைக்கண்டதுகாண்
அந்தஅதிசயத்தை ஆண்டவனேசொல்லுமென்றார்

பிராமணன் அருச்சுனனுக்கு ஊர்க்குருவிவரலாறுகூறுதல்.

அப்போபிராமணனும் அருச்சுனற்குஏதுசொல்வான்
ஊர்க்குருவிப்பட்சிதான் ஆண்டாறுமெண்ணூறுமாக
இந்தவனமதனில் இருந்துவாழும்நாளில்
பிள்ளைகளைபெற்றிருக்கப் பெருத்தவனங்களிலே
போவார்வருவார்குஞ்சைப் போய்பிடித்துக்கொள்வார்கள்
இரைதேடிவருவதற்குள் எடுத்துக்கொண்டுபோவார்கள்
கூண்டினிடமாகக் குருவிவந்துபார்த்தவுடன்
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டிருக்கும்

மறுகாலொருதரமும் மைந்தனுண்டாயிருக்கும்
பெண்குருவியானது புருஷனுக்கேது சொல்லும்
என்புருஷா என்கணவா என்வார்த்தைகேளும்
நான்பெற்றபிள்ளையெல்லாம் நமனுக்கிரைகொடுத்தேன்
போவார்வருவாரெந்தன் பிள்ளையைக்கொண்டுபோனார்
இப்போதுபிள்ளைபெற்றால் எவராகிலுமெடுப்பார்
ஆசைகள்தோணுது ஆணழகாயென்னசெய்வேன்
எங்கேநான்பெற்றெடுப்பேன் எனக்கரியச்சொல்லுமென
ஆனால்கேள்பெண்மயிலே ஆணங்கேயொருவார்த்தை
இந்தவனத்திலே இங்கேகுளிகுளிக்கால்
நமக்குஅன்னங்கிடையாது அன்னமேகேளும்
சமுத்திரக்கரையோரம் தாவுண்டுபிள்ளைபெற
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்லும்பெண்குருவி
அலைபெருகிதண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோய்விடுமே
இப்போதும்பிள்ளைபெற்று ஏமாந்துபோவேனே
என்றதுகேட்டு ஏதுசொல்லும்ஆண்குருவி
இவ்விடத்திற்பிள்ளைபெற்றால் ஏதுகுற்றம்வந்தாலும்
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுவேன்
யுத்தங்கள்செய்திடுவேன் உன்பிள்ளைவாங்கிடுவேன்
என்று-தலையிலடித்துமே சத்தியங்கள்செய்திடுமாம்
சபதங்கள்பண்ணினதை சமுத்திராசன்கேட்டு
இது-எவ்வளவுளார்க்குருவி என்னுடன்சண்டைபண்ண
சொல்லாதவார்த்தையைச் சொல்லுது சிட்டினங்கள்
ஆண்மையைப்பார்ப்போமென் றவ்வருணன்தானிருந்தான்
அப்போது சிட்டினத்தில் அழகான பெண்குருவி
செத்தையைத்தான்பொருக்கி சிறுவீடுகட்டிடுமாம்
இருமுட்டையிட்டு இருந்து அடைகாக்க
பின்னுமடைகாத்துப் பெற்றதிருகுஞ்சுகளை
கொப்பெனவேதான்பறந்து குழந்தைக்கிரைதேடிடும்
இப்படியாகவே இருக்கின்றவேளையிலே
தாயுந்தகப்பனுந் தானில்லாவேளையிலே
சமுத்திராசனவன் தண்ணீர்பெருகிவந்து
குழந்தையிரண்டையும கொப்பெனவேகொண்டேகி
பாதாளந்தன்னிலே பத்திரம்பண்ணினாராம்
பட்சிசமர்த்துகளைப் பார்ப்போமென்றுதானிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகானபெண்குருவி
குழந்தைக்கிரைதேடிக் கொண்டுவந்துபார்க்கையிலே
மக்களைக்காணுமல மருகிப்புலம்புகுது
மார்பிலேயுந்தோளிலேயும் வண்ணமுகத்திலேயும்
அறைந்துபுலம்புகுது ஐயோமகனேயென்று
மக்களைப்பறிகொடுத்து பண்பேயேதேங்குவேனே

மைந்தனைப்பறிகொடுத்து வயிற்றிலறைந்துசொல்லும்
பாவிகெடுத்தாயேந்தன் பாலகனைக்கொல்லவென்று
என்றும்பகையாளனேற்பட்டாயெனக்கு
புதல்வனைப்பறிகொடுத்து புலம்புதுபெண்குருவி
இனியோதெய்வமென்று அலையுதுபெண்குருவி
அக்கரைபற்றி ஆண்குருவிதுசொல்லும்
மனதழியாது மக்களைவாங்கிதாரேன்
சமுத்திராசனுடன் சண்டைபிடிச்செய்து
புதல்வரைவாங்கித்தாரேன் புலம்பாதேபெண்மயிலே
என்றுஎழுந்தது இயலான ஆண்குருவி
மூக்கினாற் சிறகிழுத்து மூனையாலெழுந்தது
எல்லையென்றுநின்று எழுந்துதுகிட்டினதாம்
காக்கைக்குருவி கழுகுபருந்துகளாம்
மாடப்புறவாம் மயிலுங் குயிலினமாம்
காடைக்குருவிகளாம் கவுதாரிபேடைகளும்
அன்னமயில்கோழிகளும் ஆனைமயிலினமும்
கூளக்கருங்குருவி கோட்டானும் ஆந்தைகளும்
ஒக்கவண்டல்லாம் பூவைக்கு ஓடியேவாங்களென்று
சமுத்திராசனுடன் சண்டைபண்ணப்போகவேணும்
என்றுடனேயழைத்தார் ; எல்லோரும்வாங்களென்று
மருந்திபெருகியே வாசகத்தைதானுரைத்து
பூமியைத்தொட்டு உண்மையிதைச்சொல்லி
தெய்வவினதகனுக்கும் சேதிசொல்லிவாருமென
வாயுவேகமாக வருகுதுவாயசந்தான்
ஆகவிரிதுள்ளவர்க்கும் அந்தரமுள்ளவர்க்கும்
செப்பித்திருப்பதியில் திருமாலருகிருக்கும்
ஆயனுடைவாகனம் ஆழ்வாரெழுந்திருந்து
மாயனைத்தெண்டனிட்டு வணங்கியேபேசுதுசொல்லும்
தன்னுடைமரபுக்கும் சமுத்திராசனுக்கும்
யுத்தங்களாகிறதாம் உங்களதுபெருமாளே
என்னைவரவழைத்தார் யானும்போய்ச்சேரவேணும்
சாஷ்டாங்கதெண்டனிட்டே சாமிக்குரைத்ததப்போ
குதூகலத்தோடு தொப்பெனவேவிடைகொடுத்தார்
பிரமனுடைவாகனமாம் பேடன்னத்தோரினமும்
மன்மதனுடைவாகனமாம் வர்ணக்கிளியினமும்
சனிபகவானுடைவாகனம் சமர்த்தானவாயசமும்
ஆனவர்தேவாண்டை அடிபணிந்துதெண்டனிட்டு
சமுத்திராசனுடன் சண்டைசெய்யப்போறோமென்றார்
அமராருடைக்குமென்று ஆளோலையனுப்பினது
ஆகையாலாண்டவனே அடியேனும்போகவேணும்

எங்களுக்குச்செலவருளும் என்றபணிந்தது
அத்தண்டதேவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்
சமுத்திராசருடன் சண்டைகளெப்படியோ
இப்புதுமைபார்ப்போமென்று இயலானதேவரெல்லாம்
நாமும்வருகிறோம் நடவுங்கள்முன்னேயென்றார்
தெய்வலோகப்பட்சி திரும்புதுபூமியிலே
தனித்தனிபட்சியெல்லாம் சமுத்திரக்கரையோரம்
தன்குலத்துராசருக்குச் சரணமிடும்பட்சியெல்லாம்
அப்போதுசிட்டினந்தான் அனைவருக்குமேதுசொல்லும்
சமுத்திரக்கரையோரம் தாவுதேடிபிள்ளைபெற்றால்
அலைபெருகித்தண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோனது
என்னுடையபிள்ளைதனை எடுத்துக்கொண்டுபோனது
ஆகையாலுங்களையும் அவசியங்காணவழைத்தேன்
வருமென்றபோதையிலே வந்தீர்கள்தயவுசெய்து
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுங்கள்
என்னுடையபிள்ளையை எவ்விதமும்வாங்கிடுங்கள்
உகந்துஅனைவோர்க்கும் உபசாரஞ்செய்கையிலே
அத்தண்டபட்சிகட்கும் அதிககோபமுண்டாகி
காக்காயொருவரிசை கழுகுவொருவரிசை
அன்னமொருவரிசை ஆழ்வாரொருவரிசை
பருந்துவொருவரிசை பச்சைக்கிளியொருவரிசை
மயிலுமொருவரிசை வல்லூறொருவரிசை
குயிலுமொருவரிசை குருவியொருவரிசை
காடையொருவரிசை கவுதாரியொருவரிசை
புல்புல்லொருவரிசை புறக்களொருவரிசை
உள்ளானொருவரிசை ஊர்க்குருவியொருவரிசை
நாரையொருவரிசை நாகணவாயொருவரிசை
கொக்குமொருவரிசை கோட்டானொருவரிசை
அந்தச்சமயத்தில் அனேகவிதப்பட்சியெல்லாம்
அந்தப்புறங்களிலே அவ்வகுப்பாய்சேர்ந்திருந்தார்
அப்போதுமூவர்களும் அயிராவதந்தோனும்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
ஆகாயமார்க்கமதில் அந்தரமாய்நின்றுகொண்டு
பட்சிகள்நின்றிருக்கும் பாவனையைப்பார்த்தார்கள்
எழும்பியேஅந்தரமாய் ஓட்டிப்பறக்கிறது
தானுகவேமறந்து தண்ணீரில்தான்குதித்து
இருபக்கம்றக்கையிலே எடுத்துஜலம்கொண்டுவந்து
பாரெல்லாம்நீர்தளும்ப பறந்துதெளிக்கிறது
ஆரைநாழிக்கொள்ளையிலே அடியோடேவற்றிவிட
சமுத்திரமானதெல்லாம் தண்ணீர்வரண்டுவிட
சமுத்திராசன் சகிக்கமுடியாமல்

தேவர்கள் தலைவனுடன் செப்பமுறையமிட்டான்
அத்தண்டபேரும் அனைவரும்வந்திறங்கி
கிட்டினத்தைத்தானழைத்து செப்புவார்தேவரெல்லாம்
உன்-தயவைவாங்கித்தாரோம் சமுத்திரநீருண்டுபண்ணும்
எப்போதும்போலேநீர் ஏற்படுத்தும்சமுத்திரத்தை
என்றுசொல்லப்பட்சிகள் யெல்லாமொருமித்து
பட்சியருகழைத்து வார்த்தைகளைதுசொல்லும்
சுத்தருக்குச்சொன்னீரானால் கைவேலையுண்டுசெய்வார்
என்றுசொல்லபட்சியினங்க ளெல்லாமொருமித்து
வேலவனார்தன்பாதத்தில் விழுந்துமுறையமிட்டு
ஆண்டவனேயென்சாமி அடியேனால்முடியாது
நீர்பிணைத்தாலிட்சணமே நீரும்பெருகிவிடும்
அடியேனைப்பற்றியே அலைகடலுண்டுபண்ணும்
என்றுபணிந்து இறங்கியேதொழுதுநிற்க
கந்தர்மனமகிழ்ந்து கடுகியேவில்வளைத்து
வில்லெடுத்துநாணைப்பூட்டி வேலெடுத்துமந்திரித்து
அலைகடலின்கரையெல்லாம் அம்பிலொருமுத்தாக
பூமியதிரவே போய்ப்பாயும்வேலிதுதான்
மண்ணினுள்ளநீரையெல்லாம் வழித்தொருமுத்தாக
மூக்கால்தளர்ந்து முனிந்துகடல்பெருக
சந்தோஷப்பட்டானே சமுத்திரராசனவன்
குருவிடம்பிள்ளையை கொண்டுவந்துதந்தாராம்
ஆதியிலிருந்தபடி செய்தாராம்
பூமிபத்தும்கொண்டு தேவர்முனிவரெல்லாம்
தேவர்களைச்சென்றுத் தடையிருப்பீரென்று
சொற்சிதனையுடன்கொடுத்து மகாதேவர்போய்நடந்தார்
வைக்குருவிபேரும்பெற்று ஒன்றுவனமிதுகாண்
என்றதுகேட்டு எழில்விஜயராசாவும்
நற்றுநற்றுக்கேட்டு உள்ளமிகமகிழ்ந்தார்
அந்தச்சமயம் அருச்சுனராசனிடம்
போதன்னடைந்துபெயரைப் பகன்றான்பிராமணனும்
பொய்யாகுமெனமதுசொல்லி போகலுற்றான்போர்விஜயன்

பதினோராவது ஊர்க்குருவிவனம்முற்றிற்று

௧௨-வது, காளபயிரவ வனம்.

பன்னிரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவிலைவைத்தேமாதி கூடதலைமேலேவைத்தார்
அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
காளபயிரவ வனத்திலேகாவலர்கள்
அங்கேகுடித்தனமாய் இன்பர்குடியிருந்தார்

காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
காளபயிரவ சாதகனகத்தில்வந்தமர்ந்தான்
அங்கேதவமுனிகள் அனேகம்பேரப்பொழுது
சாமியென்றுவந்தோமே தவசுகுலைந்ததையா
சிவனாரென்றுவந்தோங்காண் செய்ததவம்வீணாச்சு
என்றுமனங்கலங்கி எப்போதும்போலிருந்தார்
அந்தரிஷிகளண்டை அருச்சுனன்தவஞ்செய்தான்
அங்கிருக்குமரிஷிகள் அனேகப்பெரியவர்கள்
இத்தனைகாலம்மட்டும் இருந்துதவம்பண்ணுகிறோம்
இருந்துதவம்பண்ணி ஈஸ்பரனும்வந்ததில்லை
ஆதிசிவனாரை ஆண்டவரைக்காணவில்லை
பரமசிவனாரைப் பார்க்கஅரிதாகும்
கைலாசவாசலிலே கடுகதவம்பண்ணினாலே
பரமசிவனாரும் பாக்கியந்தந்திடுவார்
சுகமாகவாழ்ந்திடுவீர் துரிதமாயேகுமென
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவாள்விஜயன்
எல்லோர்க்குஞ்சரணமிட்டு எழில்விஜயன்போய்நடந்தான்
கடுகிநடந்தானே கைலாசபருவதத்தில்
பொய்கையில்ஸ்நானம்பண்ணி பூசைதவமுடித்து
காளபயிரவனைக் கடிகித்தியானம்பண்ண
எழுபதடிக்கம்பம் எழில்விஜயன்நாட்டினான்
எழுபதடிக்கம்பத்தின்மேலேழுயிளநீரைவைத்தான்
எழுயிளநீரின்மேல் எழுவிளாம்பழத்தைவைத்தான்
எழுவிளாபழத்தின்மேல் எலுமிச்சங்கனியைவைத்தான்
எலுமிச்சங்கனியின்மேல் எழுகொட்டைபாக்குவைத்தான்
எழுகுண்டுமணியின்மேல் எழுகடுகைவைத்தான்
எழுகடுகதன்மேல் எழுசெப்பூசிவைத்தான்
எழுசெப்பூசியின்மேல் எழுசெவ்வலரிவைத்தான்
எழுசெவ்வலரியின்மேல் வழினன்தேர்விஜயன்
ஒருக்காலைத்தானூன்றி ஒருக்கால்முழங்காலில்வைத்தான்
கண்ணிரண்டுமூடியே கர்த்தன்மேல்தியானமானான்
அரகரா அரனேயென்று அடித்தான்செயகண்டிகை
ஓம்நமசிவாயவென்று ஒலித்தானேசெயகண்டிகை
ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அருந்தவசுபண்ணுகிறான் அருச்சுனராசதுரை
அகோரத்தவசுபண்ணான் ஆண்டவனைக்காணவென்று
ஆதிசிவனார்க்கு அருச்சுனன்செய்ததவம்
பொறுத்துமுடியவில்லை போர்விஜயன்செய்ததவம்
ஆதிசிவனார்க்கு அக்கினியாய்வீசுகுது
காலனைக்காலாலுதைத்த கைலாசநாதரவர்
கோபம்பெரிதாகி கொப்பெனவேயெதுசொல்வார்

ஆடாதாதவனை அழையுங்கள்மாயவரை
எமன்பிரமாவை இங்கேயழையுமென்றார்
விண்ணாட்டுக்கேதவனை விரைந்தோடியழையுமென்றார்
விக்கினவிநாயகனை வேலவனையழையுமென்றார்
ஓடியழைத்து ஒருநொடியில்வாருங்களென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அவரவர்கள்பயணமானார்
வைகுந்தம்ஓடிவந்து மாயவரைத்தெண்டனிட்டு
ஆதிசிவன் அழைத்துவரச்சொன்னாரென்றார்
அமராபதியானும் ஆயிரங்கண்ணனுக்கும்
தாமலோகமானும் எமதர்மராசனுக்கும்
பிரமலோகந்தனிற் பிரமதேவனவற்கும்
வசிஷ்டரும்வால்மீகர் மகாதவமுடையவர்க்கும்
அத்தண்டதேவர்முதல் அனைவருக்குஞ்சொல்லினன்
சிவனார்வரவழைத்தார் சீக்கிரம்வாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அவரவர்கள்பயணமானார்
வாழ்கருடனேறியங்கு வந்துவிட்டார்மாயவனார்
மத்தகஜமேறியங்கு வந்துவிட்டாரிந்திரனார்
எமன்கடாவிலேறி ஈசரருகில்வந்தான்
அன்னப்பிரமாவும் அன்னத்தின்மீதில்வந்தார்
கானமயில்மேலேறிக் கந்தனும்வந்துவிட்டார்
மூஷிகவாகனத்தில் முன்னோனும்வந்துவிட்டார்
முப்பத்துமுக்கோடி முனிவரும்வந்துவிட்டார்
ஆதிசிவன்பக்கலிலே அனைவரும்வந்துவிட்டார்
வந்துபணிந்தார்கள் மகாதேவன்பக்கலிலே
அத்தியுரித்தவனார் ஆதிசிவனைத்தான்சொல்வார்
மாயன்பெருமானை வார்த்தைதப்பென்றுகேட்டீரோ
ஆரோதெரியாது ஆதிகைலாசம்வந்தான்
எவனோதெரியாது இங்கேதவம்பண்ணுகிறான்
கைலாயங்கன்னியிலேதான் கடிதுவரநியமுண்டோ
வைகுந்தர்க்கு அப்பாலே வானகத்தன்னிலேதான்
ஒருதிதவம்பண்ணுக்கால் கட்டிவாங்கத்தடுவோம்
இந்தத்தவம்புரிய வந்ததேதோசொல்லுமென்றார்
இவன்-ஆரோதெரியாது ஆண்மையால்வந்துவிட்டான்
எவன்-தர்ப்பாட்டிவின சத்தங்கள்போடுகிறான்
ஆரோதெரியாது அறிந்துவந்துசொல்லுமென்றார்
மாயன்பெருமானும் வார்த்தையங்கேதுசொல்வார்
பாண்டுமகாராசன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குமாரர்களைவருண்டு
காவலேட்சத்திரம் நயனவிழிப்பார்வையுள்ளோன்
மீசைமுழுக்குமுகன் விழியிற்கருப்பழகன்
தோளிலேதானிருக்கும் தொப்புளில்அமிர்தகலசம்

பல்லில்பரசவிணை பாகத்தில்செந்தாமரை
பஞ்சவரிலிவனொருவன் பார்த்திபனென்றார்காண்
இடதுகால்பொம்மைவிருது வலதுகால்வீரதண்டை
சலவிருதுகுலவிருது சமர்த்துகள்படைத்தவன்காண்
சிவபூசைகுருபூசை சிவன்பாதம்மறவான்காண்
என்னதவம்வேண்டி யிங்குருந்தானென்றறியேன்
என்றதுதான்கேட்டு யேதுசொல்வாரீஸ்வரரும்
தருமர்தம்பியானாலும் சமர்த்துடையோனானாலும்
கைலாயந்தன்னிலே கடிகிவரஞாயமுண்டோ
இவன்-இங்கிதமாயிருந்து எதுதவம்பண்ணினாலும்
வருந்தியிருந்தாலும் வரமருளப்போறேனோ
தவசைக்கெடுத்திடுவேன் தருமர்தம்பி அர்ச்சுனரை
என்றுமகாதேவர் எறிபறந்துகண்சிவந்து
வாயுராசன்தன்னையே வாவென்றழைத்தாராம்
அர்ச்சுனன்செய்யுமந்த அருந்தவசுகம்பமதை
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடுமென்றார்
அரைநாழிக்கொள்ளையிலே அதமாக்கிவாருமென்றார்
என்றதுதான்கேட்டு எழுந்தானேவாயுராசன்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கைமோசம்வந்ததென்றே கரியமாலப்போது
அருச்சுனராசனுக்கு அனர்த்தம்வராளாச்சு
காக்கவேணுமென்று கரியமாலோடிவந்தார்
மாயையாய்வந்தாரே வாள்விஜயன்முன்னிலே
காண்டீபா அர்ச்சுனரே கைமோசம்வந்ததடா
ஆதிபரமசிவன் அதிககோபங்கொண்டாரே
வாயுராசன்தன்னையிப்போ அனுப்பினார்மகாதேவர்
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடவாரான்
வாயுராஜனுக்கு வலுவாயிருப்பாயா
என்றதுதானகேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உம்மையேநம்பியே உம்பர்புறம்வந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உள்ளங்கைநெல்லிப்பழம உருக்குலைந்துபோகாமல்
தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாதே
பெட்டியில்பூஷணம் பெருமைகுலையாதே
காக்கக்கடனுமக்கு கரியமாலெம்பெருமாள்
அண்ணருந்தம்பியரும் அனுப்பினார்உன்னைநம்பி
ஆரைநம்பியிங்குவந்தேன் ஆதிகயிலாசம்
என்னமாயிருந்தாலும் ஈஸ்வரனொருந்தனுக்கு
வந்தவினைமாற்றி வரமருளச்செய்யுமையா
என்றுவணங்கினான் இயலானவாள்விசையன்

இக்கதைமனங்குளிர்ந்து ஸ்ரீராமரென்னசெய்தார்
தர்மர்தம்பி அருச்சுனன் தன் தவசிலைக்கம்பமிது
வாயுராசன்வந்து வலுமையயசக்கிறதும்
ஆதிசிவன்வந்து அசைக்கிலவித்தாலும்
தேவாதிதேவரொன்றாய்ச் சேர்ந்தசைக்கிறதும்
அர்ச்சுனன் தவசுநிலை அசையாமலிருக்கவென்றார்
மாயனார்வரங்கொடுத்து வந்துவிட்டார்கைலையிலே
ஆருமறியாமல் ஆதிசிவனருகில்வந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவாயுராசன்
மண்ணுமின்னுந்தான்திர வாரானேவாயுராசன்
தெற்கேயிருந்து திசைவடக்கேமுகம்நோக்கி
அப்புறத்துக்கிப்புறந்தான் அசையாமல்தானிருக்கும்
மறுகாலொருகாலும் வந்தசைந்தாலும்
சாயாமல்நின்றது தவசுநிலைக்கம்பமிது
தன்னாலேயாகாமல் சங்கரிக்கமுடியாமல்
திரும்பினான்வாயுராசன் சிவனுக்குச்சேதிசொல்ல
அருச்சுனனைப்பார்த்து அதிகப்பிரியமுமாய்
என்னிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
அர்ச்சுனனுடனுக்கு அஸ்திரந்தாரேனென்றார்
வாயுவின் அஸ்திரத்தை வான்விஜயன்தனக்கொடுத்தான்
வாக்கியஞ்சரித்து வான்விஜயனேதுசொல்வான்
எவராலும்பயந்தீர்க்கான் என்தவசைநீமுடிக்க
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வாயுராசன்
ஆதிசிவனழைத்து அனுப்பினார்உன்னிடத்தில்
தவசுநிலைக்கம்பத்தை சமுத்திரத்தில்போடுமென்றார்
ஆகையாலிங்குவந்தேன் அசைத்தேனே கம்பமதை
என்னால்முடியவில்லை இளவிசையா உனைஜெயிக்க
ஆதிசிவன்வந்திடுவார் அதிசயங்காட்டிடுவார்
எனவுரைக்கையிலே இளவிஜயனேதுசொல்வான்
உம்பர்பிரானுக்கு ஒருவர்தனைச்சொல்லுமையா
என்னவென்றுசொன்னது வெளிநில்விசயனர்ச்சுனனும்
இருபவைத்தபாசுபதங் கிரீடிக்குதருமையா
வேண்டும்வரங்கள்தன்னை விமலரேதருமையா
கேட்டவரங்கள் இருபாவைத்தாருமையா
வரங்கள்தந்தாலொழிய பலனைவிட்டுப்போவதில்லை
தவசுநிலைவிட்டு தனஞ்செயனும்போவதில்லை
ஆண்டவனேனுமயாவே அசட்டையாநீயிருந்தால்
மண்டையினப்பொன்று வாமதேவருக்குமையும்
தலையுடைப்பேனென்று சங்கரற்குநேருரையும்
என்றுவிசயனெடுத்துரைத்தனப்போது

வாழ்த்திவிடைபெற்று வருகிறூர்வாயுராசன்
ஆதிசிவனுற்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மான்மழுகரித்தகேவா மலர்ப்பாதம்சரணமையா
அர்ச்சுனன்தவசழிக்க ஆண்டவனேமுடிபரது
உம்பர்பிரானே உம்மாலாகாது
காட்சிதாரிடிலோ காண்டீபத்தாலடிப்பான்
வாங்கொடாவிடிலோ மண்டைப்பிளப்பேனென்றான்
என்றதைக்கேட்டு ஈஸ்வரனார்கோபமானார்
கேட்டீரோமாயவரே செர்வத்துடன்சொன்னது
மண்டையுடைக்கவோ வரம்வாங்கு வல்லவனே
காண்டீபத்தாலடித்து கூலிவரம்வாங்குவேனே
தலையுடைப்பேனென்று தவஞ்செய்தானிப்போதே
மண்டைக்கீழுடைத்து வல்லுபிரைவாங்கிவிடுவேன்
என்றுபரமசிவன் எரிபறந்து கண்சிவந்து
ஆரடாயிடிபகவான் அதிவீரவாய்வாருமென்றான்
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அருச்சுனன்தலையை அறுத்துசுக்கராக்கி
கொன்றுவதையாக்கிக் கொப்பெனவேவாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அங்காரயிடிபகவான்
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துநடுக்கமுற
எழுந்தானிடிபகவான் ஏழுலகந்தானதிர
அந்தசமயத்தில் அரிராமரோடிவந்தார்
அர்ச்சுனைபார்த்திபா ஆதிசிவன்கோபமானார்
இடிபகவான்தனை ஈஸ்வரனாரனுப்பினார்
தலையையுடைக்கவென்று தான்வாருமிடிபகவான்
தப்பித்துக்கொள்ளுமென்று சாமியவர்போய்விட்டார்
அந்தச்சமயத்தில் அங்காரஇடிபகவான்
தெய்வலோகந்தானதிர தேவர்கிடுகிடென்ன
பாதாளஆதிசேஷன் பயந்துகிடுகிடென்ன
கெற்பங்கிடுகிடென்ன கினிகலகாரிக்கொள்ள
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துகிடுகிடென்ன
எட்டுதிசைநடுங்க ஏழுலகந்தத்தளிக்க
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அர்ச்சுனற்குநேராக ஆகாசமீதிருந்து
உறுதியாய்ப்பலங்கூட்டி உச்சிமேலேதானிடித்தான்
வறட்டுயிடிபகவான் என்றன்னோவாள்விசையன்
இடிபகவானைவநுகையில் எழில்விஜயனென்னசெய்தான்
ஒஞ்சரித்துத்தானிருந்து ஒருபக்கம்இடிக்கவே
கண்முழிபிதுங்குது கண்ணீருந்தான்வடிய
இளப்புவியப்புமாயிருக்குதிடிதேவருக்கு
மெச்சினேன்மருமகனே விட்டுவிடுமென்னையென்றார்

எங்களைமின்னொளியை ஈந்திடுவென்தனக்கு
இப்பொழுதுன்தனக்கு இடையான் [illegible] மென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
இனிமேல்கலியுகத்தில் எங்கேயிடித்தாலும்
அருச்சுனனென்றுசொன்னால் அப்பால்நீர்போறீரே
என்பேர்சொன்னால் ஏழூரும்போறீரே
அவனியம்போமென்று வரமப்பவந்திரகாண்
அவரப்பவந்திரகாண் அந்தமொழிதனக்கெல்லை
என்றதும்கேட்டு ஏதுசொல்வாரிடிமகவான்
அக்கினிவருணப்பிருமனிடத்தில்
அங்காரத்துடனேவந்து அப்பட்டோனுக்குகையில்
சக்கிபயனாயென்றுன்னை தப்பவிட்டால் [illegible]
உன்-புண்ணியத்தாலே பிழைத்தானென்றான்
அவ்வார்த்தைதானேகேட்டு அர்ச்சுனனேதுசொல்வான்
அக்கினிவருணற்கு அடிபணிந்தேதுசொல்லும்
ஏதுவருத்தங்கள் எனையிடர்செய்தாலும்
அர்ச்சுனன்வார்த்தைக்கு அழிவுமறுபோதில்லை
எப்பாரமென் [illegible] ஈந்தளிப்பமானாலும்
வரம்வரக்குலல்லால் வாள்விசயனென்றுசொல்லும்
இடிபகவானுக்குரைத்து எழில் [illegible]
அரனைமறவாரும் ஆனபேதேரியானனுமான்
சிவனைமறவாரும் சிவமேலேதியானமானு
அந்தச்சமயத்தில் அக்கினிவருணரிடத்தில்
மந்தாரிடிபகவான் வணங்கிச்சொல்கலித்தான்
ஆண்டவனேறுப்பிய அறியமென்றுசின்னப்பம்
உன்வார்த்தைகேட்டுப்போய் [illegible]
எழிடியுக்கொரு பெரியபட்டமழித்தன்
ஆக்கினிக்கு [illegible] கொண்டான்
சக்கிரபாண அருச்சுனனார் தப்பிவிட்டானென்றுமேலே
எதுக்குச்செய்தாலும் இனித்துகட்டமருச்சுனனும்
வாமனாஸ்திரமெல்லாம் வான்விஜயனருச்சுனனும்
அவனை—இந்நாடநின்றீனக்கு [illegible]
மின்றுப்பிடிகொண்டாயே பிரமன்பாதுக்கு தயா
என்றுசொல்ல இடிபகவான் சனதந்துசப்பார்
அந்தனைக்குட்வல்லவனே ஆனசெல்ல அருச்சுனனே
அதைநாடுக்கொள்ளையில்லை அதனால் [illegible]
அநேகமானசொல்லுகளே ஆண்டவன் [illegible]
சொல்லுங்களேன்கேளு போய் சீக்கிரமாய்விரையுடனே
சரீரமாதியந்தனர்குரு சல்லடைக்கண்ணாக
துளைத்துவிட்டுவாருமென்று சொன்னான்பாசுபாணி
வருகுதுசெல்லுதான் வாள்விசயனைத்தன்னருகே

அந்தச்சமயத்தில் அரிராமரோடிவந்து
அருச்சுனவாள்விசையா அனேகம்போசவருகுதடா
ஆண்டவனகோபமதாய் அனேகஞ்சொல்லனுப்பிவைத்தார்
எச்சரிக்கையாகவே இருக்கணுமருச்சுனனே
என்றதுசொல்லியே எம்பெருமாளேவிவிட்டார்
அந்தச்சமயத்தில் அனேகமனசொல்லுவர
சுரேந்திரன்மைந்தனையுஞ் சூழ்ந்ததுசெல்லுகள்தான்
கண்டானேஅர்ச்சுனனும காண்டவபந்தானவனைசுது
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினிஅஸ்திரத்தை அருச்சுனனுமஉச்சரித்து
மார்பிளவாங்கினன் ஏளரவிட்டான் அக்கினியை
அருச்சுனன்தபசுகிலே கம்பத்தருகாக
அக்கினிவருகுது அண்டமுடியாது
செல்லுகளண்டாமல் சொக்கணலாய்ப்பத்துகுது
பார்த்துப்பயந்து பறந்ததுசெல்லுகள்காண
சங்கரன்தன்னருகே சரணமிட்டுரைதுசொல்வோம்
ஐயாவேசஸ்வரரே ஆண்டவரோர்சேனும்
அர்ச்சுனன்தன்னருகே அக்கினிவளருகுது
ஆற்றமுடியாமல் ஐயாவேவந்துவிட்டோம்
ஆதிசிவன்கேட்டு அதிககோபமுண்டாகி
அததனைக்கும்வல்லவனோ அர்ச்சுனராசனுந்தான்
என்றுபரமசிவன் எறிபறந்துகோபமுடன்
வருணபகவானை வாருமென்றுதானழைத்து
யானையுடகால்பெருமை யானைமழைபெய்யுமெனக்
கட்டளையிட்டு கடிகியேபோவென்றார்
ஆதிசிவன்வார்த்தை அவ்வருணன்கவறாமல்
சமுத்திரத்தின்நீரையுண்டு தான்வருதுமேகங்களும்
கார்மேகமேழும் கறுத்தெழும்பியது
ஆனைக்கால்போலவே அவ்வருணன்மழைபொழிய
அந்தச்சமயத்தில் ஆயருப்ஒடிவந்தார்
அர்ச்சுனாவாள்விசையா ஆண்டவனார்கோபமதாய்
வருணபகவானை மழைபொழிய அனுப்பினர்
எச்சரிக்கையாக இருமென்றுதானடந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவருணராசன்
மேகமெழும்பி மின்னல்வருகையிலே
கண்டானேவாள்விசயன் கனமோசம்வருகுதென்று
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
சங்கராமாரிபோலே சரமேற்சரம்பொழிந்தான்
அம்பினால்மூடுபந்தல் அர்ச்சுனன்போட்டுவிட்டான்
வானமழைபொழியாமல் வான்சரத்தால்பந்தலிட்டான்
வருணபகவானும வந்துமழைபொழிந்தான்

வெள்ளமாய்த்தான்பெருக வேணமழைபொழிந்தான்
அர்ச்சுனனைவளர்த்தின அக்கினிக்குச்செயமில்லை
வருணபகவானும் மனதுமிக்குளிர்ந்து
சந்தோஷப்பட்டானே தார்விசயனர்ச்சுனன்மேல்
எனினும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
வருணன்கிருத்த வாள்விசயன்கைகொடுத்தான்
வாங்கியேவாள்விஜயன் வருணனுக்கேதுசொல்வான்
ஆரைப்பகீர்வந்தீர் ஆரதுசெப்புமென்று
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வருணராசன்
பரமசிவனார் அனுப்பினார்வந்தேனென்றான்
எழில்விஜயாவுனைசெயிக்க என்னால்முடியாது
ஈசனார்தன்தமக்கு இவ்வார்த்தைசொல்லப்போறேன்
ஆனால்வருணரேநீர் அரனுக்கெடுத்துரையும்
கோடிசரணமும் கும்பிட்டேனென்றுசொல்லும்
அகச்சாடல்செய்வதேனோ அர்ச்சுனன்மேல்கோபமேனோ
கடிதியேவந்தெனக்கு காட்சிதரச்சொல்லுமையா
போய்வாருமென்று பொட்டெனவேசரணமிட்டான்
வாய்மைவகமாகவே வருணராசன்வந்துவிட்டான்
ஆதிசிவனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டார்
அர்ச்சுனனைத்தானேசெயிக்க ஆராலுமுடியாது
உமைபர்பிரானுமே உம்மாலேமுடியாது
அத்தனைக்கும்வல்லபிரானையின்றுவந்தேன்
கோறிசவாக்கனைதீர் கொடுக்கனுமப்புமீஸ்வரரே
என்றதுகேட்டு ஈஸ்வரனார்கோபமானார்
வாள்விசயன்தன்னுடைய மனதுமடக்கழிக்கிறேன்பார்
கழுகுகளுங்கூளிகளும் படைக்கியேயுண்டுபண்ணார்
அருச்சுனன்பாக்கியத்தை அடக்கனும்பண்ணுமென்றார்
கல்விப்பிடுங்கவே கருகியேகொல்லுமென்றார்
இமையோர்பிரானும் இன்னமேதண்டுபண்ணார்
கருவண்டுசெவ்வண்டு கணக்கில்லாதுண்டுபண்ணார்
கொட்டுகின்றகுளவியை கோடியதுண்டுபண்ணார்
இந்திரமகனுடலை துளையாய்த்துளையுமென்றார்
அரைக்கணநாழிகையில் அர்ச்சுனனைக்கொல்லுமென
மகாதேவர்சொல்லருள வருகுதுதேனீகள்தான்
குளவிகளும்கூளிகளும் கூட்டமாய்வருகுதங்கே
கணமோசம்வருகுதென்று கரியமால்தானிருந்து
அர்ச்சுனராசனண்டை அதிரமயோடிவந்தார்
கண்டபா அர்ச்சுனரே கழுகுகள்வருகுதடா
குளவிகளும்கழுகுகளும் கூளிகளும்வண்டுகளும்
அநேகம்வருகுது அங்கத்தினைப்படுத்த
எச்சரிக்கையாகவே இருங்காணுமர்ச்சுனரே

என்றதுகேட்டு இளசேனைதானுரைப்பான்
அடியேனைச்சேர்ந்தோரும் ஐயப்பெருமானே
உன்வலிமையாலே உம்பர்புரம்வந்தேனே
எந்தவிதத்திலேயும் ஈடேற்பாருமையா
வணங்கிச்சரணம்பண்ணும் மாயப்பெருமானே
தானியனாங்கவரும் சந்தோஷப்பட்டாராம்
கழுகுகளுங் கூளிகளும் கவ்விச்சண்டைகொண்டாலும்
அருச்சுனன்தேகத்துக்கு அழிவில்லைசெயிருக்க
என்றுவரமளித்து எம்பெருமான்போய்நடந்தார்
வந்துபிடுங்கிற்று வான்விஜயன்தேகமெல்லாம்
சல்லடைக்கண்போல் சமமாய்த்துளைபடுத்தும்
எப்போதும்போல ஏற்படுத்தாரேயெல்லாம்
கைகள்நகம்பேர்த்து கூர்பல்லுங்கூர்மழுங்கி
மூக்குகள்தானொடிந்து முண்டங்களாய்போகுது
ஆதிசிவனருகில் அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கழுகுகள்முறையிடும்
எங்களாலானமட்டும் எழில்விஜயன்தேகமதை
சல்லடைக்கண்களைப்போற் சதையைத்துளைத்திடுவோம்
சதையைத்துளைத்திடுவோம் சதைகளைப்பிடுங்கிடுவோம்
குப்பல்குப்பலாகத்தான் குவித்தபோமாங்கிஷத்தை
குவித்தநாழிகைக்குள் கூடிவிடுதேகமதாம்
துளைத்தநாழிகைக்குள் தோன்றுமுடல்போல்
பின்னுஞ்சதைகவ்விப் பிடுங்கியெரித்திடுவோம்
அருச்சுனன்தேகமதை அழித்தோம் அழியவில்லை
கடித்தபல்லுங்கூர்மழுங்கி கைகள்நகம்போய்த்துதையா
எங்களால்முடியாது இளவிஜயனைச்செயிக்க
ஆராலுமுடியாது அருச்சுனனைச்செயிக்க
கோரினவரத்தைக் கொடுத்துவிடும் ஆண்டவரே
அவ்வார்த்தைகேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
எத்தனைநாள் தவசிருந்து என்னென்னகேட்டபேறோ
என்றுபரசிவன் இருந்தார்சிம்மாசனத்தில்
கற்பூரமண்டபத்தில் கர்த்தர்கொலுவிருந்தார்
மாயன்பெருமானும் மறுபடியுமோடிவந்தார்
அருச்சுனைபார்த்திபா ஆதிசிவன்மோசஞ்செய்தார்
கற்பூரக்கொடிமுடியில் கர்த்தர்கொலுவிருந்தார்
கற்பூரக்கொடிமுடியைக் கணையாற்றொருத்திவிட்டால்
கலகத்தைச்செய்துவிட்டால் காட்சிகொடுத்திடுவார்
என்றதுசொல்லி எம்பெருமான்போய்நடந்தார்
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினிபாணமதை அருச்சுனனுச்சரித்து

மந்திரத்தை உச்சரித்து மண்டபத்தைக் கொளுத்துமென்று
மார்புரை வாங்கியே தோள்புளகிட்டுவிட்டான
வந்துபாணம் மகாதேவர் மண்டபத்தில்
கற்பூரமண்டபத்தைக் கடுகிகொளுத்திடவே
மண்டபந்தானெரிய மகாதேவர்பார்த்துவிட்டார்
பார்த்தீரோமாமாரே பார்த்திபன் தன்னுடைய
எல்வீட்டைக்கொளுத்திய வேணமாய வாங்கவந்தான்
இப்படிசெய்தவர்களெவர் சரையுங்காணேனே
சதுர்புசமட்டும் சகலம்பண்ணுவா
அருச்சுனன்றன் மைந்து அரியவரந்தருவரில்லை
கற்பூரமண்டபத்தைக் கடுகியமட்டெழுந்து
சாம்பிராணிமண்டபத்தில் சாமிவந்துகொலுவிருந்தார்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாய்க்கொளுத்துமென்றார்
சொல்லிடக்கூடாதே சுவாமிபெருமானும்
மறுகாலருச்சுனனும் மகிழ்வாகத் திரும்பி
அக்கினியஸ்திரத்தை அருச்சுனன் தூக்கிவிட்டான்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாயுருக்கிடுது
கண்டார்மகாதேவர் அதிசயமேதுசொல்வார்
கண்மயக்கமோ மகாதேவர்களை கண்டுமையன் ஆண்மையகேளா
எல்வீட்டைக்கொளுத்திய வேணமாய வாங்கவந்தான்
இந்த ஆண்மையுள்ளவனை எங்குமே காணறியேன்
வெண்ணீறுமண்டபத்தில் விமலரும்போயிருந்தார்
பரமனைப்பெருமானும் பையப்போய்நின்று
அர்ச்சுனன் பார்த்திபனார் அதிமோசம்வந்ததடா
விபூதிமண்டபத்தில் மேவமரும்வந்திருந்தார்
அப்பெரியமண்டபத்தை அமுக்கிப்போடுமென்றார்
அவ்வார்த்தைசொல்லி அர்த்தமாகிப்போய்நடந்தார்
வில்லினைத்தானெடுத்து விற்கணைத்தொடுத்தான்
வருணபாணம் வாயுதமஸ்திரத்தை
மந்திரமாயமிட்டு மச்சினன் மார்புரை
வந்துவிழுந்து மகேசன் வெண்ணீறுமண்டபத்தில்
வானமழைபோல வந்துபொழிந்திடுதாம்
வெண்ணீறுமண்டபமும் மெத்தக்கரைந்திடவே
கண்டார்மகாதேவர் கண்கொள்ளாக்கோபமுடன்
ஆயனபெருமானே அருச்சுனன் ஆண்மைதனை
கண்டீரோமாமாயவரே காண்டீபன் ஆண்மைதனை
எத்தனைமண்டபத்தை இப்படிவாருவேனே
இப்படிப்பட்டவர்க்கு எப்படிவருவேனே
இங்கிருந்தோமானால் இப்படிக்குப்பண்ணுகிறான்
பாதாளமண்டபத்தில் பாய்ந்திடப்போகவென்று
எழுந்தார்மகாதேவர் எல்லோருங்கூடவர

அந்தச்சமயத்தில் அரிராமரோடிவந்து
அருச்சுனபார்த்திபா அதிசமோசம்வந்தது
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போனார்
போய்விட்டாரானால் பிற்பாடுகாணொணாது
காணக்கிடையாது சர்த்தருடசேர்வை
போகாமலேதடுத்தால் பெருமானைக்கண்டிடலாம்
என்றதுசொல்லி எம்பெருமாள்போய்நடந்தார்
மாயவனார்போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
காண்டீபன்வில்வளைத்து கணையெடுத்து உச்சரித்தான்
கடிகிமறித்துவிடும் என்றுகணைதொடுத்தான்
வந்துவளைந்தது வாள்விசையன்விட்டபாணம்
மகாதேவர்முன்பாக வளர்ந்ததுஅக்கினிபோல்
முக்கண்ணுடையவரை முன்னேதடுத்ததுகாண்
கண்டார்பரமசிவன் கண்கொள்ளாக்கோபமுடன்
கண்டீரோதேவர்களே காண்டீபன் ஆண்மைகளை
இப்படிப்பட்டவற்கு எப்படிவரங்கொடுப்பேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தேவரெல்லாம்
தருமர்தம்பி அருச்சுனற்கு சமர்த்துகள்மெத்தவுண்டு
இவருடனெதிர்த்தவர்கள் எவரும்பிழைப்பதில்லை
காட்சிதந்தாலல்லாது கனமோசம்வந்துவிடும்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்ஈஸ்பரரும்
அருச்சுனன்சமர்த்துகளை ஆண்மைகளைக்காணுகிறேன்
தவசுநிலைக்கம்பமதை தலையோடழிக்கிறேன்
என்றுபரமசிவன் ஏனத்தானழைத்து
எமதர்மராசரேநீர் ஏனம்போல்வடிவெடுத்து
அருச்சுனன்தன்னருகில் அபயமிட்டுஓடுமென்றார்
கடிகியனுப்பினார் கடவுளுமமலனையநீக
எமதர்மராசன் ஏனம்போல்வடிவெடுத்து
பன்றிவடிவெடுத்து பார்த்திபன் அருகில்வந்தான்
அபயம்அபயமென்று அழுதுபுலம்பிவாரான்
அபயமென்றசத்தம் அருச்சுனன்தான்கேட்டு
அபயக்குரல்கேட்டால் ஆதரிக்கவேணுமென்று
அலகம்புஅஸ்திரத்தை அருச்சுனன்விட்டுவிட்டான்
காட்டுப்பன்றிதன்னையுமநீ கம்பத்திலேகட்டுமென்றான்
சந்திராபமிட்டு வாங்கினனருச்சுனனும்
வந்ததுஅஸ்திரந்தான் வளைந்துமேகட்டிது
கம்பத்துடனேதான் கட்டியேபோட்டது
கட்டுண்டான்காலன் காண்டீபன் தன்சரத்தால்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனெழுந்தார்
மெத்தப்பெரியவராய் வேடவடிவெடுத்தார்
பிரமதேவன்தானும் பெரியதொருவேடனானார்

விக்கினவிநாயகனார் வேடர்வடிவெடுத்தார்
சூரர்குலம்வேரறுத்த சுப்ரமண்யர்வேடனானார்
குமாரபதியாளும் அங்கபிரான்வேடரானார்
அடியனந்தமாயவரும் அங்கேஒருவேடனானார்
அர்ச்சுனனைவெல்லவென்று அனைவரும்வேடனானார்
ஈஸ்வரியுமானமைத்து இப்போசமையமென்றார்
ஈஸ்வரியான்தன்னுடனே எழுபேர்வேடனானார்
வானார்வடிவெடுத்து வாள்விஜயன்தன்னருகே
காற்செருப்புந்தோல்குல்லாவும் கையில்துப்பாக்கிகளும்
மான்வலையுஞ்சில்லாக்கோல் மருந்துகேப்குண்டுகளும்
ரெட்டைகுண்டுதுப்பாக்கி நேரிசமுப்தோளில்வைத்து
சின்னவேடன்பெரியவேடன் சிவனார்கிழவேடனானார்
பொன்னான்நமுக்கடித்து புறப்பட்டார்வேடரெல்லாம்
மற்றுமுள்ளதேவதைகள் வயிரவனார்வடிவெடுத்தார்
கருநாயுஞ்செந்நாயுங் கணக்கில்லாநாய்கள்வர
காட்டைவளைத்தார்கள் கருநாயைச்சுத்திவிட்டார்
அம்புவில்லாயுதமும் ஆண்டவனார்கைபிடித்து
வானார்கள்வேடரெல்லாம் வளைத்துத்துரத்தியல்லோ
அத்தண்டவேடுவரும் அர்ச்சுனனருகில்வந்து
ஆர்காணுஞ்சங்கமரே அறிவைப்படைத்தவரே
புத்திராய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
நீரப்படித்தவரே தெளிவாய்ந்தசங்கமரே
ஏழைநன்றாய்வேடுவனுன் எட்டுநாள்காத்திருந்தேன்
காத்திருந்திவ்வேனமதைக் கணையாலேஎய்துவிட்டான்
காயம்பட்டேனம் கடிகியேவந்ததிங்கே
ஏனம்வந்தசாலைபிது இப்போதடிபிடித்து
அடிபிடித்துவந்தோநாம் ஆனதொருசங்கமரே
ஐம்பத்துடனேநீர் கட்டிவைத்தகாரியமேன்
பரியோடிருக்கிறோம் பன்றிதனைவிட்டுவிடும்
பிள்ளையுங்குட்டிகளும் பெரும்பசியாய்புலம்புகிறோம்
கட்டவிழ்த்துவிட்டுவிடும் கடுகப்புசித்திடுவோம்
என்றுசொல்லிக்கொண்டு ஈஸ்வரனார்தான்வரவே
சாண்டியபனருச்சுனனுங் கடுகியேஏதுசொல்வான்
இவத்தியானமாகவே சிலைவிஜயனேதுசொல்வான்

ஆடாவேடுவனே அப்புறத்தேபோய்விடுங்காண்
அபயக்குரல்கேட்டால் ஆதரிப்பேனல்லாமல்
இனிமேல்விடுவேனென்று எண்ணாதேஉன்மனதில்
பன்றியைத்தின்றுவே பசியாறிப்போவாயோ
குழந்தைக்குமுந்தனுக்குங் குலத்தார்க்கும்போதுமோகாண்
தன்னைப்போல்சிவன்களை தான்கொல்லஎண்ணுவாரோ
சிவனுரைநோக்கியே செய்கிறேன் தவசுநிலே
எதிரிட்டிக்கொள்ளாதே இடையுங்கள்வேடுவரே
அரகரா அரனேயென்று அடித்தான்செயகண்டியை
சம்போசிவனேயென்று தொனித்தானேசங்குதனை
ஆதிசிவனும் அர்ச்சுனர்க்குஎதுசொல்வார்
எத்தனைசொன்னாலும் இரங்கிலையோவுன்மனது
தருமம்பிழைத்தாக்கால் சாமிவந்துதுணையாவார்
வயிறுபசிதீர்த்தாக்கால் மகதேவர்துணையாவார்
உன்-தாயார்தகப்பனுக்குந் தமையற்குந்தம்பிமார்க்கும்
ஒருகோடிமோட்சமுண்டு உச்சாகுஞ்செய்யுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனரேதுசொல்வார்
ஒருகாலுரைத்தேனே மறுகாலுரைப்பேனோ
தவசுநிலேயினிலே சத்தங்கள்போடாதே
சந்திரசூரியர்கள் தவசுநிலேதப்பினாலும்
காலம்புரண்டு கலியுகம்வந்தாலும்
நறுக்கிபிழிந்துஎன்னை நரகத்திற்போட்டாலும்
வாயாரச்சொன்னசொல்லு மறந்துவிடப்போறதில்லே
ஆதரிப்பேனல்லாமல் அலேயவிடப்போறதில்லே
மறுவார்த்தைபேசாதே வல்லுயிரைவாங்கிடுவேன்
எதிரேவரவேண்டாம் இடையவில்லும்வேடுவரே
அரகரா அரனேயென்றான் ஆனமேலேதியானமாளுஞ்
அப்போதுபரமசிவன் அர்ச்சுனற்குஎதுசொல்வான்
நான்-ஏழையன்றோசங்கமரே என்னைமிரட்டுகிறாய்
என்னதுரத்திவிட்டேன் பன்றியைத்தின்னவென்றோ
என்னைமிரட்டுகிறாய் இவ்வார்த்தைதானறிவேன்
நான்போவேனென்று எண்ணாதேஉன்மனதில்
ஆறுபேர்வேடுவர்கள் அருங்கிளியாள்வேடுவச்சி
உத்தமரேநீயொருவன் வுகந்துமேகூடியல்லோ
பன்றிதனைச்சுட்டு பங்கிட்டுக்கொள்ளுவோம்வா

பன்றுபோட்டுத்தின்று பசியாறிக்கொள்ளுமென்றார்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும்
ஜாதிக்குத்தக்கபுத்தி தானிருக்கும்வேடருக்கு
என்றுசொல்லவேடரும் ஏதுசொல்வாரப்போது
ஆண்டிப்பயலுக்கு அறிவுகிடையாது
பசிக்குதென்னவேண்டி பன்றிமேலம்புதொட்டேன்
தப்பித்துவோடிவா கம்பமதிற்கட்டவோமோ
கிழுபிராங்கிணாடா கேடுகெட்டஜங்கமனே
என்சமர்த்தும்உன்சமர்த்தும் இப்போதெரியுமடா
சண்டைக்குவாடாநீ சமர்த்துள்ளசங்கமனே
என்றவுடன்கப்பர்விட்டு இறங்கினான்வால்விசையன்
வால்விசையன்தன்முதுகில் மட்சரேகைபார்க்கவென்று
பரமசிவன்வந்து பார்த்தனுடன்சண்டைபண்ணார்
ஆண்டவனென்றறியாமல் அடித்தான்காண்வில்லாலே
பரமருக்கீழ்விழுந்து பார்த்தனையெடுத்துக்கொண்டார்
பார்வதியாள்பார்த்தனை பார்த்தனிடமட்சரேகை
பார்த்தீபனென்று பார்வதியாள்பேர்கொடுத்தாள்
பாசுபதாஸ்திரம் பரமருந்தான்கொடுத்தார்
அநேகவரம்பெற்று அர்ச்சுனனுந்தான்வாரான்
அண்ணனிடம்வந்து ஆசையுடனுரைத்தான்
பன்னிரண்டுவருஷமும் பாரவனந்திரிந்து
ஐவர்பஞ்சபாண்டவரே ஆரணியம்விட்டுநீங்கள்
அக்கியாதவாசம் அருந்தபசுசொல்லுமென்று
இச்சையுடனுரைத்து எம்பெருமாள்பயணமானார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார
துவாரகாபுரிநோக்கி சுவாமியவர்போகலுற்றார்
அப்பால்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டல்லவோ
பரமருடதன்தயவால் பன்னிரெண்டுவருஷஞ்சென்று
வனவாசமேதிரிந்து வாறார்கள்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டல்லவோ
நாடேவருகிறார் ராமருடன்தயவால்
இந்தக்கதையிலே எழுத்துப்பிழையிருந்தால்
தப்புபிழைதிருத்தி தயவுபண்ணிரட்சிக்கவும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போல்குசிக்கப் பாரில்மிகத்தான்வாழி

மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியாள்வேத முனிவர்பலருந்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வாமனித்தாரிவ்வானோர்.

விருத்தம்.

இப்பெருங்கதைதனை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர் பொருள்விரித்திசைத்தோர்
செப்பெருமன்பாற் கேட்டுளோர்தன்பேர்
செப்பினோர்தீமையிற்றீர்ந்தே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைந்தீர்க் காயுளுமுளராய்
ஒப்பருங்கதியி னிலைபெறவிளங்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

பஞ்சபாண்டவர்வனவாசம்.

முற்றிற்று.

